பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 தை 17 சனிக்கிழமை (31-01-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:66

சர்வதேச சமூகத்தின் நிபந்தனைகள் தளரும் அறிகுறி!

# பேச்சுக்கள் தொடராத போதிலும் உதவிகளை வழங்க ஆலோசனை

## தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசிய பின் நோர்வே அமைச்சர் ஹெல்கிஸன் தகவல்

ஒஸ்லோ,ஜனவரி31

**இலங்கைக்கு உதவி வழங்குவதற்கு, இலங்கையில் சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் காணப்படவேண்டும் என்று உதவி வழங்கும் நாடுகள் விதித்திருக்கும் நிபந்தனைகளைத் தளர்த்த நோர்வே விரும்புகிறது. இலங்கையில் சமாதானப் பேச்சுக்கள் தற்பொழுது நடைபெறாதபோதிலும், போர்நிறுத்த உடன்படிக்கை தொடர்ந்து கடைப்பிடிக்கப்படுவதும் அதன்மூலம் சமாதான முயற்சிக்கான வாய்ப்பு நீடிப்பதுமே நோர்வேயின் இந்த நிலைப்பாட்டுக்கான காரணமாகும்.**

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் இத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டிருக்கும் விடுதலைப் புலிகள் குழுவின் தலைவரான புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை கடந்த வியாழனன்று ஒஸ்லோவில் சந்தித்து நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்ஸன் குழுவினர் பேச்சு நடத்தினர். இப்பேச்சுக்களை அடுத்து நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலே பிரதி அமைச்சர் ஹெல்கிஸன் மேற் கண்ட தகவலைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் பிரதமர் ரணிலுக்குமிடையிலான அதிகாரப் போட்டிக்கு மத்தியிலும் இரண்டு ஆண்டுகளாகப் போர்நிறுத்தம் நிலைத்திருப்பதாகக் கூறிய நோர்வே பிரதிய மைசசர் ஹெல்கிஸன், இலங்கைக்கு அதிகரித்த பொருளாதார அபிவிருத்தி உதவிகள் வழங்கப்பட்டாலேயே சமாதான முயற்சியையும் போர்நிறுத்தத்தையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும் எனவும் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் எதிர்வரும் பெப்ரவரி 17ஆம் திகதி வாஷிங்ரனில் நடைபெறும். அமெரிக்க பிரதி ராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் நடத்தும் இக்கூட்டத்தில் உதவி வழங்கும் பிரதான நாடுகளான ஜப்பான், ஐரோப்பிய யூனியன் நாடுகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொள்வர். இலங்கையின் உதவித் தேவைகள் குறித்து அங்கு ஆராயப்படும்.

இலங்கையில் சமாதானப் பேச்சுகள் தடைப்பட்டுள்ளபோதிலும், விடுதலைப் புலிகளுக்கும் அரசுத் துருப்புகளுக்குமிடையே போர்நிறுத்தத்தை

(16ஆம் பக்கம் பார்க்க)



நேற்றுமுன்தினம் ஒஸ்லோவில் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்ஸனை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் சந்தித்த போது....

### மனோ - மலிக் குழு நேற்றும் கூடவில்லை

கொழும்பு,ஜன.31

மனோ - மலிக் உயர்மட்டக் குழுவின் சந்திப்பு நேற்றும் இடம்பெறவில்லை. ஜனாதிபதி தரப்பிலிருந்து இச்சந்திப்புத் தொடர்பாக சாதகமான பதிலேதும் கிடைக்கவில்லை என்று ஐ.தே.கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதியின் பிரதம ஆலோசகர் மனோ தித்தவெல, ஐ.தே.க. தவிசாளர் மலிக் சமரவிக்கிரம ஆகியோர் தலைமையிலான அதிகாரிகள் மட்

(16ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவின் தலைவர் புருகோவ்டே நாளை பதவியேற்கிறார்

கொழும்பு,ஜன.31

இன்று கொழும்புக்கு வரும் கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் புருகோவ்டே நாளை உத்தியோகபூர்வமாகத் தனது பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வார்.

கண்காணிப்புக் குழுவின் தலைமையகம் இதனை அறிவித்துள்ளது.

2002ஆம் ஆண்டு மார்ச் 2ஆம் திகதி முதல் 2003ஆம் ஆண்டு மார்ச் 6ஆம் திகதிவரை இங்கு கண்காணிப்புக் குழுத்தலைவராகப் பணியாற்றிய புருகோவ்டே தாயகம் திரும்பிய பின்னர் ட்ரிக்வே ரெலிவ்சன் புதிய தலைவராக நியமிக்கப்பட்டார்.

மிகுந்த சர்ச்சைக்குள்ளான இவரை உடனடியாக பதவி நீக்கிவிட்டு வேறொருவரைக் கண்காணிப்புக் குழுத் தலைவர் பதவிக்கு நியமிக்கும்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நோர்வேப் பிரதமருக்கு கடிதம் எழுதியிருந்தார்.

தனது பதவிக்காலம் முடிவடைந்ததையடுத்து ரெலிவ்சன் தாயகம் திரும்பினார். தற்போது கண்காணிப்புக்குழுவின் முன்னாள் தலைவரே அப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.(ம)

## பெப்.4ஆம் திகதி நள்ளிரவு நாடாளுமன்றம் கலைப்பு?

நாடாளுமன்றம் எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி அல்லது 5ஆம் திகதி கலைக்கப்படும் என்ற செய்தி நேற்றுக் கொழும்பு நகரில் பரபரப்பாகப் பரவியது.

இலங்கையின் 56ஆவது சுதந்திர தினமான 4ஆம் திகதி புதன்கிழமை நள்ளிரவு 12 மணிக்கு ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அறிவித்தலை வெளியிடுவார் என்று எதிர்க்கட்சி வட்டாரங்களிலிருந்து தகவல்கள் வெளியாகின.

சுதந்திரக்கட்சியின் முக்கியஸ்தரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான அநுராபண்டார நாயக்க எம்.பி. கடந்த வியாழனன்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போது ஜனாதிபதி உரிய நேரத்தில் நாடாளுமன்றத்தைக் கலைப்பார் எனத் தெரிவித்திருந்தார்.

### படையினர் விடுவிப்பு!

தென்மராட்சி,ஜன.31

2001ஆம் ஆண்டு அல்லாரைப் பகுதியில் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான பரராஜசிங்கம் பரமேஸ்வரன் என்ற இளைஞனின் வழக்கில் சந்தேக நபர்களான 7 இராணுவத்தினரும் நேற்று சாவகச்சேரி நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டனர்.

சட்டமா அதிபரின் பணிப்புக்கு அமையவே சந்தேகநபர்களான இராணுவத்தினர் விடுவிக்கப்பட்டனர்.

இரவுவேளை அல்லாரை முகாம் பகுதியில் நடமாடிய சமயம் இந்த இளைஞன் படையினரால் சுடப்பட்டார் என்று கூறப்படுகிறது. அவர் ஒரு மனநோயாளி என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

## மக்கள் வாழ்வைக் குலைக்கும் வெடிகளைத் தடைசெய்யுங்கள்

### புலிகளிடம் பேராசிரியர் தயா சோமசுந்தரம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.31

பட்டாசு கொளுத்தும் கொண்டாட்டமானது, மக்கள் மத்தியில் பெரும் ஆபத்தினையும் பயத்தினையும் ஏற்படுத்துகின்றது. எனவே, தரைவழியாக வரும் வெடிகளைத் தடை செய்வதன் மூலமோ அல்லது அவற்றிற்கான வரிகளை உயர்வாக விதிப்பதன்மூலமோ அவற்றின் வருகையைக் கட்டுப்படுத்தி மக்களின் நலனைப் பேணவேண்டும்.

- இப்படிக் கோரியுள்ளார் உள மருத்துவ நிபுணர் பேராசிரியர் தயா சோமசுந்தரம்.

விடுதலைப் புலிகளின் ஆயப் பகுதிப் பொறுப்பாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

தற்போது நிலவிவரும் சமாதானச் சூழலில் (16ஆம் பக்கம் பார்க்க)

மீளக்குடியமர அனுமதிக்கக் கோரி

## வலி.வடக்கு மக்கள் சுதந்திர தினம் முதல் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம்

வலி.வடக்கு,ஜன.31

தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர அனுமதிக்குமாறு கோரி வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழும் மக்கள் எதிர்வரும் 4ஆம் திகதி புதன் கிழமை முதல் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் சமாசக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது. இக் கூட்டம் நேற்று மாலை தெல்லிப் பழையில் நடைபெற்றது.

தமது சொந்த இடங்களில் தாம் மளக்குடியமர்வதற்கு வசதியாக இராணுவத்தினர் அங்கிருந்து விலகி வழியேற்படுத்திக் கொடுக்க வேண்டும் எனக் கோரி இப்போராட்டத்தை

(16ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை-ரஷ்ய இராணுவக் கூட்டுறவு ஒப்பந்தம் நேற்றுக் கைச்சாத்தானது

கொழும்பு,ஜன.31

இலங்கை - ரஷ்ய அரசுகளுக்கிடையில் இராணுவக் கூட்டுறவு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் அரசின் சார்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத்தும், ரஷ்ய அரசின் சார்பில் அந்நாட்டுப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் மிக்னல் ட்ருமித்தும் கைச்சாத்திட்டனர்.

இந்த ஒப்பந்தத்தின் கீழ், இலங்கைக்குத் தேவையான யுத்த தளபாடங்களை ரஷ்யா வழங்குவதுடன் இலங்கையின் பாதுகாப்புப் படையினருக்கு பயிற்சிகளையும் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அத்துடன், தொழில்நுட்ப ரீதியான பயிற்சிகளையும் இலங்கைப் படையினருக்கு வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

## சங்கரியின் வழக்கு: 11ஆம் திகதி தீர்ப்பு

கொழும்பு,ஜன.31

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கூட்டங்களைத் தம்மைக் கலந்தாலோசிக்காமல் கூட்டுவதற்கு எதிராக வீ.ஆனந்தசங்கரி தாக்கல் செய்த மனுவின் மீது எதிர்வரும் 11 ஆம் திகதி கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும்.

கட்சியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன், சிரேஷ்ட உபதலைவர் ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோருக்கு எதிராக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நேற்று இவ்வழக்கின் விசாரணைகள் பூர்த்தியடைந்தன. மனுதாரரின் கலந்தாலோசனையின்றி கட்சியின் கூட்டங்களைக் கூட்டுவதற்கு விதிக்கப்பட்டிருந்த இடைக்கால தடை உத்தரவை அடுத்த 11ஆம் திகதிவரை நீடித்த நீதிபதி, வழக்கின் தீர்ப்பு அன்று வழங்கப்படும் என்று அறிவித்தார்.

உரும்பிராய் மாணவி மர்ம மரண வழக்கு

## விடுவிக்கப்பட்ட சந்தேக நபர் பொலீஸாரால் மீண்டும் கைது!

யாழ்ப்பாணம்,ஜன.31

உரும்பிராய் சந்திரோதய வித்தியாலய மாணவியின் மர்ம மரணம் தொடர்பான வழக்கில் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட சந்தேக நபர் மீண்டும் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

2002ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 27ஆம் திகதி உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலைக் கிணற்றில் இருந்து 10 வயதுச் சிறுமியான செல்வராசா துவாரகா சடலமாக மீட்கப்பட்டார். இக்கொலை தொடர்பாக பாடசாலைக் காவலாளி தில்லையம்பலம் ரமணன் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். அவருக்கு எதிராகப் போதிய சாட்சியங்கள் இல்லாத காரணத்தால் அவரை யாழ். நீதிமன்றம் கடந்த 8ஆம் திகதி விடுவித்திருந்தது.

இந்தக் கொலை தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட யாழ். பொலீஸார் போதிய சாட்சியங்கள் கிடைத்ததை அடுத்து சந்தேக நபரை மீண்டும் கைதுசெய்தனர். நேற்று அவர் யாழ். நீதிமன்றத்தில் மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

சந்தேகநபரை எதிர்வரும் 12ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட மேலதிக நீதிவான் வழக்கு விசாரணைகளை அதே தினத்திற்கு ஒத்திவைத்தார். (ம-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

7 மா.சபைகளுக்கு ஏப்ரல் கடைசிச் சனியில் தேர்தல்

# பெப்ரவரி மூன்றாம் திகதி நாடாளுமன்றத்தில் சட்டமூலம் விவாதிக்கப்பட்டு உடன் நிறைவேறும்

கொழும்பு,ஜன.31

எதிர்வரும் ஏப்ரல் மாதக் கடைசி வாரத்தில் வடக்கு - கிழக்கு மாகாண சபை தவிர்ந்த ஏனைய ஏழு மாகாண சபைகளுக்குமான தேர்தல் ஒரே தினத்தில் நடத்தப்படும். இது தொடர்பான திருத்தச்சட்ட வரைவு எதிர்வரும் 3ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் எல்லா அரசியல் கட்சிகளும் இச்சட்டமூலத்திற்கு இணக்கம் தெரிவித்திருப்பதால் இரண்டு மணி நேர விவாதத்தின் பின்னர் சட்டமூலம் நிறைவேற்றப்படும்.

இதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கிவிட்டது.

புதிய திருத்தத்தின் படி ஏழு மாகாண சபைகளுக்குமான தேர்தல் ஏப்ரல் மாதக் கடைசியில் வரும் சனிக்கிழமை ஒன்றில் இத்தேர்தல் நடத்தப்படும்.

வடமேல் மாகாண சபையின் ஆயுட்காலம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முடிவடைகிறது. எனினும், ஏனைய ஆறு மாகாண சபைகளையும் கலைப்பதற்குஅந்தந்த மாகாண சபைகளின் முதல் அமைச்சர்கள், ஆளுநர்களுக்குச் சிபார்சு செய்வார்கள்.

ஏழு மாகாண சபைகளையும் எதிர்வரும் 8ஆம் திகதி கலைக்க அரசும் எதிர்க்கட்சிகளும் இணக்கம் தெரிவித்திருக்கின்றன என அறியப்படுகின்றது.

### பரிசளிப்பு விழா

வடமராட்சி,ஜன.31

அல்வாய் அம்பாள் வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு அதிபர் அ.தேவச்சந்திரன் தலைமையில் நடைபெறும். (எ-173)

# மத்திய கிழக்கிற்குச் செல்வோரின் கல்விச் சான்றிதழ்களும் பரிசோதனை!

## வலயப் பணிப்பாளர்கள் உறுதிசெய்யவேண்டும்

இலங்கையிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைவாய்ப்புக்காகச் செல்லும் தொழிலாளர்களின் கல்விச் சான்றிதழ்களைப் பரிசோதிககும் புதிய நடைமுறையொன்றினை வெளிவிவகார அமைச்சு ஆரம்பித்துள்ளது.

எனவே, வேலைவாய்ப்புக்காக வெளிநாடு செல்லும் தொழிலாளர்கள் வலயக் கல்விப் பணிப்பாளர்களினால் உறுதிப்படுத்தப்பட்ட கல்விச் சான்றிதழ்களை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளன என்று கல்வியமைச்சின் மேலதிகச் செயலாளர் இந்திராணி காரியவாசம் அறிவித்துள்ளார்.

கல்விச் சான்றிதழ்களை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தர்களின் மாதிரிக் கையொப்பங்களை வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பிவைக்குமாறு ஏற்கனவே பணிப்புரை விடுக்கப்பட்டிருந்த போதிலும், பெரும்பாலான உத்தியோகத்தர்கள் இது வரை தமது விவரங்களை அனுப்பி வைக்கவில்லை என்றும் தெரியவந்துள்ளது.

இதேவேளை, மாதிரி கையொப்பங்களை அனுப்பிவைக்காத உத்தியோகத்தர்களினால் உறுதிப்படுத்தும் கலவிச் சான்றிதழ்களை நிராகரிப்பது எனவும் வெளிவிவகார அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

இதனால், வெளிநாட்டுக்கு தொழில் வாய்ப்புக்காகச் செல்லும் தொழிலாளர்கள் தமக்கான வாய்ப்பினை இழக்க வேண்டி ஏற்பட்டுள்ளதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலைமைகளைக் கருத்திற்கொண்டு சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கல்வியமைச்சின் மேலதிகச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

உண்ணாவிரதம் தொடருகிறது

# அரச வைத்தியசாலை ஊழியர்கள் நேற்று சுகவீன லீவுப் போராட்டம்

சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் நடத்திவரும் சுகாதார சேவை ஊழியர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் அரசாங்க வைத்தியசாலைகளின் ஊழியர்கள் நேற்று சுகவீன லீவுப் போராட்டத்தில் குதித்தனர். இதனால் சகல வைத்தியசாலைகளிலும் வழமையான அலுவல்கள் பெருமளவு பாதிக்கப்பட்டன.

இப்போராட்டம் நேற்று ஐந்தாவது தினமாகத் தொடர்ந்தது. உண்ணாவிரதிகளில் நால்வரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் அவர்களுக்கு சேலைன் ஏற்றப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

எனினும், அவர்களும் உண்ணாவிரதத்தைத் தொடருகின்றனர்.

ஆஸ்பத்திரிகளில் வழமையான நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன.

சமயாசமய ஊழியர்களும் போராட்டத்தில் கலந்துகொள்ளாத சில தொழிற்சங்கங்களின் உறுப்பினர்களுடன் நேற்று வழமைபோல் கடமையாற்றினர்.

# சித்திரவதைக்கு உள்ளானோருக்கான புனர்வாழ்வு பிரதிநிதிகளின் விஜயம் இறுதி நேரத்தில் ரத்து

## காத்திருந்த பாதிக்கப்பட்டோருக்கு ஏமாற்றம்

யாழ்ப்பாணம்,ஜன.31

சித்திரவதைகளுக்கு உள்ளானோருக்கான சர்வதேச புனர்வாழ்வு இணையத்தின் யாழ். விஜயம் இறுதி நேரத்தில் கைவிடப்பட்டது.

கொழும்புக்கு வந்திருந்த இந்த இணையத்தின் பிரதிநிதிகளான அலிசி பேர்திஸ் அம்மையார், கலாநிதி மார்க் கிரட் புலொவ் ஆகியோர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவிருந்தனர்.

அவர்கள், குடாநாட்டில் அரச அதிபர், நல்லை ஆதீன முதல்வர், யாழ். ஆயர் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடவிருந்தனர்.

அரசசார்பற்ற அமைப்புக்களின் இணையப் பிரதிநிதிகளையும் அவர்கள் சந்திக்க ஏற்பாடாகியிருந்தது.

கடந்த காலத்தில் கைது செய்யப்பட்டு, சித்தரவதைக்கு உள்ளாகி விடுதலையான பலர் தமது அனுபவங்களைத் தெரிவிப்பதற்காக இணைய அலுவலகத்தில் காத்திருந்தனர்.

எனினும், சர்வதேச பிரதிநிதிகளின் யாழ். விஜயம் திடீரென ரத்துச்செய்யப்பட்டதால், அவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

கொழும்பில் கடந்த 26ஆம் திகதி முதல் தங்கியிருந்த இவர்கள் பல தரப்பட்டவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

டென்மார்க்கைத் தலைமையகமாகக் கொண்ட இந்த இணையம் சித்தரவதைக்குள்ளாவோர் பற்றி ஆராய தெரிவு செய்துள்ள ஐந்து நாடுகளில் இலங்கையும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

நீதிவான் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருக்கும்

# வழக்கை வாபஸ்பெறக் கோரும் திலங்கவின் மனு நிராகரிப்பு!

கொழும்பு,ஜன.31

கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் தனக்கெதிராகத் தொடரப்பட்டிருக்கும் வழக்கை வாபஸ் பெறும்படி இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மற்றும் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம் ஆகியவற்றின் தலைவரான திலங்க சுமதிபால தாக்கல் செய்த மனுவை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

கொழும்பு நீதிவான் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கிலிருந்து தான் கடந்த டிசெம்பர் 8ஆம் திகதி விடுவிக்கப்பட்டிருக்கும் போது மற்றொரு வழக்கு தனக்கெதிராகத் தொடரப்பட்டிருப்பதை ஆட்சேபித்தே அவர் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவை விசாரணைக்கு எடுத்த மேல் நீதிமன்ற நீதிபதி எரிக் பசநாயக்க, அப்படி ஒரு வழக்கு தொடரப்பட்டிருப்பதை தடைசெய்ய வேண்டிய எந்தத் தேவையும் ஏற்படவில்லை என்று தனது தீர்ப்பில் தெரிவித்தார்.

திலங்க சுமதிபாலவுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கை கொழும்பு மேலதிக நீதிவான் வாபஸ் பெற்று அவரை அந்த வழக்கிலிருந்து விடுதலை செய்தார்.

அதன் பின்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அவருக்கெதிராக மற்றொரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### மெய்வன்மைப் போட்டி

வடமராட்சி,ஜன.31

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் எஸ்.சேதுராஜா தலைமையில் நடைபெறும்.

இப்போட்டியில் நெல்லியடி இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் வி.எஸ்.சிவநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். திருமதி சாந்தநாயகி சிவநாதன் பரிசில்களை வழங்குவார். (எ-173)

# ரயில்வே ஊழியர் வேலைநிறுத்தம் தீரும் அறிகுறியின்றித் தொடருகிறது!

ரயில்வே ஊழியர்களின் வேலை நிறுத்தம் நேற்று நான்காவது நாளாகத் தொடர்ந்து நடைபெற்றது. ரயில்வே திணைக்களத்தை அதிகார சபையாக்கும் சட்ட மூலத்தினை வாபஸ்பெறும் படி கோரும் தொழிற்சங்கங்களின் நிலைப்பாட்டில் எதுவித மாற்றமும் இல்லை என்று தொழிற்சங்க வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

போக்குவரத்து அமைச்சரிடமிருந்து தமக்கு சாதகமான பதில் கிடைக்கவில்லை. பேச்சுக்கு அழைப்பு விடுக்கவும் இல்லை என்றும் தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, நேற்றுக்காலை 6 அலுவலக ரயில்கள் கொழும்பு கோட்டையை வந்தடைந்தன. நேற்று மாலை நான்கு அலுவலக ரயில்களைச் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததாக ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்திருந்தது.

இதற்கிடையில், ரயில்வே அதிகார சபைச் சட்டத்தை ரத்துச் செய்யும அதிகாரம் போக்குவரத்து அமைச்சருக்கு இல்லை எனவும், நாடாளுமன்றத்தில் இயற்றும் சட்டமொன்றின் மூலமே அதனை ரத்துச் செய்ய முடியும் எனவும் அச்சட்டம் குறித்து ஆராய்ந்த சட்டமா அதிபர் கே.சி. கமலசபேசன் கருத்துத் தெரிவித்திருக்கின்றார்.

### கடல்வள ஆசிரியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.31

கடல் உயிரினவளத் தொழில்நுட்பப் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். கல்விவலய அலுவலகத்திலுள்ள தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட அனைவரையும் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு பேரவையின் யாழ். மாவட்ட இணைப்பாளர் கேட்டுள்ளார். (எ-5-ரி)

### நீதிமன்ற வழக்குகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.31

யாழ். நீதிமன்றத்தில் நாளைமறுதினம் திங்கட்கிழமை நடைபெறவிருந்த வழக்குகள் அனைத்தும் எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமைக்கு மாற்றப்பட்டுள்ளதாக யாழ். நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

நாளைமறுதினம் 'ஹஜ்' பெருநாளை முன்னிட்டு பொதுவிடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளதால் அன்றைய தினம் நீதிமன்ற நடவடிக்கைகள் இடம்பெறாது. இதனால் அன்று நடைபெறவிருந்த வழக்குகளின் திகதி மாற்றப்பட்டதாக பதிவாளர் தெரிவித்தார். (ம-8)

# விவேகானந்தர் ஜயந்தி தின ஆன்மீக எழுச்சிவிழா நாளை

யாழ்ப்பாணம்,ஜன.31

சுவாமி விவேகானந்தர் ஜயந்தி தினத்தை முன்னிட்டு ஆன்மீக எழுச்சிவிழா நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு நல்லை ஆதீனத்தில் இடம்பெறவுள்ளது.

சுவாமி விவேகானந்தர் நற்பணி மன்றத் தலைவர் செல்வி சிவவதனி கோபால் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசியர் குமாரவடிவேல் கலந்துகொள்வார்.

ஆசியுரையினை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் நிகழ்த்துவார். சிறப்புச் சொற்பொழிவுகளும் இடம் பெறும்.

கலைநிகழ்ச்சிகளாக காவடி நடனம், நாடகம், புல்லாங்குழல் இசை, மகாஜனக் கல்லூரி ஆசிரியர் ந.குமரவேளின் நெறியாள்கையில் பரத நாட்டியம் என்பன இடம்பெறவுள்ளன. (ம-ரி-86)

# மத்திய கல்லூரியில் நாளை கலைப்பொருள் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஜன.31

திருமலை 'பொஷ்' நிறுவனததின் அனுசரணையுடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கைப்பணி மற்றும் அழகுக் கலைப் பொருள்களின் கண்காட்சி நாளை ஞாயிற்றுக்கிழமை 10 மணி முதல் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

இந்து கலாசார அமைச்சின் செயலாளர் து.வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ், யாழ். மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் யோ.கலைவிழி, முறைசாராக் கல்வி போதனாசிரியர் திருமதி ரூபராணி சத்தியமூர்த்தி ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வர்.

மாணவிகளால் வடிவமைக்கப்பட்ட அழகுமலர் அலங்காரங்கள், மட்பாண்ட வடிவங்கள், உட்பட பல கலைவண்ணங்கள் கண்காட்சியில் இடம்பெறவுள்ளன. மணப்பெண் அலங்காரக் காட்சியும் இடம்பெறும். (ஐ)

### இந்திய அறிஞர் சொற்பொழிவு

காரைநகர்,ஜன.31

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் தேவஸ்தான மஹாகும்பாபிஷேக தெய்வீகச் சொற்பொழிவுத் தொடரில் இன்றும் நாளையும் தென்னிந்திய தஞ்சாவூர் சேக்கிழார் அடிப்பொடி சைவசித்தாந்த, இலக்கிய கலாநிதி நடராஜன் இராமச்சந்திரன் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்.

இன்று சனிக்கிழமை மாலை 'ஆலய வழிபாடு' எனும் பொருளிலும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு 'சைவ சித்தாந்த வாழ்வியல்' எனும் பொருளிலும் அவர் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார். (ம-73)

### அப்பலோ ஆஸ்பத்திரி தகவல் நிலையம் யாழ்ப்பாணத்தில்!

யாழ்ப்பாணம்,ஜன.31

கொழும்பில் இயங்கும் அப்பலோ வைத்தியசாலையின் தகவல் நிலையம் ஒன்று இன்று சனிக்கிழமை முற பகல் 11.30 மணிக்கு யாழ்.நகரில் ஸ்ரான்லி வீதியில் திறந்துவைக்கப்படவிருக்கிறது.

அப்பலோ வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்களின் வசதி கருதி தகவல்களை வழங்குவதற்காக அமைக்கப்படும் இந்த நிலையம் இன்று முதல் தொடர்ந்து இயங்கும். (ம-3)

# நீதிவானை கொல்ல முயன்ற பாதாள உலக நபர் கைது!

கொழும்பு,ஜன.31

கல்கிசை நீதிமன்ற பிரதம நீதிவான் மொகமட் மக்சியை கொலை செய்ய முயன்ற பாதள உலகக் குழுவைச் சேர்ந்த ஒருவர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

நேற்றுமுன்தினம் நண்பகல் 12.30 மணியளவில் நீதிவான் வழக்கு விசாரணைகளை நடத்திக் கொண்டிருந்த சமயம் பச்சைச் சேர்ட்டும் கறுப்பு ரவுஸரும் அணிந்த நபர் ஒருவர் நீதிமன்றத்துக்குள் வந்து நீதிவானின் இருக்கையை நோக்கி ஓட முயன்றார். அங்கு நின்றவர்கள் பிரஸ்தாப நபரை மடக்கிப்பிடித்தனர்.

பின்னர் அந்த நபரை சோதனை செய்த பொலீஸார், அவரிடம் இருநது இரு கைக்குண்டுகள், ஒரு லைட்டர், ஒரு கஸட் ஆகியவற்றை மீட்டனர்.

பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ள அந்த நபர் பொலீஸாரால் விசாரணை செய்யப்பட்டு வருகின்றார்.

பொலீஸார் நீதிக்கு விரோதமான முறையில் தன்னை நடத்தினர் என்றும் அது குறித்து நீதிவானுக்கு முறைப்பாடு செய்வதற்காகவே தான் நீதிமன்றத்துக்கு வந்தார் என்றும்- பொலீஸ் விசாரணையில் அந்த நபர் தெரிவித்துள்ளார். (ம-3)

### பாடசாலை வளவில் கண்ணிகள் அகற்றப்பட்டன

யாழ்ப்பாணம்,ஜன.31

பண்டத்தரிப்புப் பெண்கள் வித்தியாலய வளாகத்தில் புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகளை அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் இராணுவத்தினரின் பொறியியல் பிரிவினர் அகற்றியுள்ளனர் என பலாலி படைத்தளம் அறிவித்துள்ளது.

கண்ணிகள் அகற்றப்பட்ட பின்னர் கடந்த 16ஆம் திகதி பாடசாலை அதன் நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாடசாலையில் உள்ள பழைய கட்டடத்தை இராணுவத்தின் 6ஆவது பொறியியல் படையினர் அகற்றி பாடசாலை மாதிரி வரைவு படம் தயாரிக்க உதவத்திட்டமிட்டுள்ளனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாங்கிகளுடன் இஸ்ரேலியப் படை மேற்குக் கரைக்குள் புகுந்தது!

மேற்குக்கரை,ஜன.31

ஜெருசலேமில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்குப் பழிவாங்கும் நோக்குடன் டாங்கிகள், கவசவாகனங்கள் சகிதம் மேற்குக் கரைக்குள் இஸ்ரேலியப் படை நுழைந்திருக்கிறது.

நேற்றுக்காலை திடீரென இருபதுக்கும் மேற்பட்ட டாங்கிகளுடன் இஸ்ரேலியப்படை மேற்குக்கரைக்குள் நுழைந்ததை அங்குள்ள பி.பி.ஸி. நிருபர் ஒருவர் உறுதிசெய்திருக்கிறார்.

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு அண்மையில் பஸ்ஸில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் பத்துப் பேர் கொல்லப்பட்டனர்; ஐம்பதுபேர் காயமடைந்தனர். இந்தத தாக்குதலுக்கு பாலஸ்தீனத்தின் 'அல் - அக்ஷா' மாவீரர் படையணி பொறுப்பேற்றிருப்பதையடுத்தே, இஸ்ரேலியப் படை மேற்குக்கரைக்குள் திடீரென நுழைந்திருக்கிறது.

காஸாவில் கடந்த புதன்கிழமை எட்டு பலஸ்தீனர்களை இஸ்ரேலியப் படை சுட்டுக்கொன்றது. அதற்குப் பழிவாங்கவே தற்கொலைத் தாக்குதலை நடத்தியதாக அல்-அக்ஷா கூறியுள்ளது.

தாக்குதல் நடத்திய போராளியின் பெயர் விவரங்களையும் அது வெளியிட்டிருக்கின்றது.

மேற்குக் கரையில் நிச்சயம் தேடுதல் நடத்தப்படும் என்றும், அது பாரதூரமானதாக இருக்கும் என்றும் இஸ்ரேலியப் படையின் பேச்சாளர் கூறினார் என்று அந்நாட்டு வானொலி தெரிவித்திருக்கிறது.

ஆனால், எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அவர் தெரிவிக்க மறுத்துவிட்டார் என்றும் அது கூறியிருக்கிறது.

ஜெருசலேமில் தற்கொலைத் தாக்குதல் இடம்பெற்ற பின்னர் நடந்த இஸ்ரேலிய அமைச்சரவையின அவசரக் கூட்டத்தை அடுத்தே, இஸ்ரேலியப் படை மேற்குக்கரைக்குள் நுழைந்தது என்று இஸ்ரேலிய அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார்.

பலஸ்தீனத் தலைவர் யஸீர் அராபாத் நிர்வாகமும் தற்கொலைத் தாக்குதலை கண்டிக்கிறது. ஆனால், இஸ்ரேலிய அதிகாரி ஒருவர் அரபாத்தையும் அவரது ஆதரவாளர்களையும் இத்தாககுதலுடன் தொடர்புபடுத்தி கடுமையாக விமர்சித்திருக்கிறார்.

ஜேர்மனிய மத்தியஸ்தத்தின் கீழ் பலஸ்தீன, லெபனான் கைதிகளை இஸ்ரேலிய அரசு விடுதலை செய்தபோது மேற்படி தாக்குதல் நடைபெற்றதற்கு உலக நாடுகள் பல கண்டனம் தெரிவித்துள்ளன. (ஒ)



போலந்து மற்றும் பெலாரஸ் நாடுகளில் இப்போது பனிக் காலமாகும். இரு நாடுகளுக்கும் இடையே உள்ள எல்லை பகுதியில் பாதுகாப்புப் படையினர் தங்கள் முகாமில் இருந்து குரோட்டுனா பகுதியில் உள்ள ஆற்றில் குளிக்கச் சென்றனர். ஆனால், ஆற்று நீர் உறைந்து பனிக்கட்டியாகிவிட்டது. தண்ணீர் இல்லாததால் இராணுவத்தினர் பனிப்படலத்தை அள்ளி தங்கள் உடலில் போடடுக்கொள்ளும் காட்சி.

# இந்திய நாடாளுமன்றத்துக்கு ஏப்ரல் 15இல் தேர்தல் நடக்கும்?

இந்திய நாடாளுமன்றத் தேர்தலை சந்திக்கத் தயாராகி வரும் பாரதிய ஜனதா தலைவர்கள் நேற்றுச் சந்தித்து ஆலோசனை நடத்தினார்கள். பிரதமர் வாஜ்பாய் வீட்டில் இந்தச்சந்திப்பு நடந்தது. அந்தக் கூட்டத்தில் துணைப பிரதமர் அத்வானி மத்திய அமைச்சர்கள் ஜஸ்வந்சிங், சுஷ்மாசுவராஜ், பாரதிய ஜனதா தலைவர் வெங்கையா நாயுடு, பொதுச்செயலாளர் பிரமோத் மகாஜன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பிரதமர் வாஜ்பாயுடனான சந்திப்பு முடிந்ததும் நேற்று மாலை பாரதிய ஜனதா தலைவர்கள் மீண்டும் கூடி வாக்குப் பதிவுக்கு ஏற்ற கால சூழ்நிலை குறித்து நீண்ட நேரம் விவாதித்தனர். இது குறித்து பாரதிய ஜனதா மூத்த தலைவர்களில் ஒருவர் கூறுகையில் நாடாளுமன்ற தேர்தல் ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி முதல் மே மாதம் 5ஆம் திகதி வரையிலான 3 வார கால கட்டத்தில் நடத்தப்படும் என்றார்.

அடுத்த மாத இறுதியில் தேர்தல் குறித்து தலைமைத் தேர்தல் ஆணையகம் அதிகார பூர்வமாக அறிவிக்கும் என்று அவர் சூசகமாகத் தெரிவித்தார். காங்கிரஸ் கட்சி கூட்டணி அமைப்பதில் திணறிக் கொண்டிருப்பதால் அந்தச் சிக்கல் தீரும் முன்பு எவ்வளவு சீக்கிரத்தில் அறிவிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் அறிவிக்க தீவிரமாகி வருவதாக அந்தத் தலைவர் கூறினார். (ஒ)

# தேர்தலில் விஜயசாந்தி போட்டி



இந்திய நாடளுமன்றத் தேர்தலில் போட்டியிட நடிகை விஜயசாந்தி விருப்பம் தெரிவித்துள்ளார். அகில இந்திய பாரதிய ஜனதாக்கட்சியின் மகளிர் அணித் துணைத்தலைவியாக இருக்கும் அவர், எந்தத் தொகுதி கேட்கிறாரோ, அதை ஒதுக்கி கொடுக்க பாரதிய ஜனதா தலைவர்கள் சம்மதித்துள்ளனர். அநேகமாக விஜயசாந்தி, தான் பிறந்த கரீம் நகர் மாவட்டத்தில் போட்டியிடுவார் என்று கூறப்படுகின்றது.பாரதிய ஜனதாவில் இருந்து கொண்டே தனித் தெலுங்கான மாநிலம் உருவாக தொடர்ந்து போராடப் போவதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

# அ.தி.மு.க.-பா.ஜ.க. கூட்டணியை எதிர்க்க திராவிடர் கழகம் முடிவு!

சென்னை,ஜன.31

இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் அதி.மு.க. - பா.ஜ.க. கூட்டணிக்கு ஆதரவு தருவதில்லை என்று திராவிடர் கழகம் அறிவித்துள்ளது.

இது குறித்து திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி சென்னையில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

1998இல் பா.ஜ.கவுடன் கூட்டணி சேர்ந்த அ.தி.மு.க. பின்னர் வெளியேறியது.

பா.ஜ.க.வுடன் கூட்டுச் சேர்ந்தது மிகப் பெரும் தவறு. 'இத்தவறை இனி ஒருபோதும் செய்ய மாட்டேன்' என்று பகிரங்கமாக அறிவித்தார் அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா.

ஆனால், தற்போது பா.ஜ.கவுடன் கூட்டுச் சேர்ந்து மீண்டும் அதே தவறைச் செய்துவிட்டார். இதற்காக தேர்தலில் அவர் கடுமையான விலையை கொடுக்க வேண்டியிருக்கும்.

இதேவேளை, யாரை பண்டாரம், பரதேசி என்று தி.மு.க. வர்ணித்ததோ அதே பா.ஜ.கவினருடன் 1999இல் கூட்டு சேர்ந்து மத்திய அமைச்சரவையிலும் இடம்பெற்றது. பா.ஜ.க. மாறிவிட்டது, மதச்சார்பின்மையை கடைப்பிடித்துவிட்டது என்று அதற்குக் காரணமும் கூறியது.

தி.மு.க. இருந்தால் ஆதரவு தரமாட்டோம் என்று சொல்லி தேசிய முன்னணிக்கு ஆதரவு தரமறுத்த காங்கிரஸுடன் தற்போது தி.மு.க. கூட்டுச் சேர்ந்துள்ளது. தங்கள் கூட்டணியை மதசார்பற்ற கூட்டணி என்று சொல்லிக்கொள்ள தி.மு.க. தயாராக இல்லை. இப்போதைய கூட்டணிகளும் தேர்தலுக்குப் பிறகு எப்படி மாறும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது.

இத்தகைய அரசியல் சூழ்நிலையில், நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணியை திராவிடர் கழகம் எதிர்க்கும். அதே நேரத்தில், யாருக்கு ஆதரவு என்பதை செயற்குழு, பொதுக்குழு கூடி முடிவு செய்யும்' ,என்றார் வீரமணி. (ஒ)

# கோக் - பெப்சி குளிர் பானங்களில் பூச்சி மருந்து இருப்பது உண்மையே!

## ஆய்வுக்குழு உறுப்பினர் தெரிவிப்பு

புதுடில்லி,ஜன.31

கோக் - பெப்சி உள்ளிட்ட அமெரிக்க நிறுவனங்களின் குளிர்பானங்கள் சிலவற்றில் மனித உடலுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய பூச்சி மருந்து இருப்பது உண்மை என்று இது குறித்து ஆய்வு நடத்திய இந்திய நாடாளுமன்றக் குழு தெரிவித்துள்ளது.

கோக் - பெப்சி உள்ளிட்ட குளிர் பானங்களில் பூச்சி மருந்து இருப்பதாக கடந்த வருடம் இந்தியாவில் பெரும் சர்ச்சை எழுந்தது. இதன் விளைவாக உலகம் முழுவதும் உள்ள கோக் - பெப்சி பாவனையாளர்கள் அவற்றைப் பருகுவதற்கு பின்னடித்தனர்.

இது குறித்து ஆய்வு நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கும் படி இந்திய அரசு நாடாளுமன்ற உறுப்பினர் குழு ஒன்றை நியமித்தது. அந்தக் குழுவினர் சம்பந்தப்பட்டவர்களிடம் விசாரணை நடத்தி அறிக்கை ஒன்றை தயாரித்துள்ளனர்.

அந்த அறிக்கை எதிர்வரும் 5 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது. இந்த நிலையில் மேற்படி குளிர்பானங்களில் பூச்சி மருந்து இருப்பது உண்மையே என்று ஆய்வு நடத்திய நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்சய்நிருபம் தெரிவித்திருக்கிறார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

விரிவாக நடத்திய பரிசோதனைகளில் குளிர்பானங்களில் ஆபத்தான பூச்சி மருந்து கலந்து இருப்பதைக் கண்டோம். வளர்ந்த நாடுகளில் தயாரித்து விற்கப்படும் கோக் - பெப்சியை விட இந்தியாவில் தயாரித்து விற்கப்படும் கோக் - பெப்சி அதிக பூச்சி மருந்து கலந்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. இந்தப் பாரபட்சத்தை அரசுக்கு தெரிவிப்போம். பூச்சி மருந்தால் பாதிப்பைத்தடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் சிபார்சு செய்வோம்.

நிலத்தடி நீர் மீது பழிபோட்டு தப்பிக்க நினைக்கும் குளிர்பானக் கம்பனிகள் தப்பிவிடக்கூடாது. இறுதியாக விற்பனைக்கு வரும் குளிர்பானம் உலக தரம் அளவில் இருக்கவேண்டும். அதற்கான பொறுப்பை அந்த நிறுவனங்களே ஏற்க வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது - என்று அவர் கூறியுள்ளார்.

# ஷ்வாஸ்நேகருக்கு எதிராக வழக்கு!

ஹொலிவூட் நடிகர் ஆர்னோல்ட் ஷ்வாஸ்நேகர் கடந்த ஒக்ரோபர் மாதம் கலிபோர்னிய ஆளுநர் தேர்தலில் வெற்றிபெற்றார். தேர்தலின்போது இவர் வங்கியிலிருந்து 40 லட்சம் டொலர் கடன் வாங்கினாராம். இந்தப் பணத்தை தேர்தல் பிரசாரத்துக்கு செலவிட்டார் என்றும், இதுசட்டவிதிகளுக்குப் புறம்பானது என்றும் ஜனநாயகக் கட்சிப் பிரமுகர் ஒருவர் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்.

வேட்பாளர் ஒருவர் தேர்தலில் ஒரு லட்சத்துக்கு மேல் நிதிதிரட்டவும் கூடாது. செலவு செய்யவும்கூடாது. ஆனோல்ட் விதிகளை மீறிவிட்டார் என்று நீதிமன்றம் அவருக்கு கண்டனம் தெரிவித்திருக்கிறது . அந்தப் பணத்தை உடனடியாகத் திருப்பிச் செலுத்தவேண்டும் என்றும் நீதிமன்றம் கூறியுள்ளது.

இதுபற்றி ஆனோல்ட் கூறும்போது,

"என் சொந்தச் செலவுக்காகத் தான் இந்தப் பணத்தை எடுத்தேன், உடனடியாக இந்தப் பணத்தை திருப்பிச் செலுத்திவிடுவேன்" -என்று கூறியுள்ளார்

# ஆப்கானில் வெடி விபத்து: அமெ. வீரர் 7 பேர் பலி!

ஆப்கானிஸ்தானில் ஆயுதக் குவியல் வெடித்துச் சிதறியதால் ஏழு அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டனர்; மூன்று பேர் காயமடைந்தனர்.

தலிபான், அல் கெய்டா போராளிகளிடம் இருந்து கைப்பற்றி குவிக்கப்பட்டிருந்த ஆயுதங்களே வெடித்துச் சிதறின என்று அங்குள்ள அமெரிக்கப் படைத் தலைமையகம் தெரிவிதததது.

தலைநகர் காபூலில் இருந்து மேற்காக உள்ள காவுளி என்ற பகுதியிலேயே இச்சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது.

இந்த வெடி விபத்தில் மற்றொரு படைவீரரைக் காணவில்லை என்று அங்கு நின்ற படையினர் கூறுகின்றனர். ஆனால், படைத் தலைமை இது குறித்து எதுவும் தெரிவிக்கவில்லை.

"ஆயுதங்கள் குவிக்கப்பட்டிருந்த சுற்றாடலில் படையினர் சுத்திகரிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அச்சமயமே, இந்த அனர்த்தம் நடந்துவிட்டது."

- இவ்வாறு காபூலில் உள்ள அமெரிக்கப் படைத்தலைமை வெளியிட்டிருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

**Video Digital AV Mixer WJ - AVE - 55,** நல்ல நிலையில் உள்ளது விற்பனைக்கு உண்டு. இல.351, நாவலர் வீதி, கைலாயபிள்ளையார் கோவில் சந்தி, யாழ்ப்பாணம்.(27830)

கலர்மீன்கள், புதியவகை மீன் தொட்டிகள், மோட்டார்கள், அழகுப் பொருள்கள், லவ்பேட்ஸ், கூடுகள், பூக்கன்றுகள், பூச்சாடிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 55A, அரசடி வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம். (27846)

**Yamaha RX 100 Motor Cycle (NPGJ...), Canon EOS 500 (Japan) Camera** ஆகியன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.S.றஜீந்திரன், 75, கோயில் வீதி, நல்லூர். (கந்தசாமி கோயிலிலிருந்து 500m தெற்கே). T.P.: 0777 031293. (27842)

அரிவிவெட்டி சூடடிக்கும் இயந்திரமும், நாற்று நடுகை இயந்திரமும் (**Combine Harvester & Trans Planting Machine**) நல்ல நிலையில இருப்பவை உடன்விற்பனைக்குண்டு. தொடர்பு: க.கிருபானந்தக்குருக்கள், கிராம்புவில், சாவகச்சேரி.
**T.P: 06022 12300.** (27812)

### காணி விற்பனைக்கு

பாண்டியன்தாழ்வு, நாகராஜா லேனில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சிவகாமசுந்தரி அண்ணாமலை, 36, புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம். **T.P.** 021 - 222 6889 (27790)

தாவடியில், தாவடி மானிப்பாய் வீதியிலிருந்து இரண்டாவதாக அமைந்த 3½ பரப்புக் காணி (கிணறுடன்) விற்பனைக்குண்டு. தொடர்பு: சுபாஸ்கரலிங்கம், மஞ்சத்தடி, காரைக்கால் வீதி, இணுவில். (27858)

### புறொயிலர் விற்பனைக்கு

கல்பேட்ஸ், புறொயிலர் நியாயமான விலையில் விற்பனைக்குண்டு. இன்றுமுதல் எல்லா நாள்களிலும் 12 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: S.குமரன், 227, பிறவுண் வீதி (நரியன் குன்றுக்கு அருகில்), யாழ்ப்பாணம். **T.P.** - 077 - 6180675.(27835)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்துபெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: ப.ரஞ்சன், கலைவாணி வீதி, பொற்பதி றோட், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (27840)

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

**Prima, Broiler** மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதாரமுறைப்படி உடன் சுத்தஞ்செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம் (**Electronic** நிறுவை), (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச சந்தையடி, நல்லூர். (27839)

### நாய்க்குட்டி விற்பனைக்கு

சுத்தமான **Great Dane, Doberman Pincher** நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (27838)

### கோழிக்குஞ்சு விற்பனைக்கு

பகிரா இன புறொயிலர் குஞ்சுகள விற்பனைக்குண்டு. தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. **T.P. No.** 3529, 2867. (27832)

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான **Prima, Broiler** குஞ்சுகள விலை 44/=, அதிவிசேட **Prima** பேட்டுக்குஞ்சுகள் விலை 65/=, 02.02.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். எம்மிடமும் பருத்தித்துறைக் கிளையிலும் பெற்றுக கொள்ளும் **Prima** குஞ்சுகளுக்கு **Prima** கம்பனியால் உத்தரவாதம் வழங்கப்படும். (நல்லூர் வீடியோ சென்ரா வளவு),19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.(27472)

தடுப்பூசி போடப்பட்ட தரமான சேவல் குஞ்சுகள் விலைரூபா15/= 02-02-2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (27662)

பகிரா இன புறொயிலர் குஞ்சுகள 04-02-2004 மாலை 5 மணிக்கு விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். விலை 50 ரூபா. தொடர்பு: முகுந்தன், பாதிரி வளவு, நெல்லியடி. (27819)

### இசைக் குறிப்புகள்

**Organ,** வயலின், **Guitar,** வீணை போன்ற இசைக்கருவிகளுக்கான சினிமாப்பாடல்களின் இசைக்குறிப்புகள் பாகம் 21 வரை வெளிவந்துள்ளன. தொடர்பு: S.Sறஜீந்திரன், இல.75, கோயில் வீதி, நல்லூர். **T.P.**:0777 031293 (நல்லூர் கந்தன் ஆலயத்திலிருந்து 500m தெற்கே). (27843)

### பொதுநிதி முகாமைத்துவம்

அரச அலுவலர்களின் எல்லா பரீட்சைகளுக்குமான நிதிப் பிரமாணங்களை உள்ளடக்கிய வினாவிடைப் புத்தகம் ரூபா 200/- தொடர்புகளுக்கு: கில்பேட்குணம் (கணக்காளர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), 39, செம்மணி வீதி, நல்லூர் மற்றும் 41/60, ஆஸ்பத்திரிமுன் வீதி, நாயன்மார் கட்டு, நல்லூர். (27660)

### தவறிவிட்டன

கந்தசாமி செல்வராணி என்பவரின் தேசிய அடையாள அட்டை (இல. 718072964V), விசேட அடையாள அட்டை (0902022638), கிளினிக காட் என்பன 24-01-2004 அன்று யாழ்ப்பாணத்திற்கும் பரமேஸ்வராச் சந்திக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மாயவன் கொமினிகேசன, இராமநாதன் வீதி (பல்கலைககழகம் முன்பாக) எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (27781)

சரசாலையை சேர்ந்த ஜெயனிசா பரமசாமி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.828490648X), யாழ் பல்கலைக்கழக அடையாள அட்டை என்பன 14-01-2004 அன்று புங்கன் குளத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பரம்ஸ் பத்திரிகை விற்பனை நிலையம், பஸ்தரிப்பு நிலையம், சாவகச்சேரி என்னும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (27826)

கலைவாணி லேன், டெலியடைப்பு, பண்டத்தரிப்பைச் சேர்ந்த T.ரோகினி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 785753224V), விசேட அடையாள அட்டை மற்றும் இ.கவிதாவின் விசேட அடையாள அட்டை என்பன முகமாலைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கணடெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (27707)

### வாடகைக்கு

சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளியில் 44 ஆம் இலக்க வீடு 4 அறைகளுடன், (**Attached**) குளியல் அறைகளுடன் (A/Cயும் உண்டு) வாடகைக்கு விடப்படும். தொடர்பு: யோசப், T.P. 222 7080. (27818)

**விசேட கழிவு விலையில்**
**போட்டோ பிரதி,**
**கம்பியூட்டர் பிறிண்ட்**
*140, பலாலி வீதி,*
*பரமேஸ்வராச் சந்தி,*
(பெற்றோல் செற் முன்பாக).
(பகுதிநேர/முழு நேர வேலை வாய்ப்புக்கள் உண்டு)
(27793) Te.No.:222 2478.

### தவறிவிட்டது

*சிவப்புநிற சிறிய SamSung கையடக்கத் தொலைபேசி 28.01.2004 புதன் கிழமை இணுவிலுக்கும் உடும்பிராய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.*

பொதுமுகாமையாளர்
*பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம், தாவடி.*
T.P.:3539
(27844)




**செல்வம் செழிக்கக்கூடிய வளமான விளைச்சலுக்கு இலங்கையில் முன்னணியில் திகழும்**

# எட்க்ரோ

## கிரீவ்ஸ்

## MK 12/MK 25

விவசாய நீர் இறைக்கும் இயந்திரம்

புத்திசாலியான உங்கள் சரியான தெரிவு, எட்க்ரோ நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் பொங்கி வரக்கூடிய சலுகைகள்.
ஒரு வருடத்துக்கான உத்தரவாதச் சான்றிதழ்.
பலமிக்கதும் நீண்ட காலம் உழைக்கக்கூடியதும்.
அதிக தண்ணீரை பெற்றுக்கொள்ளக்கூடிய வல்லமை.
சுயமாகவும் சுயமற்றதாகவும் நீர் இறைக்க வல்லது.
எரிபொருளைச் சேமிக்க வல்லது.
நாடளாவிய விற்பனைக்கு பிந்திய சிறந்தசேவை. தேவையானளவு உதிரிப்பாகங்கள்.

EDNA GROUP

**எட்னா அப்ளயன்ஸஸ் (பிரைவேட்) லிமிட்டெட்**
160, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு-04.
தொலைபேசி: 508961-2, 502291-3, 592135-6 தொலைநகல்: 594558, 500909.
தொடர்புகளுக்கு: மயூரா 0777 - 418821 கிழனு 0777 - 418817

யாழ்ப்பாணத்தில் மொத்தமாகவும். சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள:
**ஆர்க் என்ரபிறைசஸ்**
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-222 2052.
(27244) (33-12-13)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 18 - 09 - 1918



உதிர்வு 01 - 01 - 2004

**அமரர் சின்னத்தம்பி மயில்வாகனம்**

எங்கள் அன்பின் குல விளக்காய்
பாசத்தின் ஒளி விளக்காய்
எங்களை வழி நடத்திச் சென்றவரே!
வாழ்வில் மாண்புடன் வாழ்ந்து
என்றும் எங்கள் நெஞ்சங்களில்
நீங்கள் அணையாத தீபமாகிவிட்டீரே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.

*கைதடி வடக்கு,*
*கைதடி.* (27834)(21-12-13)

**பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றிநவிலலும்

பிறப்பு 11 - 08 - 1927



இறப்பு 01 - 01 - 2004

**திருமதி சின்னம்மா சங்கரப்பிள்ளை**

அம்மா உயிர் தந்த தெய்வமே!
எம்மை எல்லாம் அன்போடு வளர்த்து அறிவில்
உயர வைத்து வாழ வழிவகுத்து ஒளிமயமாக்கிய
உத்தமியே எங்கள் உயிர் உள்ளவரை
உங்கள் நினைவிருக்கும்.

01.01.2004 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (31.01.2004) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கிறோம்.

எங்கள் தெய்வத்தின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் வெளிநாட்டில் இருந்து அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும் எங்கள் துயரில் பங்குகொண்டவர்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல்:
*குடும்பத்தினர் சார்பில்*
*சங்கரப்பிள்ளை திருநாவுக்கரசு (கடியன்).*

*சிலம்புப்புளியடி,*
*சங்கானை.*
(சி-32997)
(34-13-12-21)

## மரண அறிவித்தல்

### பரநிருபசிங்கம் பரம்சோதி

**(ஓய்வுபெற்ற மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர், மாவட்ட இணைப்பாளர் - RRAN)**

சரவணையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட பரநிருபசிங்கம் பரம்சோதி அவர்கள் நேற்றுமுன்தினம் (29.01.2004) வியாழக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் திருமதி சிவபூரணம் பரம்சோதியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா பரநிருபசிங்கம் - திருமதி வள்ளியம்மை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான டாக்டர் கந்தையா (மலேசியா) - திருமதி இராசம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்றவர்களான விஜயரட்ணம், ஞானேஸ்வரி, பாக்கியசிந்தாமணி, காலஞ்சென்ற சிவராஜா மற்றும் ராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் மனோகரி (**Bio Faculty, Trinity College, Kandy**), சங்கரி (ஆசிரியை, இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்), ஐங்கரி (திட்ட உதவியாளர் - **NEIAP, PMU - Trincomalee,** ஆராய்ச்சியாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்), நளாயினி (பிரதேச சபை, நல்லூர்), காயத்ரி (யாழ் பல்கலைக்கழகம்), குகநேசன் (பிரதேசசபை, காரைநகர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.02.2004) ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வில்லூன்றி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

163, 3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
T.P. 222 3714

தகவல்:
**ப.குகநேசன் (மகன்)**
(பிரதேசசபை காரைநகர்)
(27814) (36-13-12-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# பேரினவாதப் போக்கு இனி எடுபடாது!

மிகுந்த பரபரப்புடனும் ஆரவாரத்துடனும் உருவாக்கப்பட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி - ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) கூட்டு மக்கள் மத்தியில் அது எதிர்பார்த்த வரவேற்பைப் பெறவில்லை என்று தென்னிலங்கையில் சுதந்திர வட்டாரங்களின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒட்டகத்துக்கு கூடாரத்துள் இடம்கொடுத்த மாதிரி, சு.கவின் கோட்டைக்குள் ஜே.வி.பி. வந்து புகுந்துகொண்டு - ஆக்கிரமித்துக்கொண்டு - சு.கவின் தனித்துவத்தை விழுங்கிவிட்டதாகப் பொருமுகின்றார்கள் சு.கவின் மூத்த தலைவர்கள் பலர்.

போதாக்குறைக்கு, ஜே.வி.பியுடன் திடீர்க் கூட்டு வைத்துக் கொண்டதால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் காலங்காலமாக - சுமார் நான்கு தசாப்த காலமாக - அவ்வப்போது கூட்டமைத்துச் செயற்பட்டு வந்த பழைமையான இடதுசாரிக் கட்சிகளின் உறவையும் இப்போது இழக்கவேண்டிய நிலைமை சுதந்திரக் கட்சிக்கு! கடைசியாகப் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இடம்பெற்ற சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன சுதந்திரக் கட்சியுடனான உறவுக்கு ஒரேயடியாக முழுக்குப்போடும் சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இவ்வளவு குழப்பங்கள் - எதிர்ப்புகள் - ஆகியவற்றோடு உருவான கூட்டமைப்புக்கு மக்கள் மத்தியில் எதிர்பார்த்த வரவேற்புக் கிடைக்கவில்லை என்பது சுதந்திரக்கட்சித் தலைவர்களுக்குப் பெரும் விசனத்தை - கலக்கத்தை - ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்த இரு கட்சிகளும் புதிய கூட்டமைப்பை உருவாக்கிய பின்னர் தமது முதலாவது பிரசாரக் கூட்டத்தை பெருத்த எடுப்பில் கொழும்பு மாநகரசபை முன்றிலில் நடத்தின. அதற்காகப் பலத்த ஆரவார ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால், மக்கள் மத்தியலிருந்து எதிர்பார்த்த பிரதிபலிப்புக் கிடைக்கவில்லை என்று கூட்டத்துக்குச் செய்திகளைச் சேகரிக்கச் சென்றிருந்த சுதந்திரப் பத்திரிகையாளர்கள் கூறுகின்றனர்.

இக்கூட்டத்துக்கு பொதுமக்கள் எதிர்பார்த்த எண்ணிக்கையில் திரளவில்லை; பெரிய ஆரவாரம் இருக்கவில்லை. இரண்டு கட்சிகளினதும் தலைவர்கள் அதிக எண்ணிக்கையில் மேடையில் காணப்பட்ட போதும் சுதந்திரக்கட்சியின் தலைவியும் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க கூட்டத்துக்குச் சமுகந்தராமல் பின்னடித்துவிட்டார். அவரது செய்தி ஒன்று மட்டும் 'சுரத்தில்லாமல' வாசிக்கப்பட்டது.

சு.க.-ஜே.வி.பி. கூட்டமைப்பை சுதந்திரக் கட்சியின் தலைவியான ஜனாதிபதி குமாரதுங்க முழுமனதோடு வரவேற்கின்றாரா, அதற்கு ஆதரவு தருகின்றாரா என்ற சந்தேகம் இன்னும் நீடிப்பதும் குறிப்பிடத்தக்கது.

கூட்டம் நடைபெற்ற சுற்றாடலில் நீலக்கட்சித் தரப்பை சிவப்புக் கட்சித் தரப்பே பெரும்பாலும் ஆக்கிரமித்திருந்தமை எதிர்காலத்தில் சு.கவின் தனித்துவம் புதிய கூட்டமைப்பின் மூலம் ஜே.வி.பியிடம் பறிபோகப் போவதற்குக் கட்டியம் கூறுவதுபோல அமைந்திருந்ததாகச் செய்தியாளர் ஒருவர் சொன்னார்.

காலங்காலமாகப் புரையோடிப்போயிருக்கும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஆட்சியிலிருக்கும் அரசுகள் ஏதேனும் முயற்சி எடுப்பதும் -

எதிர்க்கட்சியிலிருக்கும் மாற்றுக் கட்சிகள் ஆட்சியைப் பிடிக்கும் நோக்கில் பேரினவாதத்தைக் கிளப்பி அதன்மூலம் அந்த முயற்சிகளை முறியடிப்பதும் - இலங்கையின் அரசியல் வரலாறு.

இனப்பிரச்சினை பெரும் யுத்தமாக வெடித்து விஸ்வரூபம் எடுத்ததற்குத் தென்னிலங்கையின் இந்த அதிகாரப் போட்டியே அடிப்படை.

அதன் ஓர் அங்கமாகவே இப்போது மேடையேறுகின்றது ஸ்ரீ.ல.சு.க. - ஜே.வி.பி. கூட்டு.

ஆனால், இந்தப் பேரினவாதப் போக்கின் வரலாற்றை - நாட்டில் பெரும்யுத்தம் விஸ்வரூபம் எடுக்கக் காரணமான இந்த இனவாதச் செயற்பாட்டின் பெறுபேறுகளை - அதன் தாற்பரியங்களை - தென்னிலங்கை மக்கள் இப்போது நன்கு உணர்ந்துகொண்டிருக்கின்றார்கள். இனவாதத்தையும், சமாதானத்துக்கு எதிரான போர்க் குரலையும் எழுப்பி, இனிமேலும் மக்களைத் திசை திருப்பி, அதன் மூலம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிவிட முடியாது.

அந்த உண்மை - யதார்த்த - நிலைமையின் விளைவே ஸ்ரீ.ல.சு.க.- ஜே.வி.பி. கூட்டுக்கு மக்கள் மத்தியில் எதிர்பார்த்த ஆதரவு - வரவேற்பு - கிட்டாமல போவதற்குக் காரணம் என்று கூறுவது மிகையாகாது.

சுதந்திரக் கட்சித் தலைமை, தனது எதிர்கால அரசியல் நலனைக் கருதியேனும், இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு தன்னைத் திருத்திக்கொள்ள வேண்டும். இல்லையேல், அது இனவாத சகதியில் மூழ்கிப் புதைந்து, அரசியலிலிருந்து அடிபட்டு ஒதுக்கப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும் - வரலாறாகிவிடும்.

# அகதி அந்தஸ்து மறுக்கப்பட்டோர் நாடு திரும்பும்போது பண உதவி

## புலம் பெயர்ந்தோர் நிறுவனம் வழங்குகிறது

யாழ்ப்பாணம்,ஜன.31

வெளிநாடுகளில் அகதி அந்தஸ்துக் கோரிக்கை நிராகரிக்கப் பட்டுப் புலம்பெயர்ந்தோர் சர்வதேச நிறுவனம் மூலம் நாடு திரும்புபவர்களுக்கு சுயதொழில் வாய்ப்புக்காக அந்நிறுவனம் தலா ஒரு லட்சம் ரூபா உதவி வழங்குகின்றது.

- இவ்வாறு இந்த நிறுவனத்தின் யாழ்.கிளையின் பொறுப்பதிகாரி எஸ்.ஸ்ரீகாந்தா தெரிவித்தார். இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம்கோரி நீண்ட காலமாகத் தங்கியிருந்த பலரின் அகதி அந்தஸ்துக் கோரிக்கை அந்தந்த நாடுகளின் அரசுகளால் நிராகரிக்கப்பட்ட நிலையில் தாய நாடு திரும்பவேண்டி உள்ளன.

- இவ்வாறு அகதி அந்தஸ்துக் கிடைக்காத பலர் புலம பெயர்ந்தோர் சர்வதேச நிறுவனத்தின் உதவியை நாடியுள்ளனர்.

அந்த நிறுவனம் சம்பந்தப்பட்டவர்களை கௌரவமான முறையில் இலங்கைக்கு அழைத்துவர ஏற்பாடுசெய்துள்ளது.

இதுவரை இந்நிறுவனம் மூலம் 24பேர் யாழ்ப்பாணம் திரும்பியுள்ளனர்.

இவர்களுக்கு சுயவேலை வாய்ப்பை வழங்கவும், மீளவும் இவர்கள் வெளிநாடு செல்லும் ஆர்வத்தைக் குறைக்கவும் இந்த நிறுவனம் சுயவேலை வாய்ப்புத் திட்டம் ஒன்றை அறிமுகம் செய்துள்ளது.

நாடு திரும்பியவர்கள் விரும்பிய தொழிலை மேற்கொள்ள இந்தத் திட்டம் உதவும்.

விவசாயம், சிறுகைத்தொழில்கள் ஆகியவற்றுக்கும் உதவிகள வழங்கப்படவுள்ளன - என்றார்.

புலம்பெயர்ந்தோருக்கான சர்வதேச நிறுவனத்தின் தலைமையகம் டென்மார்க்கில் உள்ளது. இதன் யாழ்.கிளை, யாழ். கோயில் வீதியில் ஆஸ்பத்திரி வீதிச் சந்திக்கு அருகில் இயங்கி வருகிறது. (ஒ-3-5)

### மீள் குடியமர்வை வலியுறுத்தும்

# உண்ணாவிரதம் தொடர்பாக ஏற்பாட்டாளரிடம் விசாரணை

கைதடி,ஜன.31

தென்மராட்சி தெற்கில் மீளக்குடியமரக்கோரும் போராட்டத்துக்கான ஏற்பாட்டாளர் இருவரால் விசாரணை செய்யப்பட்டார்.

தனங்களப்பு, மறவன்புலோ பகுதிகளில் மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி சுதந்திரதினத்தன்று தென்மராட்சிப் பிரதேச செயலகம் முன்பாக சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்க முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. மறவன் புலோமத்தி பாரதி சனசமூக நிலையத்தினர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துவந்தனர். இந்நிலையில் மேற்படி சனசமூக நிலையத்தின் தலைவர் செ.ஆனந்தரஞ்சன், புலனாய்வு அதிகாரிகள் என்று கூறிக்கொண்ட இருவர் தன்னை விசாரணைக்குட்படுத்தினர் என்று தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் தனது வீட்டுக்கு வந்த இருவர், தம்மைப் புலனாய்வு அதிகாரிகள் என்று அறிமுகப்படுத்திக் கொண்டனர் என்றும் -

உண்ணாவிரதப் போராட்டம்,தென்மராட்சி தெற்கில் மக்கள் மீளக்குடியமர்ந்த விவரங்கள் போன்றவை குறித்துத் தம்மிடம் அவர்கள் விசாரித்துவிட்டுச் சென்றனர் என்றும் - ஆனந்தரஞ்சன் மேலும் தெரிவித்தார். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலவலகம், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஆகியவற்றிடமும் யாழ். அரச அதிபர், தென்மராட்சிப் பிரதேச செயலாள ஆகியோரிடமும் இதுதொடர்பாக முறைப்பாடு செய்துள்ளதாகவும் அவர் கூறினார் (ஒ-75)

# இரண்டு வருடங்களின் பின்னர் கீரிமலை ஆலயத்தில் உற்சவம்

### பெப்.5 முதல் 15 நாள்கள் நடக்கும்

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இரண்டு வருடங்களின் பின் எதிர்வரும் 5ஆம் திகதி முதல் தொடர்ந்து 15 நாள்களுக்கு நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த காலத்தில் ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு இருந்தமையால் திருவிழா நிகழ்வுகள் இடம்பெறவில்லை.

திருவிழா இடம்பெறவுள்ள 15 நாள்களும் கூட்டுப் பிரார்த்தனை, நற்சிந்தனை உரைகள், கதாப்பிரசாங்கம், வில்லிசைக் கச்சேரி ஆகியவற்றை நடத்த ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

திருவிழாக்காலங்களில் மேற்படி நிகழ்ச்சிகளை வழங்க விரும்பும் பாடசாலைகள் ஆலய பிரதம குருவுடன் தொடர்பு கொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

திருவிழாக்காலங்களில் அடியார்கள் உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள கோயிலுக்குச் செல்வதற்கு வேண்டிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஒ-86)

# மரங்களுக்கு மருந்து விசிறும் நபர்கள் குறித்து எச்சரிக்கை!

### விவசாயத் திணைக்களம் விடுத்தது

வலி.தெற்கு,ஜன.31

விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள் எனக் கூறிக் கொண்டு மரங்களுக்கு மருந்தடிக்க வீடுகளுக்கு வரும் நபர்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்கும்படி விவசாயத் திணைக்கள அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சில போலி நபர்கள் விவசாயத் திணைக்களத்தில் தாம் பணிபுரிகின்றனர் என்றும் - மரங்களில் உள்ள பூச்சித்தாக்கங்களைக் கட்டுப்படுத்துவதற்கான மருந்து விசிற வந்துள்ளோம் என்றும் கூறிக்கொண்டு - வீடுகளுக்குச் செல்கின்றனர் என்று கூறப்படுகிறது. இவர்கள் மருந்துப் போத்தல்களில் வெறும் தண்ணீரை நிரப்பிக் கொண்டுவந்து மருந்தெனக் கூறி மரங்களுக்கு விசுறுகின்றனர் என்றும் - அதற்குப் பணம் அறவிடுகின்றனர் என்றும் - தெரியவருகின்றது.

இதேவேளை - இவர்கள் வீட்டு நிலைமைகளை அவதானித்துத் திருட்டிலும் ஈடுபடுவதாகக் கூறப்படுகிறது.

எனவே, மருந்து அடிப்பதாகக் கூறிக்கொண்டு வருபவர்களிடம் எச்சரிக்கையாக இருந்து அவர்களுடைய அடையாள ஆவணத்தைப் பார்வையிட்டு அவை உண்மையானவை என்பதை உறுதிப்படுத்திய பின்னரே பணிகளை மேற்கொள்ள அனுமதியுங்கள் என விவசாயத் திணைக்கள அதிகாரிகள் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர். (ஒ-152)

### நாளை

தை 18
ஞாயிற்றுக்கிழமை
(01.02.2004)
திதி : தசமி
காலை 7.40 வரை
நட்சத்திரம்: ரோகிணீ
இரவு 7.04 வரை
சுபநேரம்: 9.36 - 11.06
ராகுகாலம்: 5.06 - 6.36
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

பொய்யும் அதிக பேச்சும் நெருங்கிய உறவினர்கள்.

# பிரதேச செயலகங்கள் ஊடாக இனி கடவுச் சீட்டுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஜன.31

யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களூடாக கடவுச சீட்டுக்கு விண்ணப்பிக்கும் நடைமுறை மீண்டும் ஆரம்பமாகவுள்ளது.

நேற்றுமுன்தினம் யாழ். செயலகத்தில் நடைபெற்ற பிரதேச செயலர்களுடனான கலந்துரையாடலில் இதற்கான பணிப்புரையை யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் சகல பிரதேச செயலாகளுக்கும் விடுத்துள்ளார்.

பிரதேச செயலகங்கள் ஊடாகக் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கும் நடைமுறை கடந்த சில மாதங்களாக யாழ். மாவட்ட அரச அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைய நிறுத்தப்பட்டிருந்தது.

கடந்த சிலமாதங்களாக கடவுச்சீட்டிற்கு விண்ணப்பிப்பதற்கு கொழும்பு செல்லவேண்டியிருந்தது. இதனால் யாழ். மாவட்டத்திலிருந்து கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிப்போர் சிரமங்களை அனுபவிக்க நேர்ந்தது.

இதனைத் தவிர்க்கும் முகமாகவே பிரதேச செயலகங்கள் ஊடாகக் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கும் பணி மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தத்தமது பிரதேச செயலகங்களில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், தேசிய அடையாள அட்டையின் "போட்டோ" பிரதி மற்றும் விண்ணப்பதாரியின் மூன்று புகைப்படம் என்பவற்றுடன் விண்ணப்பிக்கலாம் எனவும் -

சரியான முறையில் விண்ணப்பித்தவர்களுக்கு விரைவில் கடவுச்சீட்டினை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

# சமூக நிறுவனங்களின் ஆற்றலை மேம்படுத்துவதற்குப் பயிற்சி நெறி

### யாழ்.செயலகத்தின் ஏற்பாட்டில்

வலி.வடக்கு,ஜன.31

சமூக மட்டத்திலான நிறுவனங்களின் ஆற்றலை மேம்படுத்துவதற்கான பயிற்சி நெறியொன்றை நடத்துவதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை யாழ். செயலகம் மேற்கொண்டுள்ளது.

யாழ். மாவட்டத்தின் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளைத் துரிதகதியில் மேற்கொள்வதற்கு வசதியாக இந்தப் பயிற்சிநெறி நடத்தப்படவுள்ளதாகக் கூறப்பட்டது.

கிராம மட்டத்தில் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளில ஈடுபட்டுள்ள மற்றும் தாமாக முன்வந்து புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளில் சுயமாகச் செயலாற்றக்கூடிய ஒவ்வொரு நிறுவனத்திலிருந்தும் தலா மூவர் வீதம் தெரிவுசெய்து அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலாளர்கள் வேண்டப்பட்டுள்ளனர். (எ-86)

# பொதுக் கட்டுமானப் பணிகளுக்கு கிராம மட்டத்தில் பணியாளர் தெரிவு

### யாழ். செயலகம் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.31

குடாநாட்டில் இவ்வாண்டு மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள அரச திணைக்களங்கள் மேற்கொள்ளும் பாரிய கட்டட நிர்மாணப் பணிகளுக்காகக் கட்டடத் தொழில்நுட்பவியலாளர்களை (மேசன், மரவேலை செய்வோர், மின்னியலாளர்கள் போன்றோர்) கிராம மட்டத்தில் இருந்து தெரிவுசெய்ய யாழ். செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த நிர்மாணப் பணிகளில் ஈடுபட கட்டடம் மற்றும் மரத் தொழில்நுட்பவியலாளர்கள், குழாய் பொருத்துநர்கள், மின்னியலாளர்கள் போன்றவர்களைத் திரட்ட யாழ். செயலகம் முடிவுசெய்துளளது.

பிரதேச செயலாளர்கள் மூலம் கிராம மட்டத்தில் பணியாளாகளைத் தெரிவுசெய்யும் பணி மேற்கொள்ளப்படுகிறது.

முதல்கட்டமாக கிராமசேவையாளர்கள் மூலம் அந்தந்தப் பிரிவுகளில் உள்ள கட்டடத் தொழில்நுட்பவியலாளர்கள் பற்றிய விவரங்கள் திரட்டப்படுகின்றன.

எதிர்வரும் 3 ஆம் திகதிக்குள் விவரங்களைத் திரட்டி அனுப்பும்படி கிராமசேவையாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

இந்த விரைப்பட்டியலில் உள்ளவர்களில் இருந்து தகுதியானவர்கள் தெரிவுசெய்யப்பட்டு வேலை வழங்கப்படும். (ஒ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணனி காட்சிப்பொருள் அல்ல; அது அன்றாட வாழ்வின் தேவை!

## மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் உரை

பருத்தித்துறை,ஜன.31

கணனி காட்சிப் பொருள் அல்ல. அது எமது அன்றாட வாழ்வின் தேவையாக மாறிவிட்டது.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் ராணிமைந்தன்.

மருதங்கேணிக் கல்விக்கோட்டத்துக்கு உட்பட்ட ஆசிரியர், மாணவர்களுக்கான பத்துநாள் கணனிக் கருத்தரங்கு அண்மையில் மருதங்கேணி இ.த.க.பாடசாலையில் ஆரம்பமானது. இதுதொடர்பாக நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ராணிமைந்தன் தமதுரையில் மேலும் தெரிவித்ததாவது:-

கணனி என்ற மாயையை முற்றாகப் போக்கவேண்டும் மாணவர் அமைபினால் தமிழீழம் எங்கும் எட்டு கணனி மையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது ஒன்பதாவது கணனி மையமாகும். இதற்கான புதிய கட்டடத்தை கடற்புலிகளின் அரசியற்துறையினர் விரைவில் கட்டித்தரவுள்ளனர்.

அத்துடன் இந்தக் கணனி மையததிற்கு தமிழீழ மாணவர் அமைப்பினால பத்துக் கணனிகளும் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன.

கணனி மூலம் தகவல் தொழில்நுட்ப உலகினுள் இலேசாக உட்புகுந்து விடமுடியும். கணனி காட்சிப் பொருளாக இருக்காது. எமது அன்றாட வாழ்க்கையின் தேவையான பொருளாக மாறிவிட்டது. தென் இலங்கையில் கணனிப் பாவனை அதிகரித்து விட்டது. நாம் தகவல் தொழில்நுட்ப உலகில் சுமார் இருபத்தைந்து வருடங்கள் பின்னே தள்ளப்பட்டுள்ளோம்.

இந்நிலைமையை முற்றாக மாற்றுவதற்காகவே தமிழீழ மாணவர் அமைபினர் வடமராட்சி கிழக்கில் கணனி மையத்தை அமைக்க முற்பட்டுள்ளனர். தொலைபேசி வசதி கிடைத்ததும் இன்ரநெற் தொடர்புகளை ஏற்படுத்த முடியும். இன்ரநெற் மூலம் பல நன்மைகள் உள்ளபோதும் , தீமைகளும் இல்லாமல் இல்லை. நாம் எமதுகல்வித் தேவைகளுக்காக இன்ரநெற்றை பயன்படுத்த வேண்டும். கணனி இருப்பின் இன்று வானொலி, தொலைக்காட்சி, வீடியோ என்பனவற்றின் தேவைகள் குறைந்துவிடும். எல்லா விடயங்களையும் உள்ளடக்கியதாகவும் இடத்திற்கிடம் கொண்டு செல்லக்கூடியதாகவும் பல வடிவமைபுகளில் கணனி அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளது. கணனியை அறிவதற்கு ஆர்வமே முக்கியமானதாகும். ஆர்வமுள்ளவர்கள் தாமாகவே இதனை கற்றுக்கொள்ள வாய்ப்புண்டு.

- என்றார் (எ-118)

## அரச ஊழியருக்கு சிங்கள மொழிப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஜன.31

சகல அரச ஊழியர்களுக்குமான சிங்களமொழி கற்பிக்கும் வகுப்புகள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் ஆரம்பமாக உள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான முதல் அணியினரின் வகுப்புகள் நாளைமறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2.45 மணிக்கு நல்லூர் சி.சி.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளன.

இவ்வகுப்புகளை நடத்துவதற்கு சிங்கள ஆசிரியரான பிய தாஸவை வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு நியமித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(எ-9)

# உடைமைகளைச் சேதமாக்கிய நால்வருக்குப் பிணை அனுமதி

ஆனைக்கோட்டைப் பகுதியில் உள்ள வீடொன்றில் உட்புகுந்து வீட்டு உடைமைகளைச் சேதப்படுத்திய நான்குபேரை பிணையில் செல்ல யாழ். நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

கடந்த 20 ஆம் திகதி ஆனைக்கோட்டை, பொன்னையா வீதியிலுள்ள பரமநாதன் இன்பராணி என்பவரது வீட்டினுள் புகுந்த 4 பேர் கொண்ட குழு அங்கிருந்த வீட்டு உடைமைகளை சேதப்படுத்தியதுடன் 14 ஆயிரம் ரூபா பணத்தினையும் சைக்கிள் ஒன்றையும் திருடியதாக யாழ். பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து, இச்சம்பவத்துடன தொடர்புடையவர் என்று சந்தேகிக்கப்படும் நாதன் பகீரதன், இராஜசிங்கம் சுரேஷ், ரகுநாதன் தயானந்தன், தனபாலரட்ணம் தயாளன் ஆகிய நான்கு பேரையும் கைதுசெய்த யாழ். பொலீஸார், அவர்களை நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றில் நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

சந்தேகநபர்கள் பொருள்களுக்கு ஏற்பட்ட சேதத்திற்கு நஷ்டஈடாக 21 ஆயிரம் ரூபாவைச் செலுத்த முன்வந்ததை அடுத்து நால்வரையும் தலா 15 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான் இது தொடர்பான வழக்கு விசாரணைகளை அடுத்த மாதம் 4 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (எ-5)

# யாழ். புனர்வாழ்வுப் பிரிவுக்கு கழிவுநீர் உறிஞ்சும் இயந்திரம்

மலசலகூடக் குழிகளிலிருந்து கழிவு நீரை அகற்றப் பயன்படுத்தப்படும் இயந்திரம் யாழ்.மாவட்டச் செயலக புனர்வாழ்வுப் பகுதிக்குக் கிடைதுள்ளது.

நலன்புரி நிலையங்கள் போன்ற இடங்களில் உள்ள மலசலகூடக்குழிகள் நிரம்பி வழியும்போது, அருகே வேறொரு குழியை வெட்டி, கழிவுகளை அதற்குள் புதைக்கும் நடைமுறையே இதுவரை பின்பற்றப்படுகின்றது.

தற்போது கிடைத்துள்ள இயந்திரம், மலசல கூடக்குழிக்குள் உள்ள கழிவு நீரை மட்டும் உறிஞ்சி எடுத்துவிடும். இதனால் மலசலகூடக்குழிகள நிரம்பி வழிந்து சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படும் அபாயம் தவிர்க்கப்படும். இந்த இயந்திரம் தொடர்பாக சகல பிரதேசச் செயலகங்களுக்கும் 'அறிவிக்கப்பட்டுள்ளன. நலன்புரி நிலையங்கள் போன்றவற்றில் மலசலகூடகுழிகள் நிரம்பிக் காணப்பட்டால், அப்பகுதிக்கான பிரதேச செயலகத்துடன் தொடர்புகொண்டு, மேற்படி இயந்திரத்தைப் பெற்றுப் பயன்படுத்தலாம் என்று யாழ்.செயலகப் புனர்வாழ்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (ஓ-139)

## வாழ்த்துகின்றோம்

ஓம் நமோ நாராயணா!

இல்லற வாழ்வில் இனிதே 60 ஆண்டுகள் (மணிவிழா)



திரு.திருமதி

மா.கந்தசாமி மகேஸ்வரி

(முன்னாள் கிராம சேவையாளரும் ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் மகாசபைத் தலைவரும்)

தம்பதியை
இன்று இல்லறவாழ்வில்
மணி விழாக் காணும் நன்நாளில்
இன்று போல் என்றும்
ஸ்ரீமன் நாராயணன் அருளால்
பல்லாண்டு காலம் சிறப்பாக வாழ
நாராயணனை வேண்டி
வாழ்த்துகின்றோம்.

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்.
துன்னாலை வடக்கு. புலோலி. (C33015)(34-12-19-21)

அறங்காவலர் சபையினர்.
சிவாச்சாரியர்கள்.
பணியாளர்கள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை அதிபரும்,
சிறந்த சமூகசேவையாளருமாகிய
**திரு.முத்துத்தம்பி மகேந்திரன்**
அவர்கள் 24-12-2003 அன்று அகில இலங்கை சமாதான நீதிவானாக பதவியேற்றமையை இன்று (31-01-2004) அவரது ஐம்பதாவது அகவைதனில் பாராட்டி வாழ்த்தி பேருவகையடைகிறோம்.

ஆசிரியர் கழகம்,
யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்.
(27800) (21-12-19)

## சமையல் ஆள் தேவை

மேலைத்தேய, யாழ்ப்பாண சமையலில் அனுபவமுள்ள ஆண், பெண் சமையலாளர்கள் தேவை. நேரில்வரவும்.

40, கண்டி வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
(இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் முன்பாக)
(27831)

## தென் இந்திய சஞ்சிகைகள் விற்பனையில்

ஆன்மீகம், கல்கண்டு,
சினேகிதி, குமுதம், கலைமகள்,
மஞ்சரி, ரமணிச்சந்திரன்,
கண்மணிகாமிக்ஸ்,
ஹெல்த், கிறைம் நாவல்கள்
இன்னும் பல

**ஸ்ரீலங்கா புத்தகசாலை**
234, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 222 2573 (சி-33009)

## JAFFNA, SCIENCE ASSOCIATION

12th Annual Sessions
21,22 & 23 April 2004

**Professor Kandiah Balasubramaniam Gold Medal**

The above Gold Medal Award Will be awarded at the 12th Annual Sessions.

Applications / Nominations are called for the Award.

The Award is for outstanding Research Achievement in any scientific field at the National level Contributing to the development of Sri Lanka.

For details and applications forms please apply to:

**Dr.S. Srisatkunarajah**
The General Secretary,
Jaffna Science Association,
C/O University of Jaffna, Jaffna
Closing Date :28.02.2004
(27813) (12-19-21)

## திருமண அழைப்பு

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக
ஓம் ஸ்ரீ விஸ்வபிரம ஸ்ரீ

அன்புடையீர்!

ஸ்ரீ, விஸ்வகுலகோத்திர நிகழும் மங்களகரமான சுபானு வருஷம் தை மாதம் 19ஆம் நாள் (01.02.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 11.40 மணி முதல் 12.20 மணிவரை வரும் ஏகாதசி திதியும் ரோகினி நட்சத்திரமும் கூடிய சுபமுகூர்த்த நல் வேளையில்

திரு.திருமதி ஜெகதாஸ்
தம்பதிகளின் புத்திரன்
ராம்தாஸ்
(பொறியியலாளர்)
அவர்களுக்கும்



திரு.திருமதி இரமணன்
தம்பதிகளின் புத்திரி
துஷ்யந்தினி
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணையுடன் கனடா – ரொரண்டோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அன்றைய தினம் யாழ்ப்பாணத்தில் எமது இல்லத்தில் நடைபெறும் வரவேற்புபசார நிகழ்வில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் குடும்ப சகிதம் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி ஜெகதாஸ் வசந்தாதேவி
Miltterlstr 16a,
58095 Hagen,
Germany.

திரு.திருமதி இரமணன்.
161, கன்னாரவீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(27806)(26-21-19-12) (இரு வீட்டார் அழைப்பு)

உ

புங்குடுதீவு மேற்கு அரியநாயகன்புலம்
**அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய**
## புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேக விழா

மகா கும்பாபிஷேகம்:- நாளை (01.02.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 7.44 மணி முதல் 9.04 மணி வரை.

தைலாப்பியங்கம்:- பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் இன்று(31.01.2004) சனிக்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 4 மணி வரை.

31.01.2004 சனிக்கிழமை பகல் 11 மணிமுதல் 12.30மணிவரை

**திருமுறைப் பண்ணிசைக் கச்சேரி**
கலாபூஷணம், தேவார இசைமணி
தாவடியூர் கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன் குழுவினர்

பிரதிஷ்டா பிரதமகுரு:-
சிவஸ்ரீ இரகுநாத கமலநாதக்குருக்கள்
அவர்களின்
தலைமையில் மகா கும்பாபிஷேகக் கிரியைகள் நடைபெறும்.
அடியார்களை அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:
போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

புங்குடுதீவு - 6
(27673) (34-12-19-21)

ஆலய பரிபாலன சபையினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி.

# சங்கானை

# பவளவிழாச் சிறப்புமலர்

## அகம் நெகிழும் அதிபர்



1928ஆம் ஆண்டில் பிறந்து, தவழ்ந்து, நடந்து 75ஆவது அகவை கண்டு கல்விப்பொலிவுடன் பூரித்து நிற்கிறாள் சிவப்பிரகாச மகாவித்தியாலய அன்னை. சைவமும் தமிழும் தன் இரு கண்ணாகக் கொண்டு எங்கள் கல்விச் சமூகத்துக்கு பணியாற்றி வருகின்றாள். அத்தகைய பணிகளில் ஆசிரியரும், மாணவரும், சமூகமும் பூரண ஒத்துழைப்பை நல்குவதையிட்டு பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். பவளவிழா நிகழ்வு சிறப்புற பல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு எமது வேண்டுதலை ஏற்று அருளாசியுரை, வாழ்த்துரை, ஆசிச்செய்தி என்பவற்றை வழங்கிய அன்புள்ளங்களுக்கும் எனது இதயபூர்வ நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு.ச.கைலாசநாதன் (அதிபர்)

## மொழியையும் சமயத்தையும் பேணிக்காத்த நிறுவனம்



இலங்கையில் ஆங்கில மொழிக்கல்வி செல்வாக்குப் பெற்றிருந்த 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பக் காலகட்டத்தில் சுதேசிய மொழியையும், தமிழையும் சைவசமயத்தையும் பேணிப்பாது காத்து அவற்றைச் செழுமைப்படுத்தி பாரம்பரிய கலை கலாசாரங்களிலிருந்து மக்களை நழுவிச் செல்லவிடாது தடுக்கும் உயரிய சிந்தனையின் வெளிப்பா டாக இப்பாடசாலை தோற்றுவிக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை இப்பாடசாலை படிப்படியாக வளர்ச்சிபெற்று சங்கானைக் கல்விக் கோட்டத்தில் அதிகூடிய மாணவர் களுக்கு கல்வி புகட்டுகின்ற ஓர் ஆலயமாகத் தனித்துவம் பெற்று மிளிர்கின்றது. கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் மட்டுமன்றி விளையாட்டு, தமிழ்த் தினம், ஆங்கில தினப் போட்டிகளிலும் மாவட்டநிலை, மாகாண மட்டநிலை, தேசிய மட்டநிலைகளிலும் பங்குபற்றி சாதனைகளை அவ்வப்போது நிலைநாட்டி வளர்ச்சிபெற்று வந்துள்ளது. தனது வளர்ச்சிப் பாதையில் சங்கானைக் கிராமத்தில் வாழும் பல்வேறு சமூகத்தினரோடும் இறுக்கமான உறவுகளைப் பேணி சமூக மாற்றங்களுக்கு ஈடுகொடுத்து அவர்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்து வந்துள்ளது.

தகவல் தொழில்நுட்ப நூற்றாண்டில் உலக மக்கள் கால் பதித்துள்ள இந்தவேளையில், உலக மயமாக்கலுடன் பின்னிப் பிணைந்த அறிவுசார் பொருளாதாரக் கட்டமைப்புக்குப் பொருத்தமான மனிதவளத்தை உலகிற்குக் கையளிக் கக்கூடிய மாணவ சமுதாயத்தை உருவாக்குவதற்கு இப்பாடசாலை முன்னுதாரணமாகச் செயற்படுவதற்கு பவள விழாக்காணும் இந்நாளில் எனது நல்லாசியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சு.சுந்தரலிங்கம்.
வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்
(கல்வி நிர்வாகம்)

## கனத்த கல்விக் குன்று



புத்தியைத் தீட்டும் அறிவாலயங்கள், பக்தியூட்டும் இறை நிலங்கள் போன்று தெய்வீகமானவை. அவ்வகையில் தொன்மைமிகுந்த முதன்மைபெற்ற கல்விக்கூடங்களில் ஒன்றாக இன்று விளங்குவது யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயமாகும். அகவைகள் எழுபத்தைந்து கடந்து அளப்பரிய கல்விச்சேவை ஆற்றிய இந்நிறுவனம் கணப்பொழுதும் தன் கடமைமாறாது இன்று கனத்த கல்விக்குன்றாக யாழ்ப்பாண மண்ணின் கல்வி உலகில் மின்னிப் பிரகாசிக்கிறது.

கடந்த போர்க்காலச் சூழலில் எனது பிரதேச செயலர் பிரிவில் எம்பிள்ளைச் செல்வங்களின் கல்வி வளத்தை வழுவில்லாமல் பேணிக்காத்து பெருமையடைந்தது இம்மகாவித்தியாலயம். அதுமட்டுமல்லாது போர்க்காலச் சூழலில் இடம்பெயர்ந்து வலி.மேற்கில் வாழ்ந்த மாணவ மழலைச் செல்வங்களிற்கும் கல்விச்செல்வத்தை வாரி வழங்கியது இக்கல்விக்கூடம் என்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். கல்விப் போதனைகளில் மட்டுமன்றி மாணவர்களின் சமூகமேம் பாட்டுப் பணிகளிலும் அவர்களிற்கு அறிவும், ஆற்றலும், அனுபவமும் தந்து, முழுமனிதர்களாக ஆக்கியமைத்து மேம்பாடு கண்டது இக்கல்வி நிறுவனம். அதனால் நன்மை அடைந்தோர் நாலா திக்கிலும் நனி சிறந்து விளங்கி இன்று தம்மை வளர்த்த கல்வித்தாயை கவினுறப் போற்றுகிறார்கள். அப்போற்றுதலின் ஒரு விளைவே இன்று நாம் காணும் இப்பாடசாலையின் பவளப்பெருவிழாவாகும்.

இத்தகைய ஒரு பெருவிழாவில் இக்கல்விக் கழகத்தின் சாதனைகள், செயற்பாட்டை, பாராட்டக்கிடைத்த வாய்ப்பை எண்ணி நான் பெரிதும் மகிழ்வடைகிறேன். சிறந்த கல்விப்பணியாற்றும் இப்பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் என் பாராட்டுகள். இப்பாடசாலையினால் பெருமைபடைத்த கல்விச்சமூகத்திற்கு என் வாழ்த்துக்கள். இப்பாடசாலையினை ஆரம்பித்த பெரியோர்கள் நோக்கவழிநின்று, இன்று கல்வி உலகில் பிரகாசிக்கும் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம் வையத்தில் வாழ்வாங்கு வாழ என்றும் வாழ்த்துகிறேன்.

திரு.சி.ஏ.மோகன்றாஸ்,
பிரதேச செயலர், வலி.மேற்கு, சங்கானை.

(சி-32973) (24-12-18)

## நல்லை ஆதீன குரு முதல்வரின் அருளாசியுரை

யாழ்ப்பாணம், சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் தனது பவள விழாவினை சிறப்பிக்குமுகமாக சிறப்பு மலர் ஒன்றினை வெளியிடுவதனையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம்.


"கற்றுணர்ந்து ஒழுகு" என்ற மகுட வாக்கியத்தை தாரக மந்திரமாகக் கொண்டு சங்கானைப் பிரதேச கல்வி வளர்ச்சிக்கு உயரிய தொண்டாற்றி வரும் இக்கல்லூரி எழுபத்தைந்து வருடமாக இப்பணியைச் செய்து வருவது போற்றுதற்குரியது.

இக்கல்லூரி தன் சேவைக் காலத்தில் உருவாக்கிய கல்விமான்கள், பல்துறைவிற்பன்னர்கள் பலராவர். "அன்பே சிவம்" என்ற வாக்கியத்தை தம் இலச்சினையிற் கொண்டு தமிழுக்கும், சைவத்திற்கும் பெரும் பணியாற்றி வருகின்றமை இவ்வித்தியாலயத்தின் தனிச் சிறப்பாகும்.

இப்பாடசாலை மேலும் கல்வியிலும் ஏனைய துறைகளிலும் சிறந்து விளங்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். இன்று பவளவிழாக் காணும் இப்பாடசாலை இன்னும் பல்லாண்டு காலம் தனது சேவையினைத் தொடர வாழ்த்துகின்றோம். இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு தம்மை அர்ப்பணித்திருக்கும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் அனைவரையும் இறைவன் ஆசீர்வதிப்பானாக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.



## சிவப்பிரகாச பிரவாகம்

ஈழத்தில் அந்நியர் ஆட்சிக்காலத்தில் கிறிஸ்தவ சமயம் மேலோங்கிச் சைவசமயம் வீழ்ச்சியடைந்திருந்தது. சைவப் பாரம்பரியத்தைக் காக்கத்தோன்றிய விடிவெள்ளியாக விழிப்படைந்தார் பெரியார் சரவணமுத்து சிவசம்பு அவர்கள். இவர் ஆரம்ப காலத்தில் திண்ணைப் பள்ளிகளை ஆரம்பித்து சைவப் பாரம்பரியத்தைப் பேணும் கல்வியைப் போதித்தார். இம் முயற்சியின் தொடர்ச்சியாக 1928ஆம் ஆண்டு மாசி மாதம் முதலாம் திகதி தனது சிரேஷ்ட புத்திரனாகிய சிவப்பிரகாசம் என்பவர் பெயரில் எமது பாடசாலையை நிறுவினார்.

அன்று பெரியார் சரவணமுத்து சிவசம்பு அவர்கள் விழிப்புணர்வுடனும் நல்நோக்கத்துடனும் அமைத்த சிறிய பாடசாலை இன்று தழைத்தோங்கி நிற்கிறது எனில் மிகையில்லை. இப்புகழ், பெரியார் சிவசம்பு அவர்களையே சாரும்.

இது ஆரம்பத்தில் தனியார் பாடசாலையாகவிருந்து 1970 ஆம் ஆண்டளவில் மகாவித்தியாலயமாக உருவாகியது.

அர்ப்பணிப்புமிக்க பல அதிபர்களின் சேவையாலும் ஆசிரியர்களின் ஒப்பற்ற சேவைகளாலும் எமது பாடசாலை ஊட்டம் பெற்று வளர்ந்து வந்துள்ளது.

இன்று வலிகாமம் வலயத்தில் அதிக எண்ணிக்கையான மாணவர்களைக் கொண்டிருப்பதோடு கல்வியிலும், விளையாட்டிலும், கலைத்துறையிலும் தனக்கென தனி முத்திரை பதித்துள்ளது. இப்பெருமையை இக்கல்வி நிறுவனம் பவளவிழாக்காணும் இந்நன்னாளில் எண்ணி ஆனந்திக்கின்றோம்.

*வாழ்க கல்லூரி வளர்க இதன் கல்விச் செயற்பாடுகள்.*

## நிறுவுநர் குடும்பம் சார்பில் வாழ்த்துரை

எமது பாடசாலையாகிய யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் பவளவிழாக் கோலம் கொண்டு பொலிவோடு விளங்குவது கண்டு எம் உள்ளம் குளிர்கிறது. அன்று எம் முன்னவர் இட்ட வித்து இன்று தழைத்தோங்கி, நிழல்பரப்பி நிற்பதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றோம். இன்றுபோல் என்றும் சகல துறைகளிலும் இப்பாடசாலை வளர்ச்சி காண வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

திரு.சி.சண்முகராஜா.

## வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துரை



சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம் பெருமையுடன் பவளவிழாக் காணுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். கடமையுணர்வு மிக்க அதிபர்களால் கட்டி எழுப்பப்பட்ட இம்மகாவித்தியாலயம் இன்று அதிபர் திரு.ச.கைலாசநாதன் அவர்களின் தலைமையில் ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்களுடன் இயங்கி வருவது பெருமைக்குரியது. பாரம்பரிய பெருமைமிக்க கல்விச்சுழலைக் கொண்டதாக இவ்வித்தியாலயம் விளங்குவதால் தொய்வின்றி தொடர்ச்சியாக உயர்வு நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. நாட்டுக்கூத்தில். உடற்பயிற்சியில். கல்விப் பெறுபேறுகளில். மெய்வன்மைப் போட்டிகளில் உயர்வான முத்திரையை வலய. மாகாண. தேசிய மட்டங்களில் பொறித்துள்ளது. இன்றைய அதிபரது கண்ணியம். நேர்மை அர்ப்பணிப்பு. அரவணைப்பு யாவும் ஆசிரியர்கள் முழுமையாக மாணவர்களுக்காகத் தங்களை ஈடுபடுத்துவதற்கு பக்கபலமாக இருந்திருக்கின்றன. இன்றைய பல தலைமைத்துவங்கள். அசிரத்தைப்போக்குகள். நெகிழ்ச்சியற்ற தன்மைகள். அன்பின்மை போன்றவற்றால் நிறுவனங்களின் பெருமைகளைக் குறைக்கும் இக்காலகட்டத்தில் சங்கானை சிவப்பிரகாசமாகவித்தியாலயம் சலசலப்பின்றி. ஆர்ப்பாட்டமின்றி அமைதியாக நின்று. நிறுவன இலக்குகளை வென்றெடுப்பதையிட்டு அதிபர். ஆசிரியர்கள். பா.அ.சங்க உறுப்பினர். பழைய மாணவர்கள். கல்வி சாரா ஊழியர்கள். மாணவர்கள் அனைவரையும் வாழத்துகின்றேன்.

திருமதி றெஜீனா இருதயநாதன் அவர்கள்
வலயக் கல்விப்பணிப்பாளர்,
வலிகாமம் - வலயம்.

## மண்பதையின் நன்னிலைக்கு உழைக்க என் வாழ்த்துக்கள்!



யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம் பவளவிழாக்காணும் இன்றைய நிலையில் வெளியிடும் மலருக்கு வாழ்த்துச் செய்த் வழங்குவதையிட்டு நான் பெரிதும் மனமுவக்கின்றேன்.

எங்கள் கோட்டத்தில் அதிக எண்ணிக்கை கொண்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு நிலைக்களனாக இவ்வித்தியாலயம் விளங்குகின்றது. புவியியல் ரீதியாக சங்கானைப் பட்டினத்தின் நடுநாயகமாக விளங்குவதால் நாற்புறமும் செறிந்து வாழும் மக்களின் அறிவொளி பரப்பும் ஆலயமாக இது விளங்குகின்றது. கல்விச் செயற்பாட்டின் திறமும் பல்வேறு இணைபாடவிதான செயற்பாடுகளின் தெரிவுக்கு உகந்த மாணவர் வளமும் இவ்வித்தியாலயத்தின் சிறப்புக்கு உரமூட்டுவனவாக விளங்குகின்றன. எமது கோட்டத்தின் சகல செயற்பாடுகளிலும் தம்மை இணைத்துக் கொள்ளும் அதிபர், அவர் வழி செல்லும் ஆசிரியர்கள் ஆகியோரின் உயர்ந்த ஈடுபாடு மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை ஊக்குவிக்கின்றமை வெள்ளிடை மலையாகும். பவளவிழாக்காணும் இவ்வித்தியாலயம் இன்னும் பல நூற்றாண்டுகள் தன் செயற்பாடுகளால் மன்பதையின் நன்னிலைக்குத் தொண்டு பல கொண்டுழைக்க என்வாழ்த்துக்களை வழங்குவதில் மகிழ்வெய்துகின்றேன்.

எஸ்.செல்லையா
கோட்டக்கல்விப்பணிப்பாளர்,
கோட்டக்கல்வி அலுவலகம், சங்கானை.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

பவளவிழாக்காணும் எமது சங்கானை சிவப பிரகாச மகா வித்தியாலயம் அதிபர், ஆசிரியர்களின் உன்னதமான அர்ப்பணிப்புடன் சேவை ஆற்றியதன் காரணமாக இன்று 75 ஆவது ஆண்டு விழாவினை கொண்டாடும் அளவிற்கு வளர்ந்துள்ளமை எம்மையெல்லாம் மிகவும் பூரிப்படையச் செய்துள்ளது. இப்பாடசாலையானது அளப்பெரிய கல்விமான்களையும் அறிஞர்களையும் உயர்பதவி வகிப்பவர்களையும் உருவாக்கியுள்ளது என்று கூறினால் மிகையாகாது. இவற்றிற்கெல்லாம் காரணம் பாடசாலை வளாகத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் வேட்டான வைரவப்பெருமான் ஆவார். பலவிதமான சிறப்புக் களையும் பெற்றுப் பல்லாண்டுகாலம் சங்கானைக் கிராமத்தின் கலங்கரை விளக்காய்த் திகழவேண்டுமென கலியுகவரதனாகிய ஆற்றங்கரை வேலவனைப் பிரார்த்திக்கின்றேன்.

திரு.க.அருள்லிங்கம் (J.P.)
பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்.

## பவளவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்:


றஞ்சன் ஸ்ரோர்ஸ்
பலசரக்கு மாளிகை
பிரதான வீதி, சங்கானை.

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி
சங்கானை.

நிறைஞ்சனாஸ் காட்வெயார்
நிறைஞ்சனாஸ் ரான்ஸ்போட்
பிரதான வீதி, சங்கானை.

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
சகலவிதமான பாடசாலை உபகரண விநியோகஸ்தர்கள்
காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

காசிப்பிள்ளை
பலசரக்கு மாளிகை
சங்கானை.

ஜிதர்சன் அலுமினியம் பிறின்ட் சென்ரர்
ரெக்கோடிங் அன்ட் எலக்ரோனிக் மெக்கானிக்
பஸ்நிலையம் முன்பாக, சங்கானை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போட்டிப்பரீட்சைக்கான வகுப்புகள்

ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

★ வியாழக்கிழமைகளில் காலை 9.00 மணிக்கு
- வாரவகுப்புகள் -

★ சனிக்கிழமைகளில் மாலை 3.00 மணிக்கு
- வார இறுதி வகுப்புகள் -

**ஆசிரியர்: A.குமாரவேல்**

JAFFNA COLLEGE
UNDER GRADUATE DEPT.,
464, HOSPITAL ROAD,
JAFFNA.

(C/32912)(35-14-26)


# புதிய கூட்டணியிடம் விடுதலைப் புலிகள் வாலாட்ட முடியாது என்கிறார் மங்கள

கொழும்பு, ஜன.31

தெற்கில் நிலையான ஆட்சியை அமைக்கும் எந்த அரசுடனும் பேச்சு நடத்தத் தயார் எனப் புலிகள் தெரிவித்துள்ளனா. எனவே மீண்டும் யுததம் ஆரம்பமாகுமென எவரும் அஞ்சத் தேவையில்லை. அதேவேளை, தெற்கில் உருவாகியுள்ள புதிய முன்னணியிடம் வாலாட்ட முடியாது என்பதும புலிகளுக்குத் தெரியும்.

ஸ்ரீல.சு.கட்சி பொருளாளர் மங்கள சமரவீர எம்.பி இப்படித் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஐக்கிய மக்கள் முன்னணியின் முதலாவது பிரசாரக் கூட்டத்தில் பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் பேசும்பேது கூறியதாவது:-

ஜனாதிபதி மூன்று அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றதும் மூன்று முக்கிய அமைச்சர்கள் இரகசியமாக வன்னிக்குச் சென்று கொழும்பில் குண்டுகளை வெடிக்கவைக்கும் படி புலிகளிடம் வேண்டுகோள் விடுத்தனா். ஆனால் , புலிகள் இவர்களது வேண்டுகோளைச் செவிமடுக்கவில்லை.

ஸ்ரீல.சு.க - ஜே.வி.பி.கூட்டமைப்பைக் குலைக்க ஐ.தே.க. பல முறை சதித்திட்டங்களை தீட்டிச் செயற்பட்டது. இவற்றையெல்லாம் முறியடித்தே எமது முன்னணி உருவாகியுள்ளது. ஜனாதிபதி அமைச்சுப் பொறுப்பேற்றதனால் முதலீட்டாளர்கள் இந்நாட்டில முதலீடு செய்ய முன்வரவில்லை என பிரதமர் குற்றஞ்சாட்டியுள்ளார். இலங்கையில் முதலீடு செய்ய விரும்பும் முதலீட்டாளர்களிடம் அமைச்சரவையைச் சேர்ந்த சில அமைச்சர்களே கோடிக்கணக்கான ரூபாய்கள் லஞ்சமாகக் கேட்டால் எந்த முதலீட்டாளா தான இங்கு முதலீடு செய்ய முன்வருவார்கள்?

ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு 18 அமைச்சர்கள் மீதான லஞ்சக் குற்றச்சாட்டுக்கள் குறித்தும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

- இப்படி அவர் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ உரையாற்றுகையில் கூறியதாவது:-

ஐ.தே.கட்சி நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதிலிருந்து நாடு சீரழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

நீர்வளம், நாட்டு வளம், கடற்கரைப் பிரதேசங்கள் அனைத்தும் வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. எமது வளங்கள் எமது முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படுவதில்லை. எமது புத்திஜீவிகள் புறக்கணிக்கப் படுகின்றனர்.

விவசாயிகள் நாடு முழுவதும் உண்ணாவிரதம் மேற்கொள்கின்றனர். சுகாதார ஊழியர்கள் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொள்கின்றனர். ரயில்வே ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்கின்றனர். இந்த நிலை தொடர விட முடியாது. ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை தோற கடிக்கும் நாளை மக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.

-இப்படி அவர் கூறினார்.

'நுஆ' தலைவி பேரியல் அஷ்ரப் பேசுகையில் தெரிவித்ததாவது:-

இந்த நாட்டை சகல தரப்பினரிடமிருந்தும் மீட்டெடுக்க அமைக்கப்பட்ட கூட்டணிக்கு வாழ்த்துத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமக்கு என்ன நடக்கப்போகின்றதென கிழக்கு மாகாண மக்கள் பிரமை பிடித்தவர்களாக இருக்கின்றனர். இன, மத, கட்சி பேதம்பாராமல் அனைத்து மக்களும் இதே நிலையில் இருக்கின்றனர். எனவே இந்தக் கூட்டணியில் இணைந்து இந்த நிலையை மாற்ற ஏனைய கட்சிகளும் முன்வர வேண்டும்.

-இப்படி அவர் தெரிவித்தார்.


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட டாக்டர்கள் சிபார்சு செய்வது

றோயல் குளுக்கோஸ்

100/% சுத்தமானது!

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல் றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!

Packed By: Royal Industries, Colombo. ☎ 0112334603




ஏக விநியோகத்தர்கள்:
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎: 021 222 2567

சத்திரத்துச் சந்திக்கு அருகில் ⇨


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| பிறப்பு | | இறப்பு |
| --- | --- | --- |
| 02 |  | 01 |
| 02 | | 01 |
| 1917 | | 2004 |

### திருமதி இராசமணி சரவணமுத்து

*மண்ணிலே நல்ல வண்ணம் மாந்தருள் திலகமாய் வாழ்ந்த*
*புண்ணிய புனிதவதியே! உங்கள் நினைவுகள் எங்களுடன் கலந்து*
*கண்ணிய வாழ்வையே காலமெல்லாம் நினைக்கச் செய்யும்*
*எண்ணிலாத வேதனையை நாம் எப்படித்தான் தாங்குவது?*

*உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*உங்கள் நினைவில் வாழும்:*
**- மகன் குணரத்தினம் குடும்பத்தினர்.**

சங்கானை கிழக்கு,
பண்டத்தரிப்பு.
(C/32925) (26-14-18)


## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள
LETTER PRESS MACHINE,
OFFSET MACHINE
விற்பனைக்கு உண்டு.

*தொடர்பு:* தாரணி பதிப்பகம்,
319, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(சி-32955)


## யா/இணுவில் மத்திய கல்லூரி

வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி - 2004
**மேற்பிரிவு**

இடம்: கல்லூரி மைதானம் (இணுவில் கந்தசுவாமி கோயிலருகில்)
காலம்: இன்று (31.01.2004) சனிக்கிழமை
நேரம்: பி.ப.2.00 மணி
தலைவர்: திரு.துரைஎங்கரசு (கல்லூரி அதிபர்)
பிரதம விருந்தினர்: திரு.ந.யோகேந்திரராஜா (கணக்காளர், வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம்)
சான்றிதழ் வழங்குபவர்
திருமதி ரதிராணி யோகேந்திரராஜா (விரிவுரையாளர், வணிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
சிறப்பு விருந்தினர்: திரு.செ.குபேரநாதன் (கோட்டக் கல்விப் பணிப்பாளர், உடுவில் கோட்டம்)

*அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.*

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
கல்லூரிச் சமூகம்.

(27776) (34-26-14-18)


# புரோட்டினெக்ஸ்®

நாள்தோறும் இழக்கும் சக்தியை மீட்டுத்தருகிறது.

100% தாவரப் புரதம்

கொலஸ்ரோல் அற்றது

15 விட்டமின்களும் கனியுப்புக்களும் அடங்கியது.




போஷணைகள்: புரோட்டீன், விற்றமின் A, விற்றமின் C, விற்றமின் D3 விற்றமின் E, விற்றமின் K3, விற்றமின் B1, விற்றமின் B2, விற்றமின் B6, விற்றமின் B12, நயசினமைட், D-பன்தனோல், பயோட்டின் (f)போலிக்கமிலம், கல்சியம், பொஸ்பரஸ், இரும்பு, கோலின், மோல்ட்.

Astron — Astron Limited., 688, Galle Road, Ratmalana, Sri Lanka.
Tel : 636741 Fax: 636173 E-mail: astron@astron.lk


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| மண்ணில் | | விண்ணில் |
| --- | --- | --- |
| 15 |  | 30 |
| 05 | | 12 |
| 1917 | | 2003 |

### அமரர் சிதம்பரப்பிள்ளை ஆறுமுகநாதன்

(முன்னாள் கப்பல் முகவர் V.M. வடிவேலு அன்ட் கம்பனி உரிமையாளர்)

எமது அன்புத் தந்தை மறைந்த செய்தியை அறிந்தவுடன் தாமாகவே ஓடோடிவந்து எமக்குப் பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் தபால் மூலமும் தொலைபேசி மூலமும் அனுதாபச்செய்திகளை அனுப்பியவர்களுக்கும் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறோம்.

**அன்பின் திருவுருவாய் பாசத்தின்**
**பிறப்பிடமாய் பண்பின் சிகரமாய் ஊர்**
**புகழும் உத்தமராய் வாழ்ந்து எமக்கு**
**வழிகாட்டிய தந்தையே!**

*உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*150, உட்துறைமுக வீதி,*
*திருகோணமலை.*
*தொ. பே. 026-2223189.* (C/32579)

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(35-14-18-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரக்கட்சி-ஜே.வி.பி. கூட்டுக் குறித்து யாழ்.மக்கள் எவருக்கும் திருப்தியில்லை

கொழும்பிலிருந்து வெளியாகும் பத்திரிகைகள் போன்றே யாழ்ப்பாணத திலிருந்து வெளிவரும் பத்திரிகைக ளின் கடந்த 21ஆம் திகதிய வெளி யீடுகளின் தலைப்புச் செய்தியாக அமைந்த விடயம் கூட்டு உடன்பாடா கும். அதாவது ஸ்ரீல.சு.கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டு உடன்பாடே அதுவாகும்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியா கும் தினசரிப் பத்திரிகைகளில் அதிக அளவில் விற்பனையாகும் பத்திரிகை 'உதயன்' பத்திரிகையாகும். மேலே குறிப்பிட்ட தினத்தன்று வெளியான உதயன் பத்திரிகையின் செய்தியில் தேசிய ரீதியில் அதிகாரப் பகிர்வு என் கிறது ஸ்ரீலசு. கட்சி; "கிராமம் வரை நி வாகப் பரவலை எடுத்துச்செல்வோம் என்கிறது ஜே.வி.பி." எனக் குறிப்பிடப் பட்டிருந்தது.

குறிப்பிட்ட திகதிய 'உதயன்' பத்தி ரிகை தனது மற்றொரு சிறிய தலைப் புச் செய்தி மூலம் விடுதலைப் புலி கள் உட்பட சகல கட்சிகளுடனும் பேச்சு மேற்கொள்ளப்படுமென இக் கூட்டு உடன்பாட்டில் குறிப்பிடப்பட் டுள்ளது என்ற செய்தியையும் வெளிக் கொணர்ந்திருந்தது. இக்கருத்து வெளிப்பாட்டை விடுதலைப் புலிகள் அமைப்பே தமிழ் மக்களின் ஏகபிர திநிதிகள் என்ற கருத்தை ஏற்றுக் கொள்ள இயலாதென நிறுவ மேற் கொள்ளும் உத்தியாகக் கருத இயலும் அதேபோன்று நிபந்தனையின் பேரி லேயே இவ்வித பேச்சுகள் மேற்கொள் ளப்படுமென்ற கருத்தும் வெளிப்படுத் தப்பட்டிருந்தது.

## உதயன் ஆசிரிய தலையங்கம்

அன்றைய உதயன் பத்திரிகை யின் ஆசிரிய தலையங்கம் "யுத்தமா? சமாதானமா? தீர்மானியுங்கள்" என்ற தலைப்பில் தீட்டப்பட்டிருந்தது. அந்த ஆசிரிய தலையங்கத்தில் நாம் இதற்கு முன்னரும் சுட்டிக்காட்டியுள்ள விதத் தில் சமாதானத்தின் சாவுமணி ஒலிக் கத் தொடங்கியுள்ளது. மேடையில் அரங்கேறிய நாடகம் முடிந்து திரை இறக்கப்பட்டு விட்டது. ஒப்பந்தம் கைச் சாத்திடப்பட்ட வேளையில் ஜே.வி. பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா ஐக்கிய இலங்கைக்குள் பொது மக்களுக்குச் சமமான உரிமைகளை வழங்குவதன் மூலம் இனப்பிரச்சினைக் குத் தீர்வு காண்பதே ஜே.வி.பியின் கொள்கை நிலைப்பாடாகுமெனத் தெரி வித்திருந்தார். அதிகாரப் பரவலாக் கத்தை ஜே.வி.பியினர் எதிர்த்து வரு கின்றனர். உண்மையில் இனப்பிரச்சினை விடயத்தை ஒருபுறம் ஒதுக்கிவைத்து விட்டு ஸ்ரீல.சு.கட்சி மற்றும் ஜே.வி.பி. ஆகிய இருதரப்பினரும் தம்மிடையே யான உடன்படிக்கையை உருவாக்கி யுள்ளனர். இனப்பிரச்சினைக்கான தீர்வு வழிகள் குறித்து எவ்வித விவரங்க ளும் அவ்வொப்பந்தத்தில் இடம்பெற் றிருக்கவில்லை.

இது அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந் தம் என்பது வெளிப்படையாகத் தெரி கிறது. ஆனால், இந்த ஒப்பந்தத்தில் அதிகாரப் பகிர்வு விடயம் குறித்து எவ்வித விவரமும் தெரிவிக்கப்பட்டி ருக்கவில்லை. தென்பகுதி வாழ் சிங்கள மக்கள் தற்போது இவ்விடயம் குறித்து சிந்திக்க வேண்டியது அவசியமாகும். கௌரவமிக்க மனிதர்களாக வாழக் கூடிய வகையிலமையும் தீர்வுத் திட் டங்களே இன்று தமிழ்மக்களுக்கு அவ சிய தேவையாகியுள்ளது. அவ்வாற மையாது போகுமானால், வேறு வகை யிலான தீர்வு நோக்கித் தமிழ்மக்கள் பயணிப்பதற்குச் சந்தர்ப்பம் உரு வாகும்" எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

## சந்தர்ப்பவாதக் கூட்டணி

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியி டப்படும் மற்றொரு தினசரிப் பத்திரி கையின் பெயர் "நமது ஈழநாடு". கடந்த 21ஆம் திகதிய 'நமது ஈழநாடு' பத்திரிகையின் பிரதான தலைப்புச் செய்தியாக ஸ்ரீல.சு.க. மற்றும் ஜே.வி. பிக்கு இடையிலான உடன்படிக்கை கைச்சாத்தானமை பற்றிக் குறிப்பிடப் பட்டுள்ளதுடன், இரண்டாவது தலைப் புச் செய்தியில் "அதிகாரப் பரவலாக் கல் திட்டத்துக்கு சோமவன்ச அமர சிங்க எதிர்ப்பு" என்பது தொடர்பான செய்தி உள்ளடக்கப்பட்டிருந்தது.

அத்துடன், இந்த உடன்படிக்கை கைெ யழுத்திடப்படும் நிகழ்ச்சி தொடர்பான இரு புகைப்படங்களும் முதற்பக்கத் தில் வெளியிடப்பட்டிருந்தன.

மேலும் கடந்த 21ஆம் திகதிய 'நமது ஈழநாடு' பத்திரிகையின் முதற் பக்கச் செய்திகளில் ஒன்றாக இந்த உடன்பாடு கைச்சாத்திடப்படும் நிகழ்ச சியுடன் தொடர்புடைய புத்தளம் பகுதி



தென்னிலங்கையைச் சேர்ந்த பிரபல பத்திரிகையாளரும் ஆய்வாளருமான சுனந்த தேசப்பிரிய கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவர் இங்கு வெளியாகும் பத்திரிகைகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் ஜே.வி.பி. – ஸ்ரீல.சு.கட்சி கூட்டுத் தொடர்பாக தெரிவித்த கருத்துக்களை கட்டுரை வடிவில் "ராவய" பத்திரிகையில் வெளியிட்டுள்ளார். அக்கட்டுரையின் தமி ழாக்கத்தை இங்கு தருகிறோம்.

யில் இடம்பெற்ற மோதல் சம்பவமொன் றில் ஸ்ரீல.சு.கட்சி ஆதரவாளர்களிரு வர் உயிரிழக்க நேர்ந்தமை குறித்த செய்தியும் இடம்பெற்றிருந்தது.

அத்துடன், அதிகாரப் பகிர்வு தொடர் பாக இவ்வுடன்படிக்கையில் சம்பந்தப் பட்ட இரு தரப்பினிடையேயும் கருத்து வேறுபாடுகள் காணப்படுவதாகவும், முரண்பாடான நிலையிலேயே இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள் ளதாகவும் ல.ச.ச.கட்சித் தலைவர் பட்டி வீரக்கோன் தெரிவித்த கருத்துத் தொடர்பான செய்தியும் அந்தப் பத் திரிகையின் முன்பக்கச் செய்தியாகப பிரசுரிக்கப்பட்டிருந்தது.

குறிப்பிட்ட பத்திரிகையின் கடந்த 21ஆம் திகதிய ஆசிரிய தலையங்கத் தில் இந்த உடன்பாடு நாட்டின் தேசி யப் பிரச்சினைக்கு எவ்வித தீர்வை யும் வழங்கப்போவதில்லை எனக் கருத்து வெளியிடப்பட்டிருந்தது. அத் தோடு சமாதான நடவடிக்கைகளுக்கு எதிரான கருத்துக் கொண்டுள்ள சந் தர்ப்பவாதக் கூட்டணியான இக்கூட் டணி மூலம் எதிர்காலத்தில் சிக்கல் கள் உருவாகக் கூடுமெனவும் கருத்து வெளியிடப்பட்டுள்ளது. இக்கூட்டணி யில் அங்கம் வகிக்கும் இரு தரப்பின ரும் ஒருவர் மீது மற்றவர் அவநம்பிக் கையுடன் செயற்படுவதாகவும், ஒரு வரை மற்றவர் பொறிக்குள் தள்ளி விடும் அணுகுமுறையைக் கடைப்பிடிப் பதாகவும் குறிப்பிட்ட ஆசிரிய தலை யங்கத்தில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதன்படி இக்கூட்டணி பொதுத் தேர்த லொன்றுக்கு வழியமைத்து முழு நாட் டிலும் சிக்கல்கள் உருவாக வழிவகுக்கு மெனக் கருதமுடிகிறது.

## மக்கள் கருத்து

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியா கும் மற்றொரு தினசரிப் பத்திரிகை யான 'வலம்புரி' யின் பிரதியைப் பெற் றுக்கொள்ளமுடியவில்லை. கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இரு நக ரங்களிலும் அச்சிடப்பட்டு வெளிவரும் மற்றொரு தினசரிப் பத்திரிகையான "தினக்குரல்" கடந்த 21ஆம் திகதிய தனது வெளியீட்டில் முதற்பக்கச் செய் தியாகப் பிரசுரித்திருப்பதும் இக்கூட்டு ஒப்பந்தம் தொடர்பான செய்திகளே. ஆயினும் அன்றைய தினக்குரலின் ஆசி ரிய தலையங்கம் தோட்டத் தொழி லாளர்களின் உரிமைகள் தொடர்பா கவே தீட்டப்பட்டிருந்தது.

இதனிடையே நான் அன்று பிற்பகல் யாழ்ப்பாண நகரத்தில் பல தரப்பட்ட பொதுமக்களைச் சந்தித்து ஸ்ரீல.சு. கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையி லான கூட்டு ஒப்பந்தம் குறித்த அவர் களது கருத்தைத் திரட்டுவதில் அக் கறை எடுத்துக் கொண்டேன். எனது இந்த முயற்சியின் போது யாழ்ப்பாண மக்களில் பலர் இக்கூட்டு உடன்படிக்கை தொடர்பாக தெரிந்து வைத்துள்ளனர் என்ற விடயத்தை என்னால் அவதா னிக்க முடிந்தது. அவர்களில் சிலர் 'சக்தி' தொலைக்காட்சிச் செய்தி நிகழ்ச்சி மூலமும் மற்றும் பலர் நாளி தழ்களின் செய்தி மற்றும் வானொலிச் செய்தி நிகழ்ச்சி என்பவற்றினூடாக இக்கூட்டு ஒப்பந்தம் குறித்து அறிந்து வைத்துள்ளதை என்னால் அறிந்து கொள்ளமுடிந்தது.

இக்கூட்டணி தொடர்பாக யாழ்ப் பாணப் பொதுமக்களின் கருத்தை அறிய முயன்ற சமயம், ஜே.வி.பியின ரின் நிலைப்பாடு குறித்து அவர்கள் எவ்வித அதிருப்தி கொண்டுள்ளன ரென்பதை உணரக்கூடியதாகவிருந் தது. ஜே.வி.பி. ஒரு இனவாத மற்றும் தமிழர் விரோதப் போக்குடைய கட்சி யென்ற எண்ணமே சாதாரண தமிழ் மக்களின் மனங்களில் நிலை கொண் டுள்ளது. அதேபோன்று அது தமிழர் கள் மத்தியில் தன்னை ஒரு பௌத்த மத ஆதரவுக் கட்சியாக இனங்காட்டி யுள்ளதாகவும் உணரமுடிகிறது.

## பிரபாவுடனே பேச்சு

யாழ்ப்பாணத்தில் மீனவ சமூகத் தினர் செறிந்து வாழும் குருநகர் பிர தேசத்தில் தொழிலுக்காகக் கடலுக்குப் புறப்படத் தயாராயிருந்த ஆனந்தன் என்ற கடற்றொழிலாளியைச் சந்தித்த வேளையில் இக்கூட்டு உடன்பாடு பற் றிய அவரது கருத்தை அறிய முயன் றேன்.

அவர் எனது பேச்சை இடைமறித்து "எமது வாழ்க்கைப் பிரச்சினை



குறித்து உங்கள் பத்திரிகையில் எழு துவது இக்கூட்டு உடன்பாடு குறித்து எமது கருத்துக்களை எழுதுவதை விட நல்லதல்லவா?" என வினவினார்.

"நாம் இந்நாள்களில் மாலை வேளை களிலே தொழிலுக்குக் கடலுக்குச் செல்கிறோம். ஆனால், எந்தவொரு அவசர தேவை ஏற்பட்டாலும் கூட மறு நாள் காலைக்கு முன்னர் நாம் கரை திரும்ப அனுமதிக்கப்படுவதில்லை என அக்கடற்றொழிலாளி வருத்தத் துடன் கூறினார். அவர் நமது நாட்டு அரசியல் நிலைபற்றி என்ன கருத்துக் கொண்டுள்ளாரென அறிய விரும்பிய எனக்கு அவர் நீண்டதொரு பிரசங்கமே நிகழ்த்திவிட்டார்.

"ரணிலினால் எமக்கு உதவிகள் கிட்டுவதாயின் அவை கடந்த இரண்டு ஆண்டு காலப்பகுதியில் கிட்டியிருக்க வேண்டும். ஆனால், அவ்விதம் எதுவும் நடைபெறவில்லையல்லவா? ஜனாதிபதி ஜே.வி.பியுடன் உடன்பாடு செய்து கொண்டது பற்றி எமக்குத் தெரியும். இனிமேல் சந்திரிகாவையும் நம்ப முடி யாது. ஏனென்று தெரியுமா? தாம் பத விக்கு வரமுடிந்தால் யுத்தம் காரணமாக மீண்டும் பெண்கள் விதவைகளாவதற்கு இடமளிக்கப்போவதில்லையெனச் சந்திரிகா 1994இல் தெரிவித்திருந்தார். ஆனால், உண்மையில் பெருமளவில பெண்கள் தமது கணவர்மாரை இழக்க நேர்ந்தது அவர் பதவிக்கு வந்ததன் பின்னரல்லவா? ஜே.வி.பியினரால் எமக்கு எவ்வித பயனும் கிட்டப்போவ தில்லை. எமது பிரச்சினை அதுவல்ல. எவர்தான் பதவிக்கு வந்தபோதிலும் பிரபாகரனின் உதவியின்றி எதனையும் நிறைவேற்ற முடியாது. அவர்கள் அர்ப் பணிப்புடன் போரிடுபவர்கள். பிரபாகர னுடன் பேசிக்கொள்ளாது பிரச்சினையைத் தீர்க்கமுடியாது. இக்கூட்டணியின ருக்கு நான் இவற்றைத்தான் கூற முடி யும். அவர்கள் இந்த யதார்த்தத்தை யானைப் பசிக்கு சோளப்பொரி வழங் குவதில் எவ்வித பயனுமில்லை என்ப தைப் புரிந்துகொள்ளவேண்டும்."

அக்கடற்றொழிலாளியின் மனநிலை இவ்விதம் வார்த்தைகளாக வெளிவரு வதை என்னால் உணரமுடிந்தது.

எனது இவ்விதக்கருத்துத் தேட லின் போது இளைப்பாறிய கல்லூரி அதிபரான பத்மநாதன் என்பவரையும் சந்திக்க நேர்ந்தது. அச்சந்திப்பின் போது ஜனாதிபதி சந்திரிகா தொடர் பாகப் பிரதமர் ரணில் வெளிப்படுத்தி வரும் நிலைப்பாட்டைத் தம்மால் ஏற் றுக்கொள்ள முடியாதென அவர் கருத்து வெளியிட்டார்.

## ரணிலின் நிலைப்பாட்டின் விளைவே புதிய ஒப்பந்தம்

மேலும் "பிரதமரின் அமைச்சரவைச சகாக்கள் ஜனாதிபதிக்கு மதிப்பளிக் காது அவரைக் கேலி செய்யும் வகை யில் கருத்து வெளியிட்டு வந்துள்ள னர். ஜனாதிபதி அமைதியான முறை யில் அமைச்சரவைக் கூட்டங்களுக் குத் தலைமை வகிப்பதற்கு அவர்கள் இடமளித்ததில்லை. இந்த அவமரி யாதை காரணமாகவே அவர் ஜே.வி. பியினரின் சட்டைப் பையினுள் விழ நேர்ந்துள்ளது. விடுதலைப் புலிகளுடன் ரணிலுக்குப் புரிந்துணர்வுடன் செயற் படமுடியுமானால் அவரால் சந்திரிகா வுடன் அவ்விதம் ஏன் செயற்பட முடி யாது? இக்கூட்டு ஒப்பந்தத்துக்கு வழி வகுத்ததே ரணிலின் இவ்வித நிலைப் பாடுதான்" எனவும் அவர் தெரிவித்தார்.

"தற்போது சந்திரிகா ஜே.வி.பியி னருடன் கூட்டுச் சேர்ந்துள்ளார். இக் கூட்டு பயனளிக்க வேண்டுமானால் ஜே.வி.பியினர் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள வேண்டும். அண்மைக் காலமாக, விசேடமாக அவர்கள் தமிழ மக்கள் மற்றும் சமாதான நடவடிக் கைகள் தொடர்பாக விரோதப் போக்கை வெளிப்படுத்தி வருகின்றனர். இது இவ் விதமே தொடருமானால் தமிழ் மக்கள் ஸ்ரீல.சு.கட்சி மற்றும் ஜே.வி.பியினரின் கூட்டணி மீது நம்பிக்கை வைக்கப் போவதில்லை. அந்தவகையில் ஜே.வி. பியின் அதிகாரப் பகிர்வுத் திட்டத்தைத் தாம் உறுதியாக எதிர்ப்பதாகத் தெரி வித்து வருகின்றனர். 2000ஆம் ஆண் டில் ஜனாதிபதியின் தலைமையிலான ஸ்ரீல.சு.கட்சி தீர்வுத் திட்டமொன்றை முன்வைத்தது. அண்மையில் விடுத லைப் புலிகள் அமைப்பு தீர்வு தொடர் பான தமது யோசனைகளை முன் வைத்துள்ளனர். இந்நிலையில் ஜே.வி. பியினருடன் இணைந்து கொண்டுள்ள நிலையில் ஜனாதிபதியால் எவ்விதம சமாதானத் தீர்வு குறித்து நடவடிக்கை மேற்கொள்ள இயலும்?

## கூட்டு ஒப்பந்தம் குறித்து மக்கள் அதிருப்தி

"ஜே.வி.பி. தனது இனவாத, தமி ழர் விரோத நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவேண்டும். யாழ்ப்பாணப் பொது மக்கள் தற்போதைய கூட்டு உடன் பாட்டைச் சந்தேகக் கண்ணுடனேயே பார்க்கின்றனர். நான் பலருடன் இக் கூட்டுஒப்பந்தம் குறித்து கலந்துரையா டியுள்ளேன். நான் சந்தித்த சகலரும் இது குறித்து அதிருப்தி கொண்டுள்ள தாகவே தோன்றுகிறது. இக்கூட்டணி ஒருவேளை பொதுத்தேர்தலில் வெற் றியடையக்கூடும் ஆனால், அதன் மூலம் எமக்கு எவ்விதபயனும் கிட்டப்போவ தில்லை" எனக்கூறி தனது நீண்ட கருத்து வெளிப்பாட்டை அவர்கள் முடித்துக்கொண்டனர்.

யாழ்ப்பாண நகரத்தின் நடுவில் அமைந்துள்ள 'மகாராணி ரெக்ஸ்ரைலஸ்' பெருடைய புடைவை விற்பனை நிலை யத்தின் உரிமையாளரான சோமசே கரம் என்பவருடனும் இவ்விடயம் தொடர் பாக கலந்துரையாட முடிந்தது.

"தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள இக்கூட்டு ஒப்பந்தத்தின காரணமாக சமாதான நடவடிக்கைகளுக்கு நன்மை கிட்டுமென எந்தவிதத்திலும் நம்ப முடியவில்லை. ஜே.வி.பி.ஒரு தமிழர் விரோதப்போக்குடைய கட்சி என்பது நாம் சகலரும் அறிந்தவிடயமே. அதி காரப்பகிர்வுக்கு ஆதரவாகச் செயற் பட்ட சிங்களத்தலைவர்களையும் கொன்றொழித்தவர்கள் இந்த ஜே.வி. பியினரே. அதுமட்டுமின்றி இச்சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டது முதலே அதனைமுறிவடையச் செய்யும் முயற் சிகளையும் மேற்கொண்டவர்கள ஜே.வி.பி.யினரே.

தற்போது அதிகாரத்தைக் கைப் பற்றும் நோக்கிலேயே இந்த் உடன் படிக்கை செய்யப்பட்டுள்ளது. இவ்விரு தரப்பினர்களும் அதிகாரத்தைக் கைப் பற்றுவதிலேயே குறியாகவுள்ளனர். அதேவேளை மற்றொரு புறம் இப்பிரச் சினைக்குத் தீர்வுகாணும் நடவடிக்கை களில் தொடர்ந்து செயற்படுவதற்கு ஐ.தே.கட்சி மற்றும் ஸ்ரீல.சு.கட்சி ஆகிய இருதரப்பினரும் அஞ்சுவதாகத் தோன்று கிறது.

"சமாதான முயற்சிகள் தொடர்பாக சகல சந்தர்ப்பங்களிலும் ஏதோவொரு அரசியற் கட்சி எதிர்ப்புதெரிவித்து வருவதால் மீண்டும் யுத்தமொன்று உருவாகக்கூடுமா? என்ற கேள்விக்குப் பதிலளிக்க நான் விரும்பவில்லை. எவ்வாறான போதிலும் தமிழ்ப்பொது மக்கள் எவரும் யுத்தக்கலாசாரத்தை விரும்பவில்லை என்று கூறித்தானாக வேண்டும் எமக்குத் தற்போது தேவையா னது சமாதானமே. அதேவேளை கடந்த இரண்டாண்டுகாலப்பகுதியில் சிற்சில அபிவிருத்தி நடவடிக்கைகள் இடம் பெற்றுள்ளதை ஒப்புக்கொண்டாக வேண்டும். யதார்த்தத்தில் இதை நேர டியாக உணரக்கூடியதாகவுள்ளது என்று அவர் கருத்துத்தெரிவித்தார்.

## பாடசாலை அதிபரின் கருத்து

நல்லூர் கந்தசுவாமி கோயிலின் மாலைவேளைப் பூசையைக் காண வந்திருந்த மற்றொரு இளைப்பாறிய கல்லூரி அதிபரும் கவிஞருமான தில் லையம்பலம் சிவசாமி என்பவரையும் சந்தித்து அவரது கருத்துக்களையும் என்னால் கேட்டறிந்து கொள்ளமுடிந்தது.

"ஸ்ரீல.சு.கட்சி மற்றும் ஜே.வி.பி. ஆகிய தரப்புகளுக்கிடையிலான இக்கூட்டு ஒப்பந்தம் மூலம் பெரிய அள விலான மாற்றமெதுவும் ஏற்படப்போ வதில்லை. ஸ்ரீல.சு.கட்சி தற்போது நலிவடைந்து செல்லும் நிலையில் உள்ளது. இக்கூட்டின் காரணமாக ஜே.வி.பிக்கும் ஒருசில நாடாளுமன்ற ஆசனங்கள் கூடுதலாக கிடைக்கக் கூடும். அதுகூட தற்போது ஸ்ரீல.சு. கட்சியிடம்இருந்து வரும் ஆசனங்க ளையே ஜே.வி.பியினர் கைப்பற்றக் கூடும். இந்த நடவடிக்கைகளின் பின் னணியில் வெளிநாடொன்று சம்பந்தப் பட்டிருப்பதாகவே நான் கருதுகிறேன். பழைய இடதுசாரிகள் எவரும் தற்போது அரசியல் களத்திலில்லை. தற்போது ஜே.வி.பி. அவர்களின் இடத்தைப்பிடித் துக்கொள்ள முனைகிறது. தாம் பொது

**வீயெஸ்ரி**

மக்களுக்குச் சேவைசெய்யவே அர சியலில் ஈடுபடுவதாக அவர்கள் கூறிக் கொள்கின்றனர். ஆனாலும் அவர்கள் இனவாதம் கக்குகின்றனரே? அப்படி யானால் தமிழர்களை இந்நாட்டின் பொதுமக்களாக ஜே.வி.பியினர் கருத வில்லையா?

"ஜனாதிபதியும் பிரதமரும் இந் தத் தருணத்தில் ஒன்றிணைந்து புரிந் துணர்வுடன் செயற்பட முன்வருவார்க ளேயானால், நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என்பது எனது கருத்தாகும். யுத்தம் மீண்டும் இடம் பெறுமா எனக்கூறுவது கடினமான ஒன்றாகும். இவ்விரு தலைவர்களும் ஒன்றிணைந்து செயற்பட முன்வந்தால இனப்பிரச்சனைக்குத் தீர்வுகண்டு சமா தானத்தை நிலைநிறுத்த இயலும் என் பது அந்த இளைப்பாறிய கல்லூரி

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டைதீவு எதிர்கொள்ளும் போக்குவரத்து அவலங்கள்

செய்திக்கட்டுரை

மண்டைதீவுச் செய்தியாளர்

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்டபோது தமது அன்றாட அவலங்கள் தீர்ந்துவிடும் என்று குடாநாட்டுமக்கள் எதிர்பார்த்தனர். அதிலும் தீவுப்பகுதி மக்களிடம் இந்த எதிர்பார்ப்பு அதிகமாகவே இருந்தது. ஆனால், தற்போது அதிக ஏமாற்றத்தைச் சந்தித்தவர்களாகவும் தீவக மக்களே உள்ளனர். அவர்களிலும், மண்டைதீவுக் கிராம மக்கள் அன்றாட அவலங்கள் மேலும் அதிகரித்துச்செல்லும் நிலையைச் சந்தித்து வருகின்றனர். குறிப்பாக மண்டைதீவுக் கிராம மக்கள் தரைப்போக்குவரத்தை மேற்கொள்வதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

மண்டைதீவுக் கிராமத்தில் 1970 ஆம் ஆண்டிற்குப்பின், வீதிகள் உரிய முறையில் திருத்தப்படவில்லை. இதனால், வாகனங்களும் பொதுமக்களும் பெரும் அவலங்களைத் தினமும் சந்திக்க நேரிடுகிறது.

இந்தக் கிராமத்தின் பிரதான வீதி மண்டைதீவு மகா வித்தியாலயத்தின் தெற்கில் உள்ள பஸ்தரிப்பிடத்தில் ஆரம்பித்து சிறுப்புலம் சந்தி, சித்தர் சந்தி மற்றும் அம்மன் கோவில் சந்தியூடாகப் பண்ணைச் சந்தியை அடைகிறது. இந்தவீதி போக்குவரத்திற்கு சிறிதும் பொருத்தமற்றதாகவுள்ளது.

### போக்குவரத்து அவலம்

பண்ணையில் இருந்து சம்புக்குளம் வரையான வீதி 1997ஆம் ஆண்டு தற்காலிகமாக சீர்செய்யப்பட்டது. ஆனால், மீண்டும் அந்த வீதி குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது. வீதி திருத்தப்பட்டபொழுது அதன் கரையோரப் பகுதிகள் சீராக செப்பனிடப்படாததால் வீதி ஒடுங்கிவிட்டது. இதனால், வாகனங்கள் விலகிச் செல்வதில் சிரமம் இருப்பதுடன் விபத்து ஏற்படும் ஆபத்தும் உள்ளது.

இந்த வீதியில் உள்ள மதகுகள் மிக ஒடுக்கமானவை. இத்துடன், "வழியிற்பிள்ளையார்" கோயிலுக்கண்மையில் உள்ள ஏழுகண்பாலம் (பெரிய மதகு) பிரதான ஓடையை இணைப்பதாகும். பலகாலமாக இதன் கட்டுகள் உடைந்தே உள்ளன. மண்நிரப்பிய பரல்களை வைத்து கடற்படையினர் மதகின் மேலதிக சேதத்தை தடுத்துள்ளனர். இந்த மதகின் நடுப்பகுதி காலத்திற்குக் காலம் உடைவதும் பெரியகற்களைப் போட்டு நிரப்புவதும் வழக்கமாகிவிட்டது. இது நிரந்தரமாகத் திருத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

### 'தார்' காணாத வீதி

அம்மன் கோயில் வீதிச்சந்தியில் இருந்து கிழக்காகச் சென்று கோயிலின் பின்வீதியால் திரும்பி சித்தர் சந்தி ஊடாகச் சிறுப்புலம் வரை உள்ள 'ப' வடிவ கிழக்கு வீதி 33 வருடங்களாக 'தார்' வாசமே காணாது உள்ளது.

இந்த வீதியில் அம்மன் கோயில் வரையான வீதியே படுமோசமாக உள்ளது. நீண்டகாலப் பாவனையாலும் பராமரிப்பு இல்லாததாலும் வீதியின் அடித்தளக்கற்கள் துருத்திக்கொண்டு நிற்கின்றன. இந்த வீதியில் செல்லும் வாகனங்கள் பலவற்றின் வில்லுத் தகடுகள் உடைந்த சம்பவங்கள் இந்த வீதியின் சீர்கேட்டிற்குச் சிறந்த உதாரணமாகும்.

இந்த வீதியில் பேதுருவானவர் தேவாலய முன்பகுதியில் இருந்து அப்பாத்தம்பி சந்திவரையான வீதி போக்குவரத்திற்கு மூடப்பட்டுள்ளது. இது உயர் பாதுகாப்புவலயத்துக்குள் அடங்குவதால் முதலாம், 2ஆம மற்றும் 4ஆம், 5ஆம், 3ஆம் வட்டாரங்கள் ஊடான பஸ் போக்குவரத்தும் தடை செய்யப்பட்டுள்ளது.

இருந்தபோதும், அண்மையில் முதலாம், இரண்டாம் வட்டாரங்களில் மீளக்குடியமர்ந்தவர்களும் நாலாம் வட்டாரத்தின் கடற்கரைப் பகுதியில் உள்ள புதிய குடியேற்றத் திட்டத்தில் வசிப்பவர்களும் கிழக்கு வீதியையே பயன்படுத்துகின்றனர். இந்த வீதியின் வீதியோர குடியிருப்பாளர்கள் பெருமளவில் குடியமரவில்லை. சிலர் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை. இப்பகுதியில் வேலியோர மரங்கள் சடைத்து வளர்ந்துள்ளன. வாகனங்கள் இவற்றின் கிளைகளை முட்டி மோதியே செல்லுகின்றன.

### 'புதைகுழி' வீதி

தற்போது உயர் பாதுகாப்பு வலயப்பகுதியைச் சுற்றி வயல் வெளிக்கூடாக சம்புக்குளத்திலிருந்து அப்பாத்தம்பி சந்தி வரை அமைக்கப்பட்ட மண்வீதியூடாகவே பஸ் போக்குவரத்து நடைபெறுகிறது. இந்த மண்வீதி, போக்குவரத்து அதிகார சபைக்கு உட்படாத தற்காலிக வீதி என்பதால் கல், தார் கொண்டு செப்பனிடப்படவில்லை. மழைகாலத்தில் சேறும் சகதியுமாகக் காணப்படும் இந்த வீதியில் வாகனங்கள் புதைவதுடன் விபத்துக்களும் ஏற்படுகின்றன.

அண்மையில் 'நிக்கொட்' நிறுவனத்தினர் கழிப்பறைகள் கட்டுவதற்கு பொதுமக்களுக்கு வழங்கிய சிமெந்து மூடைகளை ஏற்றிவந்த லொறி ஒன்று புதைந்ததால் அந்த வீதியாலான அன்றைய போக்குவரத்துத் தடைப்பட்டது. மாற்றுவழியைப் பயன்படுத்த இயலாததால் போக்குவரத்துச் சபை 'பஸ்' சம்புக்குளத்துடன் தனது சேவையை நிறுத்தியது.

இதே வீதியில் சறுக்கித் தடம் புரண்ட மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்த நபர் ஒருவர் உயிரிழந்த சம்பவமும் நடந்தது. இது மண்டைதீவு எதிர்கொள்ளும் அவலங்களுக்கு எடுத்துக்காட்டாகும்.

இந்த மண்வீதியின் இருபுறமும் வைக்கப்பட்டிருந்த பனை மரக்குற்றிகளால் ஆன அணைப்புக்கள் காணாமல் போனதால் வீதி மண் விரைவாக மழை நீரில் கரைந்து போயுள்ளது. இந்த வீதியை அமைப்பது, வீதித் தடைகளை அகற்றுவது போன்ற சிரமதானப் பணிகளில் கடற்படையினரே பெருமளவில் ஈடுபட்டுவருகின்றனர்.

ஆகவே, மண்டைதீவுக் கிராமத்தின தரைப் போக்குவரத்தில் உரியவர்கள் கரிசனை செலுத்தவேண்டும்.✳

# 'டைனமட்' மூலம் மீன்பிடிப்பதை தடுக்கத் தீவிர நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.31

யாழ். குடாநாட்டு கடற்பிரதேசத்தில் 'டைனமட்' வைத்து மீன் பிடிப்பதைத் தடுக்கும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச சம்மேளனம் அறிவித்துள்ளது.

சம்மேளனத்தின் தலைவர் அ.அன்ரனிலென்சஸ்கோஸ் தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் இந்தத் தடை குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

குடாநாட்டில் இரணைதீவு, கற்கடகத்தீவு, பாலைதீவு, மண்டைதீவு ஆகிய கடற்பகுதிகளில் 'டைனமட்' வைத்து மீன் பிடிக்கப்பட்டு வருகின்றது.

இதனால், மீன்வளம் அருகிப் போவதுடன் பிடிக்கப்படும் மீன்களும் நச்சுத்தன்மை கொண்டவையாக மாற்றமடைகின்றன

இத்தகைய மீன்பிடியால் ஏனைய மீனவர்களுக்குக் கடும் தொழில் பாதிப்பும் ஏற்படுகிறது. 'டைனமட்' வைத்து மீன் பிடிப்பதற்கு ஏற்கனவே தடைவிதிக்கப்பட்டிருந்தபோதிலும், இந்த முறையைப் பயன்படுத்தி மீன் பிடித் தொழில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு தொழிலை மேற்கொள்வோர் உடனடியாக அதனை நிறுத்திக் கொள்ளவேண்டும். இல்லையேல் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அந்தத் தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டிலுள்ள சுழிபுரம், வேலணை, நயினாதீவு, புங்குடுதீவு, மண்டைதீவு ஆகிய பிரதேசங்களில் உள்ள பரவைக்கடலில் உள்ளூர் இழுவைப் படகுகளில் மீன்பிடிக்கப்படுவதால், சிறுதொழில்களை மேற்கொண்டுள்ள மீனவர்களுக்குப் பெரும பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக் காட்டப்பட்டதைத் தொடர்ந்து இதுதொடர்பாக எதிர்வரும் 9ஆம் திகதி நடைபெறும் கூட்டத்தில் உரிய முடிவு எடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. (எ-4-173)

# இளம் குடும்பஸ்தரின் மீது பெற்றோல் ஊற்றித் தீ வைப்பு!

## மட்டுவில் வடக்கில் கொடூரம்

தென்மராட்சி,ஜன.31

வயல் வேலை முடித்து வீடு திரும்பிய இளம் குடும்பஸ்தர் மீது இனந்தெரியாதோர் பெற்றோல் ஊற்றித் தீயிட்ட சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு 8.30 மணியளவில் மட்டுவில் வடக்கு, கொக்கரமுனை என்னும் இடத்தில் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் பிரஸ்தாப இளைஞன் உடல்முழுவதும் பலத்த எரிகாயங்களுக்கு இலக்கானார்.

இதே இடத்தைச் சேர்ந்த தெய்வேந்திரன் ஜெசிந்தன் (வயது 19) என்னும் இளம்குடும்பஸ்தரே எரிகாயங்களுக்கு இலக்கானவராவார்.

உடல் முழுவதும் எரிகாயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்ட அவர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டார். (எ-4-31-173)

# ஜனாதிபதி - பிரதமர் தீர்வு ஒன்றுக்கு நெருங்கி வந்திருக்கிறார்கள்!

## புதுடில்லியில் அமைச்சர் டிரோன் தகவல்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தீர்வு ஒன்றுக்கு நெருங்கி வந்திருக்கிறார்கள் என்று வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ புதுடில்லியில் கூறியிருக்கின்றார்.

வெளிநாட்டுச் செய்தியாளர்கள் கழகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இதனைக் கூறிய அமைச்சர் பெர்னாண்டோ, கடந்தகால கசப்புணர்வுகளை மறந்துவிட்டு சமாதான முயற்சி தொடரும் எனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

பாதுகாப்புப்படைகள் மீதான கட்டுப்பாட்டைப் பிரதமர் கொண்டிருப்பது அவசியம் எனவும் கூறிய அவர், பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்ற ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தீர்மானம் 'முட்டாள்தனமானது' எனவும் வர்ணித்தார்.

விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக அமைப்பு யோசனை சமஷ்டி ஆட்சிமுறைக்கு அப்பால் செல்கிறது எனத்தான் கருதுவதாகவும் நாட்டின் அரசியலில் இனவாத அணுகுமுறையை சுதந்திரக்கட்சி கடைப்பிடிப்பதாகவும் கூறிய அவர், இலங்கையில் தனிநாடு ஒன்று அமைவதை இந்தியா பொறுத்துக்கொள்ளாது என்பது உறுதியானதாகும் எனவும் குறிப்பிட்டார்.

இந்தியாவைப் போன்று சமஷ்டி ஆட்சிமுறையை ஏற்படுத்த சிரத்தை கொண்டிருக்கும் இலங்கை, இந்தியாவின் தார்மீக ஆதரவை எதிர்பார்த்திருப்பதாகவும் அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ பத்திரிகையாளர் மாநாட்டில் கூறினார்.




சுகாதார ஊழியர்களின் சம்பள முரண்பாடு தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலையில் ஸ்ரீலங்கா மக்கள் குடியரசு சௌக்கிய சேவைச் சங்கத்தின் கொழும்பு தலைமைச் சங்கப் பிரதிநிதிகளால் அண்மையில் நடத்தப்பட்ட கலந்துரையாடலின்போது யாழ். கிளைச் சங்க முன்னாள் தலைவர் எஸ்.டி.சிறில் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். தலைமைச் சங்கத் தலைவர் எஸ்.விமலரட்ண, யாழ். கிளைச் சங்கச் செயலாளர் இ.வசந்தராசன், தலைவர் க.வாமதேவன் ஆகியோரும் படத்தில் உள்ளனர். (எ-15)

# புலமைப் பரிசில் பெறுபேறுகள் மேலும் சில பாடசாலை முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜன.31

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் உதயனில் பாடசாலை ரீதியாகத் தொடர்ந்து வெளிவந்த வண்ணமுள்ளன. அதில் வடமராட்சிப் பாடசாலைகளின் பெறுபேறுகளும் மற்றும் சில பாடசாலைகளின் பெறுபேறுகளும் இன்று வெளியாகின்றன.

மேலும் சில பாடசாலைகளின் விவரம் :-

**பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலை**

தோற்றியோர் - 31. சித்தி - 5.

[illegible] (137), த.தர்விகா (134), [illegible] (128), வே.நிந்துஜா(123), [illegible] (120).

**பஞ்ஞாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்**

தோற்றியோர் 39, சித்தி - 5.

செ.ஜெனனி (127), த.எதிர்நாயகம் (123), கே.ரஜீதன் (121), வை. யனுசா (120), ச.கோபிகா (118).

**மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை**

தோற்றியோர் - 23, சித்தியடைந்தோர் - 02.

கே.கஜேந்திரன் (133), கே.நிஷாந்தன் (134).

**தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை**

தோற்றியோர் - 05, சித்தியடைந்தோர் - 01.

எம். இனிதா (121)

**தட்டாதெரு தமிழ்க் கலவன் பாடசாலை**

தோற்றியோர் - 16, சித்தியடைந்தோர் - 01.

எஸ்.பிரசாந்த் (122).

**தம்பசிட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை**

தோற்றியோர் - 71, சித்தியடைந்தோர் - 07.

எஸ்.கார்த்திகாயினி (147), கே. நிதர்சனா (121), வி.சரஞ்சா (145), எஸ்.துஷாந்த் (138), எஸ்.பரதன் (127), என்.அபயப்பிரதாபன் (123), ஜி.தாட்சாயினி (118).

**வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி**

தோற்றியோர் - 76, சித்தியடைந்தோர் - 18.

சி.சருஜா (154), எஸ்.சோபிகா (121), எஸ்.துபலாசினி (120), கே.துர்க்கா (133), எஸ்.ஆர்ரஜனி (142), ஜி.சிந்துஜா (147), ஏ.சுஜிதா (118), எஸ்.கிருசுபா (138), பி.ஜனனி (137), கே.கயாந்தினி (122), எஸ்.மிஸ்ஸியனா (130), ஜி.டெனிக்கா (125), எம்.கௌசிகா (124), கே.கீர்த்தனா (125), பி.மயூரிக்கா (123), ரி.ரஜிதா (129), ரி.சாருபா (123) எஸ்.தர்சிகா (149).

**துன்னாலை மேற்கு தமிழ்க்கலவன் பாடசாலை**

தோற்றியோர் - 26, சித்தியடைந்தோர் - 11.

பி.கௌசிகன் (136), ஜே.நிருபன் (130), கே.பிரசாந்த் (126), கே.சிந்துஜன் (132), கே.ஹேமசாலினி(146), வி.நிரஞ்சினி (125), எஸ்.சோபிகா (122), எஸ்.தேவகி (146), எஸ்.தினேஸ (147), என்.கோணேஸ்வரன் (120), எஸ்.சர்மிளா (137).

**வல்வை மகளிர் மகா வித்தியாலயம்**

தோற்றியோர் - 43, சித்தியடைந்தோர் - 05.

ஜே.அஸ்கரன் (148), தி.நந்தினி (118), ஏ.சுபாசினி (123), எஸ்.சிவதர்சினி (126), எஸ்.ஜெயபாலன் (126).

**அல்வாய் மேற்கு, திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயம்**

தோற்றியோர் - 12, சித்தியடைந்தோர் - 03.

எஸ்.சுஜிதா (137), எஸ்.பிரகாஷ் (118), எஸ்.பிரியாணி (150).

**அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை**

தோற்றியோர் 30, சித்தியடைந்தோர் - 01.

ஏ.ஜஸ்மின் (136).

**பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை**

தோற்றியோர் - 33, சித்தியடைந்தோர் - 04.

யூ.சோபிதா (128), ஏ.கே.அனிஸ்கா (132), பி.பிரியா (118), எஸ்.பிரியதர்சினி (147).

**புலோலி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை**

தோற்றியோர் - 24, சித்தியடைந்தோர் - 02.

யு.துளசிகன் (138), எஸ்.அனுதர்சன் (118).

**கற்கோவளம் மெ.மி.த.க. பாடசாலை**

தோற்றியோர் - 20, சித்தியடைந்தோர் - 05.

ரி.ஜெசிந்தா (119), ரி.கௌசிகா (123), ஆர்.கயல்விழி (118), எஸ். அனோஜா (120), பி.சூரியா (149).

**வல்வெட்டித்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை**

தோற்றியோர் - 06, சித்தியடைந்தோர் - 03.

ஜி.சுதர்சன் (158), ரி.நிருஜா (140), கே.விஜிதா (131). (ஒ-ரி28-118-173)

# திருத்தச் சட்டமூலத்தை உயர் நீதிமன்றம் ஆராய்வு

கொழும்பு,ஜன.31

மாகாணசபைகள் திருத்தச் சட்டமூலம் அரசமைப்புச் சட்டத்திற்கு ஏற்புடையதா, இல்லையா? என்பதைத் தீர்மானிப்பதற்காக அச்சட்டமூலத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உயர் நீதிமன்றத்திடம் பாரப்படுத்தியுள்ளார். மாகாணசபைகள் அனைத்தினதும் தேர்தல்களை ஒரே தினத்தில் நடத்த வழி செய்வதாக இத்திருத்தச் சட்டமூலம் அமைந்திருக்கிறது.

அரசமைப்புச் சட்டத்தின்படி, ஜனாதிபதியால் பாரப்படுத்தப்படும் ஓர் அவசர சட்டமூலத்தை உயர் நீதிமன்றம் ஆராய்ந்து 24 மணிநேரத்துக்குள் தனது தீர்ப்பை ஜனாதிபதிக்கு அறிவிக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரணி ஊடான பஸ்சேவை நிறுத்தப்பட்டதால் சிரமம்

தென்மராட்சி,ஜன.31

பருத்தித்துறையிலிருந்து வரணி, கொடிகாமம் ஊடாக வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் நடத்தப்பட்டு வந்த பஸ்சேவை நிறுத்தப்பட்டதால் வரணிப்பகுதியைச் சேர்ந்த யாழ்ப்பாணத் திணைக்களங்களில் கடமையாற்றும் அரச ஊழியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அரச ஊழியர்கள், பல்கலைக் கழக மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோரின் நலன்கருதி வரணியிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான மினிபஸ் சேவையினை நடத்துமாறு தென்மராட்சி தனியார் சிற்றூர்திச் சேவைகள் சங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(எ-117)

## உடுவில் கமநலசேவைப் பிரிவில்

# மாவிலைத் தத்திக்கு மருந்து விசிற பதிவுகளை மேற்கொள்ளலாம்

வலிகாமம் தெற்கு,ஜன.31

உடுவில் பகுதியில் மாவிலைத் தத்திக்கு மருந்து விசிற விரும்புவோர் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கேற்ப மாவிலைத் தத்தி பாதிப்பை நீக்க மருந்து விசிறுவது தொடர்பான செய்முறை விளக்கம் விவசாயத்திணைக்களத்தின் அனுசரணையுடன் உடுவில் கமநல சேவை நிலையப் போதனாசிரியர் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

உடுவில் வடமத்தி விவசாய சம்மேளனப் பிரிவில் உள்ள எஸ். பத்திநாதர் என்ற விவசாயியின் தோட்டத்தில் இச்செய்முறை விளக்கம் மேற்கொள்ளப்பட்டது.

இப்பிரதேசத்தில் உள்ள மாமர உரிமையாளர்கள் பதிவுசெய்யும் பட்சத்தில் அவர்களுடைய மாமரங்களுக்கு கமநலசேவை நிலையத்தினரால் மருந்து விசிறப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மருந்து விசிறுவதற்கான பயற்சியினையும், பாதுகாப்பு உடைகளையும் கமநலசேவை நிலையம் வழங்கி, உடுவில் வடமத்தி விவசாய திணைகளத்தைச் சார்ந்த தொண்டர் மூலம் இப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மாமரங்களுக்கு மருந்து விசிற விரும்புவோர் உடுவில் கமநல சேவை நிலையத்தில் அல்லது உடுவில் வடமத்தி (மல்வம்) விவ சாய சம்மேளனத்தைச் சேர்ந்த பத்திநாதர் என்ற விவசாயிடம் தமது பதிவுகளை மேற்கொண்டு பயனடையலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-152)

# கட்டுடை - பொன்னாலை வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

கட்டுடை - பொன்னாலை வீதி மிகவும் மோசமான நிலையிலுள்ளதாக இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

சண்டிலிப்பாய்க்கும், மானிப்பாய்க்கும் இடையிலுள்ள கட்டுடை - பொன்னாலை வீதி குண்டும், குழியுமாக இருப்பதால் இந்த வீதியைப் பயன்படுத்துவோர் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அத்துடன் வீதி விபத்துக்களும் இந்த வீதியில் அதிகரித்து வருகின்றன என்று அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த வீதியைச் சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஒ-ரி)

# சாந்தைக் கிராம அபிவிருத்திக்கு விரைவில் திட்டங்கள் தயாராகும்!

## நாடாளுமன்ற உறுப்பினர் வாக்குறுதி

யாழ்ப்பாணம்,ஜன.31

வலி.தென்மேற்கு, சாந்தைக் கிராமத்தில் விரைவில் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கான நிதி ஒதுக்கீடுகள் இந்த வருடம் வழங்கப்படவுள்ளன.

- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா தெரிவித்தார்.

பிரான்பற்று ஸ்ரீமுருகன் முன் பள்ளித் திறப்புவிழா அண்மையில் இடம்பெற்றபோது, சாந்தைக் கிராமத்தின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி குறித்து வலி. தென்மேற்கு பிரதேச சபைச் செயலாளர் தனதுரையில் குறிப்பிட்டார். இவரையடுத்து உரை யாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா சாந்தைக் கிரா மம் அபிவிருத்தி செய்யப்படும் என உறுதியளித்தார்.

இதேசமயம், பின்தங்கிய கிராமமான சாந்தையில் வீதிப் புனரமைப்புப் பணிகள், மின்சார விநியோகம், உப தபாற்கந்தோர் மற்றும் பாடசாலை ஆகியவை உருவாக்கும் திட்டங்கள் குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

(ஒ-183)




புன்னாலைக்கட்டுவன் தெற்கு கணேசா சனசமூக நிலையத்தினரால் அப்பகுதியில் சமாதான நீதிவான்களாக நியமனம்பெற்றோரை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடத்தப்பட்டபோது சனசமூக நிலைய உப தலைவர் ரி.பாலசுப்பிரமணியம் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். (ஒ-150)

## கந்தபுராண படன நூல்

சுழிபுரம்,ஜன.31

கந்தபுராணப் படன வள்ளியம்மன் திருமணப் பாடல்கள் - பொழிப்புரை நூல் எதிர்வரும் பங்குனி உத்திரத் தினத்தன்று வெளியிடப்படவுள்ளது. வழக்கம்பரை பஜனை சபையார் தமது நூற்றியொராவது நூலாக இதனை வெளியிடவுள்ளனர்.(ஒ-28)

## தேர் அமைக்க வன்னியிலிருந்து மருத மரங்கள்

சுழிபுரம்,ஜன.31

சுழிபுரம் பறாளை ஈஸ்வர விநாயகர் ஆலயத்துக்கு புதிய தேர் செய்வதற்கான பாரிய மரங்கள் ஐந்து லட்சம் ரூபாவுக்கு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. வன்னிப் பகுதியிலிருந்து இந்த மருத மரங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

தேர் அமைப்புப் பணிகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன. (ஒ-28)

## எழுதுநர் நியமனம்

யாழ்ப்பாணம்,ஜன.31

யாழ்மாவட்டத்தில் அரச திணைகள அலுவலக எழுதுநர்களாக 10 பேர் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே இடம்பெற்ற பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் வெட்டுப்புள்ளி குறைக்கப்பட்டவர்களுக்கே புதிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. (ஒ-185)

## கொப்பிகள் அன்பளிப்பு

குருநகர்,ஜன.31

குருநகர் அறிவகம் அமைப்பால் குருநகர் தொடர்மாடி சனசமூக நிலையத்தில் நடத்தப்பட்டு வரும் அடிப்படைக்கல்வி வகுப்பில் கலந்து கொள்வோருக்கு வழங்குவதற்காக ஒரு தொகை அப்பியாசக் கொப்பிகளை யாழ். மனித முன்னேற்ற நடுநிலையம் வழங்கியுள்ளது.

இந்த அப்பியாசக் கொப்பிகள் இன்று மாலை 6 மணிக்கு குருநகர் தொடர்மாடி சனசமூக நிலையத்தில் வைத்து உரிய மாணவர்களுக்கு வழங்கப்படும் என அறிவகம் அமைப்பின் இயக்குநர் சே.சுவைனஸ் தெரிவித்தார். (ஒ-51)

## கரவெட்டியில் சிறுவர் பள்ளி திறந்து வைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.31

கரவெட்டி மத்தி சிந்தாமணி விநாயகர் சிறுவர் பள்ளியின் புதிய கட்டடம் கடந்த 22 ஆம் திகதி வியாழக் கிழமை காலை 10 மணிக்கு நிலையத் தலைவர் க.நடராசாவினால் திறந்துவைக்கப்பட்டது.

இக்கட்டடம் அமைப்பதற்கான காணியை சிதம்பரப்பிள்ளை புத்தக சாலை நிறுவுநரான அமரர் க.சிதம்பரப்பிள்ளையின் புதல்வரான எஸ்கந்தசாமி வழங்கியிருந்தார். சிறுவர்பள்ளிக்கான தளபாடங்களை ஓய்வுபெற்ற வங்கியாளரும், அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் உடுப்பிட்டிக் கிளைத் தலைவருமான ஆழவார் செல்லத்துரையும், விளையாட்டு உபகரணங்களை நெல்லியடி கண்ணாடிக் களஞ்சிய உரிமையாளரான எல்.பாலாவும் வழங்கியிருந்தனர்.

(ஒ-8)



பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு கல்வி உதவி வழங்கலும் உடுபுடைவைகள் வழங்கலும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பொ.சிவபாதம் மங்கள விளக்கேற்றுகிறார். அருகில் சங்கப் பொது முகாமையாளர் கி.குணரட்ணம், சங்கத் தலைவர் அமலோற்பவநாயகம், சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் மு. பாலசிங்கம் ஆகியோரும் காணப்படுகின்றனர். (ஒ-95)

# 'ஞானச்சுடர்' சஞ்சிகையின் 7 ஆவது ஆண்டு நிறைவு விழா

வடமராட்சி,ஜன.31

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான 'ஞானச்சுடர்' ஆத்மீக சஞ்சிகையின் 7 ஆம் ஆண்டு இதழ் வெளியீட்டு விழா நாளை முற்பகல் 10.30 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் பேரவைத் தலைவர் க.அருள்லிங்கம் தலைமையில் நடைபெறும்.

இச்சஞ்சிகையின் வெளியீட்டுரையை ஆசிரியர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகனும், மதிப்புரையை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் ஆ.சிவநாதனும் நிகழ்த்துவர்.

இந்த விழாவில் கடந்த 2000 ஆம் ஆண்டு தொடக்கம் ஞானச்சுடரில் கட்டுரைகள் எழுதியோர்கள் கௌரவிக்கப்படுவதுடன் வறுமைக் கோட்டுக்குக் கீழ்வாழும் இரு மாணவிகளுக்குச் கல்விச் செயற்பாட்டை ஊக்குவிக்குமுகமாக அன்பளிப்பாக சைக்கிள்களும் வழங்கப்படவுள்ளன. தொடர்ந்து மாகேஸ்வரபூசை இடம்பெறும். (எ-173)




# பண்டத்தரிப்பு மருத்துவமனைக்கு தளபாடங்கள் விநியோகம்

சண்டிலிப்பாய்,ஜன.31

யாழ்.சுகாதாரத் திணைக்களம் பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலைக்கு கட்டில்கள், மெத்தைகள் மற்றும் சிறுஅலுமாரிகள், சமையல் பாத்திரங்கள் உட்படப் பல பொருள்களை வழங்கியுள்ளது. விரைவில் திறக்கப்படவுள்ள நோயாளர் விடுதிகள் மற்றும் பிரசவ விடுதி ஆகியவற்றில் பயன்படுத்துவதற்கே இவை வழங்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டில் யாழ். மாவட்ட வைத்தியசாலைகளுக்குத் தளபாடக் கொள்வனவுக்காக சுகாதார அமைச்சினால் ஒதுக்கப்பட்ட நிதி மூலம் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்களும் மற்றும் யுனிசெவ் நிறுவனத்தால் வழங்கப்பட்ட தளபாடங்களும் கடந்த செவ்வாய்க் கிழமையன்று திணைக்கள லொறி மூலம் எடுத்து வரப்பட்டு இந்த வைத்தியசாலைக்கு விநியோகிக்கப் பட்டுள்ளன.

கடந்த யுத்தகால அனர்த்தங்களின்போது இந்த வைத்தியசாலை பெரும் சேதமடைந்து அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம், ஐ.நா. அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றின் நிதி உதவியுடன் இருவருடங்களுக்கு முன்பு இந்த வைத்தியசாலை புனரமைக்கப்பட்டது.

இதனை விரைவில் இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை யாழ். சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் கே.ரி.சிவபாதம் மேற்கொண்டு வருகின்றார். (ஒ-135)

# கசிப்பு உற்பத்தியாளர்கள் உரும்பிராய் மேற்கில் கைது!

உரும்பிராய் மேற்குப் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட ஆண்கள், பெண்கள் எனப் பலர் கடந்தவாரம் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அதிகாலை, மதியம், இரவு என பல்வேறு நேரங்களில் கோப்பாய்ப் பொலீஸார் இந்தப் பகுதியில் தேடுதல் வேட்டையை மேற்கொண்டனர்.

இதன்போது கசிப்பு, கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படும் உபகரணங்கள் போன்றவை பொலீஸாரால் கைப்பற்றப்பட்டன.

இதேவேளையில் அப்பகுதியில் இயங்கும் சனசமூக நிலையம் கசிப்பு உற்பத்தியைக் கைவிடுமாறு கோரி "சமூகச் சீரழிவு" என்ற தலைப்பில் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தும் சுவரொட்டிகளை ஒட்டியும் வருகின்றது குறிப்பிடத்தக்கது.

(ஒ-49)

# பொதுச் சந்தைகள் புனரமைப்பு

வலிகாமம் தெற்கு பிரதேச சபையினரால் சுன்னாகம், மருதனார் மடம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள பொதுச்சந்தைகள் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றன.

நீண்டகாலமாக புனரமைப்புப் பணிகளோ, சுகாதார அபிவிருத்திகளோ மேற்கொள்ளப்படாமல் சந்தை வியாபாரிகள், கமக்காரர்கள் மற்றும் கொள்வனவுக்காரர்களுக்கு மிகுந்த [illegible] பொதுச்சந்தைகளைப் பேணவும், புனரமைக்கவும் என வலிகாமம் தெற்கு பிரதேச சபையினரால் இம்முறை கூடிய நிதிஒதுக்கீடு செய்யப்பட்டு இவ் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இவ்விரு சந்தைகளும் திருத்தியமைக்கப்பட்டு பாதுகாப்பு வேலிகள், மதில்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. பாதுகாப்புக் கதவுகள் சந்தையின பல பகுதிகளிலும் போடப்படுகின்றன.

சுற்றாடல் சூழல் பாதுகாப்புக்கான நடவடிக்கைகளும் பிரதேச சபையினால மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம-152)

## புதிய அதிபர் நியமனம்

சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலையின் புதிய அதிபராக வெற்றிவேல் ராஜ்குமார் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இப்பாடசாலையில் கடந்த 7வருடங்களாக அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுள்ள வேலுப்பிள்ளை சிவானந்தனின் இடத்திற்கே இவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். (ஒ-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணவில்லை

கோப்பாய் தெற்கு, கோப்பாய் கற்பகப் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த சிவசாமி ஐயர் சங்கீர்த் (வயது 17) என்பவரை (27.01.2004) செவ்வாய்க்கிழமை முதல் காணவில்லை. இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் கீழ் உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

திருமதி சிவசாமி ஐயர்(தாய்),
கோப்பாய் தெற்கு, இருபாலை,
கற்பகப் பிள்ளையார் கோவிலடி.

(27852)(36-11-19)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 30 07 1930



மறைவு 11 02 2003

## அமரர் விநாயகர் சுப்பையா

திதி :31.01.2004

ஓராண்டு ஆனதையா - ஆனால் உங்கள் நினைவு
மட்டும் எங்கள் நெஞ்சைவிட்டு அகலாது!
பாசமுடன் எம்முடன் பழகி நேசமுடன் அரவணைத்த
அன்புத் தெய்வமே! எமக்கு நல்ல வழிகாட்டியாக
இருந்து கலங்கரை விளக்காகத் திகழ்ந்தீர்கள்!
காலன் கவர்ந்து சென்றானே உங்கள் இன்னுயிரை
மரணம் என்பது எப்போது வருமென்று சொல்லமுடியாது!
நிரூபித்துவிட்டீர்கள்! உங்கள் நினைவுடனேயே
இப்பூவுலகில் வாழ்கிறோம்.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய
ஆண்டவனை வேண்டி இறைஞ்சுகின்றோம்.
ஓம் சாந்தி!

இராஜ வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி.

அன்பு மனைவி,
மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(27845)

## சுதந்திரக்கட்சி-ஜே.வி.பி...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிர் முன்வைத்த கருத்துக்களாகும்.

அந்தவகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி சி.க.சிற்றம்பலம் பரந்த அரசியல் கருத்துக்களை வெளிப்படுத்தும் ஒருவராக இனம்காணப்பட்டவராவார். அவர் எந்த வகையில் இக்கூட்டு முயற்சியை நோக்குகிறார் என்பதை அறிவதற்காக அவருடன் தொடர்பு கொண்டேன். இக்கூட்டு ஒப்பந்தத்தின் மூலம் பயனுள்ள எவ்வித மாற்றமும் ஏற்படப்போவதில்லை. ஜே.வி.பி. தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளத் தயாராயுள்ளதாகக் கூறினாலும் வரலாற்றை நோக்கும் போது இந்நாட்டுச்சிங்கள எதிர்க்கட்சிகள் எவையும் எந்தவொரு தீர்வு முயற்சியும் வெற்றியடைய இடமளிப்பதில்லை என்பது சந்தேகத்திற்கு இடமின்றித் தெளிவாகிறது; தெளிவான உண்மையும் அதுவே.

"ஜனாதிபதி கடைப்பிடித்து வரும் நிலைப்பாட்டுக்கும், இக்கூட்டு உடன்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டுள்ள நிலைப்பாட்டுக்குமிடையே காணப்படும் வேறுபாடு குறித்து என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. சமாதான முயற்சிகள் வெற்றியளிக்குமென ஜனாதிபதி பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் கருத்து வெளியிட்டிருந்தார். ஆனால் இக்கூட்டு ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்கள் திருப்திகரமானதாக இல்லையே!

தென்பகுதி அரசியல் நிர்வாகத்தின் மீது தமிழ் மக்களுக்கு எந்தவித அக்கறையுமில்லை. ஆனால், இவ்வித அரசியல் நிலைப்பாட்டின் வளர்ச்சி குறித்து நாம் அதிருப்தியடைகிறோம். தற்போதைய நிலையில் இக்கூட்டணியால் விடுதலைப் புலிகள் அமைப்பின் இடைக்கால நிர்வாக யோசனையை எவ்வாறு பரிசீலிக்க முடியும்? விடுதலைப் புலிகள் அமைப்பின் யோசனைகளை இக்கூட்டணி ஏற்க மறுக்கிறது. இந்த நிலையில் சமாதான நடவடிக்கைகளில் எவ்வாறு முன்னேற்றம் ஏறபடமுடியும்?

"இவ்வித சிக்கல் நிலை காரணமாக தமிழ்மக்கள் மகிழ்ச்சியற்ற நிலையில் உள்ளனர். ஸ்ரீல.சு.கட்சி மற்றும் ஜே.வி.பியினது இக்கூட்டணி அதிகாரத்தைக் கைப்பற்றுமானால் நிலைமை எவ்விதம் அமையும் என்பது ஆண்டவனுக்கு மட்டுமே வெளிச்சமாகும் என்று பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி தனது கருத்தை ஆணித்தரமாக வற்புறுத்தினார். ★

# கண்ணாடித் தொழிற்சாலைக்கு வேலைக்கு ஆள்கள் தேவை

கொழும்பில் இயங்கும் பிரபல்யமான கண்ணாடித் தொழிற்சாலைக்கு பின்வரும் வேலைக்கு ஆள்கள் தேவை.

I. ஊதுபவா (பிளோவர்)
II. உதவியாளர்

முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சம்பளம் 10,000 ருபாவிற்கு மேல் வழங்கப்படும். அத்துடன் தங்குமிட வசதியும் செய்து கொடுக்கப்படும். தகைமையுடையோர் 05.02.2004 வியாழக்கிழமை மதியம் 12 மணிக்கு முன்னர் கீழ்க்காணும் விலாசத்தில் சுயவிவரக் கோவையுடன் சமுகம் தரவும்.

☞ ★ **"The Peninsula group"** இல் முன்னர் வேலை செய்த சந்திரன், சிவகுமார் ஆகியோர் உடனடியாக எம்முடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

**T.P.No. 222 3720**
(27837)(36-19-16)

The PENINSULA GROUP,
127/10, Temple Road,
Jaffna.

# 40 ஆவது பிறந்தநாளும் 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்

மலர்வு 31 01 1964



உதிர்வு 30 01 1995

## செல்வராசா ஞானசேகரம் (ஞானம்)

காலன் காத்து நின்று - உன்
பூவுடலைப் பறிப்பதற்கு
புதுவருடம் பார்த்தானோ - பூமியில்
நீ வாழ்வதைப் பொறுக்காமல் பிரித்தானோ?
ரத்த பாசம் துடிக்குதடா - ஞானா!
நீ இல்லையடா
சோகம் எம்மை வாட்டுதடா - சொந்தம்
இங்கு தவிக்குதடா!

வேம்படி வீதி,
வத்திராயன் வடக்கு,
தாளையடி. 0777-250977 (278430)(36-11-19)

பிரிவால் துயருறும்:
- குடும்பத்தினர்.



# நில்லுங்கள் !

எங்கள் வருடாந்த ஊழியர் மாநாடு 2004 ஜனவரி 31ஆம் திகதி நடைபெறுவதால், அன்றைய தினம் எமது சகல அலுவலகங்களும் மூடப்பட்டிருக்கும். பெப்ரவரி 2ஆம் திகதி முதல் நாம் புதிய உந்துசக்தியுடன் உங்களுக்கு மேலும் சிறந்த சேவையை வழங்குவோம்.

ஜனசக்தி இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட்

JANASHAKTHI INSURANCE

Q & E Advertising.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதான முயற்சிக்குத் தடையான சக்திகளை சர்வதேச சமூகம் கண்டிக்க முன்வரவேண்டும்

**அரசு - புலிகள் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு ஒன்றரை ஆண்டுகள் கடந்துவிட்ட போதும் தமிழர் பகுதியில் போர் நின்றதைத் தவிர வேறு ஏதாவது முன்னேற்றங்கள் இருக்கின்றனவா என்பது பற்றிய அலசல் இந்தப் பகுதியில் தொடர்ந்து கொண்டிருக்கிறது.**

**இதுவரை செவ்வி வழங்கியவர்களின் கருத்துக்களின்படி புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டதன்படியான மக்களின் இயல்புவாழ்க்கை தமிழர் தாயகப்பகுதியில் ஏற்படவில்லை என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தில் சொல்லப்பட்ட பல விடயங்கள் இதுவரை நடைமுறைப் படுத்தப்படவில்லை என்பது செவ்விகள் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.**

**அந்தவகையில், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும், திருகோணமலை மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனின் செவ்வி இன்று வெளிவருகின்றது.**




❑ *கேள்வி:-* புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்தபின்னர் திருகோணமலை மாவட்டத்தில் மக்களின் இயல்பு வாழ்க்கை எப்படியுள்ளது?

★ *பதில்:-* மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பொறுத்தமட்டில், யுத்தம் இல்லாமல் இருப்பதே மக்களுக்கு ஓரளவு நிம்மதி. ஆனால், யுத்தம் இல்லாத ஒரு சூழலில் பல விடயங்களை மக்கள் எதிர்பார்க்கிறார்கள். தமது கிராமங்களுக்குச் சென்று வாழ்க்கையை ஆரம்பிக்க விரும்புகிறார்கள். தமது வீடுகளைப் பார்க்கப்போகிறார்கள். தமக்குத் தேவையான பல வசதிகளை ஏற்படுத்த விரும்புகிறார்கள். ஆஸ்பத்திரிகளை, பாடசாலைகளைச் சீரமைக்கவும் கடற்றொழில், விவசாயம் போன்ற தமது தொழில்களைச் சீராக்கவும் மக்கள் முயற்சிக்கிறார்கள்.

திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கடந்த இருவருடங்களில் மக்களின் தேவைகள் ஓரளவுக்கேனும் நியாயமான அளவுக்குக்கூட பூர்த்தி செய்யப்படவில்லை. அரசு மூலம் எதுவும் செய்யப்படவில்லை. அரசசார்பற்ற நிறுவனங்கள் ஓரளவு செய்துள்ளன. ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி போன்ற அரசசார்பற்ற அமைபபுக்கள் ஊடாக சிலபகுதி மக்கள் உதவிகளைப் பெறுகின்றார்கள்.

சமாதான சூழலில், யுத்தநிறுத்த உடன்பாடு எட்டப்பட்ட பின்னர் இரு வருட காலத்தில் ஏற்பட்டிருக்க வேண்டிய முன்னேற்றம் ஏற்படவில்லை. இன்றுள்ள அரசியல் சூழலில் முன்னேற்றம் ஏற்படும் என்பதில் எமக்கு நம்பிக்கை குறைவாகத்தான் இருக்கின்றது.

மக்களின் வாழ்வில் பாரிய மாற்றம் ஏற்பட வேண்டுமானால் - எமது கட்டுமானங்களை மீளக்கட்டியெழுப்ப வேண்டுமானால் - சர்வதேச சமூகம் இந்தப் பணிக்கென விசேட உதவிகளை வழங்கவேண்டும். இப்படியான உதவிகளைப்பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இன்றுள்ள அரசியல் நெருக்கடிகள் காரணமாக அதிகளவு சர்வதேச உதவிகள் கிடைப்பதற்கு சந்தர்ப்பம் குறைவாகவே காணப்படுகின்றது. இந்த உதவிகள் வராவிட்டால் ஏற்படும் விளைவு, எமது மக்களைத்தான் பாதிக்கும்.

எமது மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த நாம் எவ்வளவுதான் முயற்சி எடுத்தாலும்கூட சர்வதேச உதவி இல்லாமல் எதுவும் செய்யமுடியாது.

❑ *கேள்வி:-* தெற்கு அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணப்பட்டு, பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கும் சாத்தியம் உள்ளதா?

★ *பதில்:-* இப்போது உடனடியாக அதற்குச் சாத்தியம் இருப்பதாக நான் கருதவில்லை. விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாகம் தொடர்பான வரைவை முன்வைத்தவுடன், திகதிகள் நிர்ணயிக்கப்பட்டுப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தால் நிச்சயம் வழி பிறக்கும் என நம்புவதற்கு இடமிருந்தது. ஆனால், அவர்கள் வரைவை முன்வைத்து மூன்று நாள்களுக்குள் சில மாற்றங்களை ஏற்படுத்தி, அதன் மூலம் பேச்சுகள், சமாதான முயற்சிகள் ஸ்தம்பிக்கச் செய்யப்பட்டுள்ளன. அந்த நிலையில் இருந்து நாம் இன்னமும் மீளவில்லை. மீண்டால்தான் ஏதும் நடக்கும். ஆனால், நிலைமை இன்னும் மோசமாகிக் கொண்டுதான் போகின்றது.

ஜனாதிபதியின் கட்சியுடன் ஜே.வி.பி. ஒப்பந்தம் செய்கின்றது. அதிகாரப் பகிர்வைக்கூட இல்லாமல் செய்வதற்கு ஒப்பந்தம் செய்கிறார்கள். எமக்கு அரசியல் தீர்வு ஒன்று கிடைப்பதாயிருந்தால், தனிநாடு கிடைக்காவிட்டாலும் கூடுதலான அதிகாரங்களைக் கொண்ட சுயாட்சி முறையிலான ஓர் அரசியல் தீர்வைத்தான் நாம் ஏற்றுக்கொள்ளலாம்.

அதிகாரப் பகிர்வு குறித்து இரு கட்சிகளும் ஒப்பந்தம் செய்துள்ளன. ஜனாதிபதியின் கட்சி அதிகாரப் பகிர்வு விடயத்தில் தாம் உடந்தை இல்லை எனக் கூறியுள்ளது. மாறுபட்ட கருத்துக்கள் இருகட்சிகளுக்கும் இடையில் இருந்தால்கூட, ஒப்பந்தம் செய்யலாம் என்று இருகட்சிக்காரர்களும் கூறுகின்றனர்.

இதைப்பார்க்கும் போது அரசியல் தீர்வு விடயத்தில் முன்னேற்றகரமான நிலை ஏற்படும் என எப்படி நாம் எதிர்பார்க்க முடியும்.

❑ *கேள்வி:-* சமாதானப் பேச்சுக்களில் இருந்து நோர்வேயை வெளியேற்ற வேண்டும் என்று ஜே. வி.பி. கோரிக்கை விடுத்து வந்தது. இன்று சுதந்திரக்கட்சியுடன் அது ஒப்பந்தம் செய்துள்ளதால் நோர்வே வெளியேறும் வாய்ப்பு இருக்கின்றதா?

★ *பதில்:-* உடனடி வாய்ப்பு இல்லை. ரணிலின் அரசு ஆட்சியில் இருப்பதால், அதற்கான வாய்ப்புக் குறைவு.

இன்னொரு தேர்தல் நடக்கக் கூடிய வாய்ப்புக்கள்தான் அதிகமாக உள்ளன. ஒப்பந்தத்தின் பின்னர் ஜே.வி.பி., ஜனாதிபதியைச் சும்மா விடப்போவதில்லை. தேர்தலை நடத்துமாறு வற்புறுத்தப் போகிறார்கள்.

தேர்தல் வரும். புதிய அரசு ஒன்று வந்தபின் அதுபற்றி முடிவு செய்யும். நிச்சயமாக ஜே.வி.பியின் கைஓங்கும்.

❑ *கேள்வி:-* கிழக்கில் தமிழ் மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும் இடையில் அடிக்கடி கலவரங்கள் ஏற்படுகின்றன. இதற்கான அடிப்படைக் காரணங்கள் என்ன?

★ *பதில்:-* கலவரங்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றை நாம் மறுக்கவில்லை. அதில் தமிழ்மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. முஸ்லிம் மக்கள் ஓரளவு கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இதை நாம் மறுக்கவில்லை.

மிகவும் கூடுதலாக 95 வீதமான தமிழ்மக்களும் முஸ்லிம் மக்களும் அங்கு வாழ்கின்றனர். இரு இன மக்களும் தங்களுக்குள் விட்டுக்கொடுத்து புரிந்துணர்வுடன் வாழவேண்டும் என்பது மிகவும் அவசியமானது. இதைமறுக்க முடியாது. குழப்பங்கள், கலவரங்கள் நடைபெறும்போது அந்த இடங்களுக்கு நாங்கள் செல்வோம். முஸ்லிம் மதத்தலைவர் மற்றும் அரசியல் தலைவர்களைச் சந்திப்போம்.

முஸ்லிம் மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் உருவாகும் பிரச்சினைகள் பூதாகரமாக வளர்ந்து தீர்க்கமுடியாத ஒரு பிரச்சினையாக உருவாகக்கூடாது என்று அந்தத் தலைவர்கள் எம்மிடம் கூறுவார்கள்.

## இரா.சம்பந்தன் கூறுகின்றார்

இரு இனங்களும் பிரச்சினைகளைத் தீர்த்து ஒற்றுமையாக வாழவேண்டும் என்றுதான் தலைவர்கள் வலியுறுத்துகின்றனர். இதைவிட வேறு வழியில்லை. தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் இந்த நிலத்தில் இருந்து வெளியேறக் கூடிய வழி இல்லை. ஆகவே, இத்தகைய பிரச்சினைகளைத் தீர்த்து ஒற்றுமையாக வாழவேண்டும் என்பதில் இரு இன மக்களும் உறுதியாக இருக்கிறார்கள்.

குறிப்பாக விடுதலைப் புலிகளின் தலைவர்களுக்கும் முஸ்லிம் தலைவர்களுக்கும் இடையில் உறவுகள் அதிகரித்து வருகின்றன. உறவுகள் அதிகரித்து வரும் நிலையில் எதிர்காலத்தில் கலவரங்கள் குறையும் என நம்புகிறோம்.

❑ *கேள்வி:-* அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கும் விடயத்தில் சர்வதேச சமூகத்துக்கு எந்தவகையில் அழுத்தங்களைக் கொடுத்து வருகிறீர்கள்?

★ *பதில்:-* தெற்கில் சிங்கள தலைமைகளுக்கு இடையில் உள்ள கோளாறு காரணமாகவே தமிழ் மக்களின் பிரச்சினை இன்றும் தீராமல் இருக்கின்றது. இந்த நாடு சுதந்திரம் அடைந்த பின் மிதவாதத் தலைவர்கள் இருந்தபோதும் இதைத்தான் செய்தார்கள்.

76ஆம் ஆண்டு தமிழீழப் பிரகடனம் செய்யப்பட்டது. சுதந்திரம் அடைந்தபின் மிதவாதத் தலைவர்களால் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படாததால் தமிழீழப் பிரகடனம் செய்ய வேண்டியநிலை ஏற்பட்டது. தமிழீழ பிரகடனம் செய்து இன்று 26 வருடங்களுக்கு மேலாகிவிட்டது. 26 வருடங்களில் 20 வருடங்கள் ஆயுதப்போர் நடைபெற்றுள்ளது. ஆயுதப்போரில் ஈடுபட்ட இயக்கம்கூட இன்று சமாதானப் பேச்சில் ஈடுபட்டு தமது பிரேரணைகளை முன்வைத்துள்ளது. பேச்சுக்கள் மூலம் தீர்வைக் காண்பதில் அவர்கள் ஆர்வமாக இருக்கின்றனர். தெற்குக் கோளாறு காரணமாக பேச்சுக்களை முன்னெடுக்க முடியாதுள்ளது. இதைச் சர்வதேச சமூகம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஐம்பது வருடங்களாகத் துன்பப்பட்டவர்கள் தமிழ் மக்கள். இன்று நிரந்தர சமாதானம் ஏற்படாத காரணத்தின் நிமித்தம் பாதிக்கப்படுபவர்களும் தமிழ் மக்கள்தான். இதைச் சர்வதேச சமூகம் புரிந்துகொள்ளவேண்டும்.

எம்மைச் சந்திக்கும் இராஜதந்திரிகளிடம் மேற்கண்ட கருத்தை வலியுறுத்திவருகின்றோம்.

சிங்களத் தலைமைகளால் ஒற்றுமையாக, தமிழர்களுக்கு நியாயமான, நிரந்தரமான தீர்வைக் கொடுக்கமுடியாவிட்டால் தமிழ் மக்களை தங்கள் வழியில் செல்லவிட வேண்டும். அதை விட வேறு வழி எமக்கு இல்லை என்று சர்வதேச சமூகத்துக்கு கூறியுள்ளோம். இதை சர்வதேச சமூகம் உணரவேண்டும். இதை உணர்ந்து தற்போது ஏற்பட்டுள்ள கோளாறுகளுக்கு சர்வதேச சமூகம் தனது கடுமையான கண்டனத்தைத் தெரிவிக்கவேண்டும். அப்படிச் செய்தால்தான் சர்வதேச சமூகம் எமக்கு உதவும் என நம்பமுடியும்.

சமாதானத்தைப் பற்றிப் பேசுவதில் பிரயோசனம் இல்லை. நாங்கள் எல்லோரும் சமாதானத்தை. விரும்புகிறோம். இன்றுள்ள நிலையில் யார் குற்றவாளியாக இருக்கிறார்கள். தமிழ் மக்கள் பிரச்சினையைத் தீர்க்க யார் தடையாக இருக்கிறார்கள் என்பது தொடர்பாக சர்வதேச சமூகம் தனது கருத்துக்களைப் பகிரங்கமாகச் சொல்லவேண்டும். கண்டிக்க வேண்டியவர்களைச கண்டிக்கவேண்டும். கண்டித்தால்தான் சர்வதேச சமூகம் தனது பணியைச் செய்வதாக ஏற்கமுடியும்.

❑ *கேள்வி:-* இந்தியா இலங்கையுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்வது தமிழ் மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துமா?

★ *பதில்:-* இந்தியா தமிழர்களுக்கு மாறாகப் போகமுடியாது; போகமாட்டாது. இதுதான் எனது கருத்து.

இலங்கையில் தமிழர்களைவிட இந்தியாவுக்கு வேறு நண்பர்கள இல்லை. நாங்கள் நண்பர்கள் மாத்திரம் அல்லர். சொந்தக்காரர்களும் கூட. இங்கு இந்தியாவுக்கு வேறு நண்பர்களோ, சொந்தக்காரர்களோ இல்லை.

எந்த நாட்டை எடுத்துப் பார்த்தாலும் அது சீனாவாக இருக்கலாம். அமெரிக்காவாக இருக்கலாம். நாங்கள் இந்தியாவுடன்தான் நிற்போம். மற்ற இனங்களைப் பொறுத்தவரையில் அவர்கள் அப்படி நிற்கமாட்டார்கள். பெரும்பான்மை இனத்தை எடுத்துப் பார்த்தால் அவர்கள் தங்கள் நேசத்தை சீனாவுடனா இந்தியாவுடனா வளர்க்கவேண்டும் என்று பார்த்தால் நிச்சயமாக இந்தியாவுடன் இருக்காது.

ஆகவே, இந்தியா தமிழர்களைச் கைவிடமுடியாது. கைவிடமாட்டது என்பது எனது நம்பிக்கை.

எங்களுக்கிடையில் சில சிக்கல்கள் இருக்கின்றன. அவற்றைத் தீர்த்துக்கொள்ள வேண்டும். நாங்கள் எல்லோரும் யதார்த்தமாக சிந்தித்துச் செயற்படவேண்டும் என்பது எனது கருத்தாகும்.

❑ *கேள்வி:-* இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டால்......?

★ *பதில்:-* பாதுகாப்பு ஒப்பந்தம் 86ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்ட ஒரு விடயம். 'நாங்கள் செய்யாவிட்டால் வேறு ஒருவன் அந்த ஒப்பந்தத்தை செய்து விடுவான்' என்று இந்தியா கருத்துக் கூறியுள்ளது. மற்றவர்கள் வந்து எமது அயல் நாடாக இருக்கின்ற இலங்கையில் அந்த அளவு ஈடுபடுவதைத் தாங்கள் விரும்பவில்லை என்றும் இந்தியா கூறுகின்றது. மற்றவர்கள் வருவதைத் தடுப்பதற்கு இந்த ஒப்பந்தம் செய்ய வேண்டியுள்ளது என்றும் சொல்கிறாார்கள்.

❑ *கேள்வி:-* விடுதலைப் புலிகளுடனான உறவு குறித்து....?

★ *பதில்:-* மிகவும் நெருக்கமாக வேலை செய்கின்றோம். தொடர்ந்தும் வேலைசெய்ய விரும்புகிறோம். ஒருமித்து வேலை செய்வதன் மூலம்தான் பிரச்சினைக்குத் தீர்வைக் காணமுடியும் என நம்புகிறோம். வேறு வழியில்லை.

❑ *கேள்வி:-* தமிழர் விடுதலைக் கூட்டணி உட்கட்சிப் பூசல்கள் குறித்து....?

★ *பதில்:-* அது பெரிய பிரச்சினையாக எனக்குப்படவில்லை. பேசவேண்டிய நிலையும் இல்லை எனக் கருதுகிறேன்.

ஆனந்தசங்கரியுடன் தனிப்பட்ட முறையில் ஒருவித விரோதமோ, கருத்து முரண்பாடுகளுமோ இல்லை. கூட்டணிக்குள்ளோ, கூட்டமைப்புக்குள்ளோ அல்லது விடுதலைப் புலிகளுடனோ அவர் ஒற்றுமையாகச் செயற்படுகின்றாரா என்பதுதான் பிரச்சினை. இந்த மூன்று விடயத்திலும் நாம் ஒற்றுமையாகச் செயற்படவே மக்கள் ஆணையைப் பெற்றோம்.

கூட்டணிக்குள் ஒற்றுமையாகச் செயற்படவேண்டும். எமது நிரந்தரமான நீண்டகாலக் கொள்கைகளை ஏற்றுச் செயற்படவேண்டும். கூட்டமைப்பு ஒற்றுமையாகச் செயற்படவேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகளுடன் கூட்டமைப்பும் கூட்டணியும் ஒற்றுமையாகச் செயற்படவேண்டும்.

இந்த மூன்று விடயத்தையும் அவரால் நிறைவேற்ற முடியாமற் போய்விட்டது. இதுதான் பிரச்சினை. அவரது அறிக்கைகளும் கருத்துக்களும் எமது நீண்டகாலக் கொள்கைகளுக்கு மாறானவை. இல்லாவிட்டால் அவரை நீக்க வேண்டிய அவசியம் இல்லை.

இதை நாம் பெரிய பிரச்சினையாகக் கருதவில்லை. தேர்தலில் போட்டியிடுவதற்கும் இந்த விடயத்துக்கும் தொடர்பு ஒன்றும் இல்லை. எந்தவித பிரச்சினையும் இல்லை. ✳

## செவ்வி கண்டவர்:- குகா



**யுத்தம் இல்லாமல் இருப்பதே மக்களுக்கு ஓரளவு நிம்மதி. ஆனால், கடந்த இருவருடங்களிலும் மக்களின் தேவைகள் ஓரளவுக்கேனும் நியாயமான அளவுக்குக்கூட, பூர்த்திசெய்யப்படவில்லை. இந்தக் காலப்பகுதியில் ஏற்பட்டிருக்கவேண்டிய முன்னேற்றம் ஏற்படவில்லை என்றுதான் கூறவேண்டும்.**

**தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் கோளாறு நிலையால் முன்னேற்றம் ஏற்படும் என்பதில் நம்பிக்கை குறைவாகத்தான் இருக்கின்றது.**

**இன்னொரு தேர்தல் நடக்கக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன. தேர்தல் நடந்தால் நிச்சயமாக ஜே.வி.பியின் கை ஓங்கும்.**

**சிங்களத் தலைமைகளால் ஒற்றுமையாக, நியாயமான, நிரந்தரமான தீர்வைக்கொடுக்க முடியாவிட்டால், தமிழ் மக்களை தங்கள் வழியில் செல்லவிடவேண்டும். அதைவிட வேறு வழி எமக்கு இல்லை என்று சர்வதேச சமூகத்திடம் கூறி வருகின்றோம். இதைச் சர்வதேச சமூகம் உணரவேண்டும். இந்தியா தமிழர்களுக்கு மாறாகப் போகமுடியாது; போகமாட்டாது. இலங்கையில் தமிழர்களைவிட இந்தியாவுக்கு வேறு நண்பர்கள் இல்லை. நாங்கள் நண்பர்கள் மாத்திரம் அல்லர்; சொந்தக்காரர்களும் கூட. இந்தியாவுக்கு வேறு நண்பர்களோ, சொந்தக்காரர்களோ இங்கு இல்லை.**

**சீனாவுடனோ, அமெரிக்காவுடனோ நேசத்தை நாம் வைக்கப்போவதில்லை. இந்தியாவுடன் தான் நாம் நிற்போம். ஆகவே, இந்தியா தமிழர்களைக் கைவிடமுடியாது; கைவிடவும் மாட்டாது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போட்டிப் பரீட்சை

ஆசிரியர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சைக்குரிய பயிற்சி வகுப்புகள் மீண்டும் ஒரு புதிய பிரிவு ஆரம்பம்.

01.02.2004 ஞாயிறு 3 மணி

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி.

(27857) (24-11-19)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/வட்டு. மத்திய கல்லூரியின் புதிய அதிபராகக் கடமையேற்ற பின்பு முதன்முறையாக இன்று நடைபெறும் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டிக்குத் தலைமை வகிக்கும் எமது முன்னாள் தலைவரும் தற்போதைய போஷகருமாகிய

**திரு.ந.சபாரத்தினசிங்கி**

அவர்களை மனமார வாழ்த்துவதோடு, நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற வாழ்த்துகின்றோம்.

இந்து வாலிபர் சங்கம்.

வட்டுக்கோட்டை.

(27848) (24-11-19)



## இலங்கை வங்கி
### அறிவித்தல்

வங்கி விடுமுறை தினங்களாகிய 2004ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2ஆம், 4ஆம், 5ஆம் திகதிகளில் இலங்கை வங்கியின் சகல கிளைகளும் வங்கி அலுவலகங்களுக்கு மூடப்பட்டிருக்கும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

உதவிப் பொதுமுகாமையாளர் அலுவலகம்,
இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்.
30-01-2004

உதவிப் பொதுமுகாமையாளர்
(வடபிராந்தியம்).

(சி-33018) (19-11-24)



## கண்ணீர் அஞ்சலி

எமது சபையின் சக உத்தியோகத்தர்
செல்வி ப.நளாயினி அவர்களின் தந்தையார்
அமரர் **பரநிருபசிங்கம் பரம்சோதி**

அவர்கள் இறைபதம் அடைந்தமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்தினருக்குத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

*திருநெல்வேலி.*

நலன்புரிச் சங்கம்
நல்லூர் பிரதேச சபை.

(C/33020) (40-11-19-24)



## 30ஆம் நாள் நீங்காத நினைவில்

மண்ணில் 1928 - 09 - 12

விண்ணில் 2004 - 01 - 02



அமரர் **வல்லிபுரம் இரத்தினம்**

(இளைப்பாறிய பொலீஸ் அதிகாரி)

எங்கள் குடும்ப தீபம்
எம்மை விட்டுப் பிரிந்து
30நாள்கள் சென்று விட்டனவே!
அவரது நினைவுகள் எங்களை வாட்டுகின்றது
எங்கள் இதயம் வேதனை தாங்காது துடிக்கிறதே!
எமது அன்புத் தெய்வத்தை - இனி
எப்போ காண்போம் நாம்.

*அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.*

**பிள்ளைகள்:**
கணேஸ்வரன் V.R.G.வீடியோ சென்ரர், கொக்குவில்.
மகேந்திரன் (ஜேர்மனி),
ஜெயபாலன் (ஜேர்மனி),
குமார ஸ்ரீஸ்கந்தா (கனடா).

**மருமக்கள்:**
அற்புதமலர், சசிகலா (ஜேர்மனி), சதீஸ்வரி (ஜேர்மனி), ராஜினி (கனடா).

**பெறாமகள்:**
திருமதி பன்னீர்ச்செல்வம் சாந்தினி (ஜேர்மனி).

**பேரப்பிள்ளைகள்:**
பிரசாத், பிரசன்னா, பிரவீனா, சிந்து, ..., ஜெனுசன், கமிஷன், சுஜீவன், சசீவன், சயனி.

தகவல்:
இ.கணேஸ்வரன்
(மகன்).

*மலர்மஞ்சம்,*
*அரசடி லேன்,*
*தாவடி வடக்கு,*
*கொக்குவில்.*

(27861)(26-11-19-24)


## இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,ஜன.31

ஊர்காவற்றுறை லயன்ஸ் கழகத்தின் இலவச மருத்துவ முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கண், பொது வைத்தியம், இரதத அழுத்தம், நீரிழிவு மற்றும் சர்ம வியாதி ஆகியவற்றுக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ள இந்த மருத்துவமுகாமில் வேலணைப் பிரதேச மக்களைக் கலந்துகொண்டு பயன் பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது.(ஒ-10)

## செல்லம்மா மாதாஜி குருபூசை நிகழ்வு

கைதடி,ஜன.31

சச்சிதானந்த செல்லம்மா மாதாஜியின் குருபூசைத்தினம் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கைதடி வடக்கிலுள்ள ஸ்ரீ சச்சிதானந்தா ஆச்சிரமத்தில் இடம்பெற இருக்கின்றது.

இந்நிகழ்வில் அருளுரையை திருநெல்வேலி மகாதேவா ஆச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமிகள் ஸ்ரீமத் சோமஸ் கந்தவேள் நிகழ்த்துவார். சிறப்புரையை "உலக அமைதிக்கு அன்பே வழியாகும்" என்ற தலைப்பில் சத்திய சாயி மனித மேம்பாட்டுக்கல்வி இணைப்பாளர் கே.வி.சிவனேசன் வழங்குவார். தொடர்ந்து அன்னதானமும் இடம்பெறும்.

(ஒ-75)

## மக்கள் வங்கியின் பொதுமுகாமையாளர் இன்று யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம்,ஜன.31

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு மக்கள் வங்கியின் மேலதிக பொதுமுகாமையாளர் மார்ட்டின் பெர்னாண்டோ இன்று யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளார்.

இவர் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு வங்கியின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் கலந்துரையாடலொன்றை நடத்தவுள்ளார். முற்பகல் 11 மணிக்கு செய்தியாளர் சந்திப்பொன்றையும் அவர் நடத்துவார்.

(எ-10)

## மருதங்கேணியில் ஆசிரியர், மாணவர்களுக்கு கணனிக் கருத்தரங்கு

பருத்தித்துறை,ஜன.31

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணிக் கல்விக்கோட்டத்திலுள்ள பாடசாலைகளில் கல்விகற்கும் தரம் 10 தொடக்கம் தரம் 13 வரையிலான வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும கணனிக் கல்வி அறிமுகம் தொடர்பான கருத்தரங்கு ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

தமிழீழ மாணவர் அமைப்பு ஏற்பாடுசெய்துள்ள இந்த பத்து நாள் கருத்தரங்கு கடந்த புதனன்று மருதங்கேணி இ.த.க. பாடசாலையில் ஆரம்பமானது.

இந்நிகழ்வினை, வடமராட்சி கல்விக்கழகப் பொறுப்பாளர் இ.தாயகன் ஆரம்பித்துவைத்தார். வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தீபன் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் ராணிமைந்தன், வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலய அதிபர் வி.இந்திரலிங்கம், மருதங்கேணி கோட்டக்கல்விப் பணிப்பாளர், உடுத்துறை மகாவித்தியாலய அதிபர் ஆகியோரும் இந நிகழ்வில் உரை யாற்றினார்கள்.

(எ-118)

## முன்பள்ளி ஆசிரியருக்கு!

தென்மராட்சி,ஜன.31

தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் அடுத்தமாதம் நான்காம் திகதி காலை 10 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் நடைபெறுமென முன்பள்ளி பிரதேச இணைப்பாளர் செல்வி ந.ரோகினி அறிவித்துள்ளார்.(ஒ-117)

## திருமறைக் கலாமன்ற ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்,ஜன.31

யாழ் திருமறைக் கலாமன்ற கலைஞர்களுக்கான மாதாந்த ஒன்றுகூடல் நாளை காலை 10.30 மணிக்கு மன்ற அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், யாழ். திருமறைக் கலாமன்றத்தின் அனைத்து அங்கத்தவர்களையும், மன்றத்தில் புதிதாக இணைந்துகொள்ள விரும்பும் கலை ஆர்வம் உள்ளவர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(எ-4)


## திருமண வைபவம் இடம்மாற்றம்

அன்புடையீர்!

நல்லூர் சட்டநாதர் கோயில் திவ்ய ஜீவன சங்க கல்யாண மண்டபத்தில், 02.02.2004 திங்கட்கிழமை நடைபெறவிருந்த கேதீஸ்வரன் - அன்பரசி திருமண வைபவமானது தவிர்க்கமுடியாத காரணங்களால் அன்று **கோப்பாய் சித்திரவேலாயுதர் கோயில் மண்டபத்தில்** நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

(27836) (40-11-19-24)

- மணமக்களின் பெற்றோர்.



## துயர் பகிர்கின்றோம்

யா/கைதடி குருசாமி வித்தியாலய
எமது சக ஆசிரியை **திருமதி சிவமணி நடராஜகுமார்**
அவர்களின் அன்புத் தந்தையார்
**சின்னத்தம்பி மயில்வாகனம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்கின்றோம்.

*ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/கைதடி குருசாமி வித்தியாலயம்.

(27858) (19-11-24)



## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் கிராம அபிவிருத்தி அலுவலராகக் கடமையாற்றும் **திரு.அரியரத்தினம் நிர்மலன்**
அவர்களின் அன்புத் தந்தையார்
**செல்லத்துரை அரியரத்தினம்**
(இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர்)

அவர்களின் மரணச்செய்தி அறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அவரின் பிரிவால் துயரடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை.
(27815)(21-11-19-24)

பிரதேச செயலரும்,
நலன்புரிச் சங்க உத்தியோகத்தர்களும்,
ஊழியர்களும்.



## எட்டாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 09 - 07 - 1942

மறைவு 30 - 01 - 1996



**குமாரசாமி இராசரத்தினம்**

*(முன்னாள் ஆய்வுகூட உதவியாளர். ஹாட்லிக் கல்லூரி. சயன்ஸ் சென்ரர். மொடோண் எடியுகேசன் சென்ரர் - உரிமையாளர்)*

திதி: 31.01.2004

ஆண்டுகள் எட்டாகி விட்டதே
ஆறவில்லை எம் துயரம்
தேடுகின்றோமே திக்கெல்லாம்
கிடைக்கவில்லையே நின் திருமுகம்!

*"ஆனந்த நிலையம்"*
*நவிண்டில், கரவெட்டி.* (சி-33021) (24-12-19)

- குடும்பத்தினர்.



## கண்ணீர் அஞ்சலி



வதிரி. பூவற்கரையைச் சேர்ந்த எமது அன்புக்குரியவரான "அப்பையா" என்று நாங்கள் பாசமாக அழைக்கின்ற

**வல்லியப்பா சுப்பையா**

தோற்றம் 21-07-1922

மறைவு 29-01-2004

அவர்கள் காலமான செய்திகேட்டு நாம் மிகவும் அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தோம். அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும்.

அவரது ஆத்மாசாந்திபெற இறைவனை இறைஞ்சி கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

தி.ரவிவர்மன் (சுவிஸ்),
தி.ராஜவர்மன் (லண்டன்).

(27859)(34-11-19-24)



## மரண அறிவித்தல்

### வல்லியப்பா சுப்பையா

வதிரி, பூவற்கரை அமரர் சி.வல்லியப்பா அவர்களின் சிரேஷ்ட புதல்வரும், அமரர் தங்கம் சுப்பையா அவர்களின் அன்புக் கணவருமாகிய வ.சுப்பையா அவர்கள் 29.01.2004 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திருமதிகள் தி.தர்மவதி, இ.பராசக்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் அமரர் கு.திருச்செல்வம், மு.இராசலிங்கம் ஆகியோரின் மாமனாரும் திரவிச்செல்வன், செல்வன் தி.சவிச்சந்திரன், திருமதி இரவிச்செல்வி, தி.ரவிவர்மன் (சுவிஸ்), செல்வன் தி.ராஜவர்மன் (லண்டன்), தி.தர்மேந்திரா, திருமதி பொ.கௌரி, திருமதி ரவிச்செல்வன் ராசமணி, செ.இராஜரஞ்சன், திருமதி ரவிவர்மன் நிசாந்தி, திருமதி தர்மேந்திரா ராணி, த.பொன்ராசன் ஆகியோரின் அனபுப பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (31.01.2004) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் "தங்கநிலா" இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆலங்கட்டை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"தங்கநிலா"*
*வதிரி.* (22856) (40-12-19-24)

தகவல்:
- குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலையின் தற்காலிக ஆங்கில ஆசிரியை
செல்வி சங்கரி பரம்சோதி அவர்களின் அன்புத் தந்தையார்
**அமரர் பரநிருபசிங்கம் பரம்சோதி**
அவர்கள் காலமான செய்தி அறிந்து நாம் துயருறுகின்றோம்.
அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்.
(27873)(32-16-18) யா/யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.

## 43ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
10
09
1930



மறைவு
20
12
2003

அமரர் **சாமுவேல் பாலத்துரை**

ஆலமரமாய் நீங்கள் கொடுத்த நிழலினிலே
ஆறிவந்த குஞ்சுகள் நாங்களப்பா – யாரை
நம்பி எமை விட்டுச் சென்றீர்?
ஆறுதலின்றித் தவிக்கின்றோமப்பா – ஆறவில்லையே!
எம் மனம் ஆறுதலளிக்க இனி யார் வருவாரப்பா?

*உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல விநாயகரை வேண்டுகின்றோம்*
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எமது அன்புத் தந்தையின் துயரச் செய்திகேட்டு எமக்கு அனுதாபந் தெரிவித்த அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன், இன்று (31-01-2004) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

*23/2, 5ஆம் குறுக்குத்தெரு,*
*கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.* (27808)(16-18-32) -குடும்பத்தினர்.

## வேலையாள்கள் தேவை

ரீமேக்கர், பரிமாறுவோர்
சமையலாளர்கள்
*உடன் வரவும்.*
YMCA கன்ரீன்
கச்சேரி முன்பாக
(27884)(16-18-32)

## லக்சுமி இணுவில்

இளம் புயல் ரவியின் அசத்தல் நடிப்பில்
ஜெயம்
காட்சி நேரம்:
11.00, 3.00, 6.30 (பி.நே.)
(சி-27827)(36)

## நாகம்ஸ் சுன்னாகம்

கமல், அபிராமி, நெப்போலியன், நாசர் நடித்த
E.A.P.இன் பொங்கல் வெளியீடு
விருமாண்டி
(சண்டியர்) (ரீலஸ்)



காட்சி நேரம்:
11.00, 3.00, 7.00 (பி.நே.)
(சி-32739)(31)

## ராஜா யாழ்ப்பாணம்

பிரசாந்த் நடித்த
ஜெய்
(ரீலஸ்)
காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)
(சி-32369) (32)

## லிபேட்டி அச்சுவேலி

சரத்குமார், மீனா,
ரம்மியாக்கிருஷ்ணன், ஜெயராம்
நடித்த
பாறை (ரீலஸ்)



தினசரி : 3.00, 7.00.
(சி-32863)

## நிறஞ்சனாஸ் சங்கானை

பிரசாந், கிரண் நடித்த
வின்னர் (ரீலஸ்)
காட்சி நேரம்:
11.00, 2.45, 6.00,
சனி, ஞாயிறு
இரவு 8.45 (பி.நே.)
HULK
(C-32981) (32)

## உரும்பிராயில் காவலரண் நீக்கம்

இணுவில், ஜன.31

உரும்பிராய் பிரதான சந்தியில் இருந்த இராணுவத்தினரின் காவலரண் அகற்றப்பட்டுள்ளது.

கடந்த 24ஆம் திகதியன்று மேற்படி காவலரண் அகற்றப்பட்டுள்ளது.

காவலரணுக்குப் பின்பகுதியில் கடைத்தொகுதி ஒன்று அண்மையில் திறந்துவைக்கப்பட்டது.

கடைத்தொகுதிக்கு இந்தக் காவலரண் இடையூறாக காணப்பட்டதை அடுத்து இராணுவத்தினர் தாங்களாகவே காவலரணை அகற்றியுள்ளனர் என்று கூறப்படுகிறது. (ஒ-49)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



எமது குடும்பத் தலைவர்
அமரர்
**தம்பையா சின்னத்துரை**
அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (31.01.2004) சனிக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். ஆகவே இந்நிகழ்வில் பங்குபற்றுவதோடு, நண்பகல் நிகழ்கின்ற மதியபோசனத்திலும் கலந்துகொண்டு அமரரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஈஞ்சடி வைரவர் கோயிலடி,
சுதுமலை வடக்கு, சுதுமலை. (27882)(18-16-32) அன்பு மனைவி, மக்கள்.

## மரண அறிவித்தல்

### செல்வி ஜோசப் யொஸ்லின் டயாழினி

மிருசுவிலைச் சேர்ந்த செல்வி ஜோசப் யொஸ்லின் டயாழினி 29.01.2004 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் ஜோசப் (T.A., சவூதிஅரேபியா) - றாஜினி ஆகியோரின் பாசமிகு மகளும் சுபாஜினி, றுசாந்தினி (கனடா), யஸ்மின், டில்றுக்சி (இந்துக் கல்லூரி, சாவகச்சேரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அலக்ஸ் (கனடா) அவர்களின் மைத்துனியும் அறோனின் பாசமிகு சித்தியும் காலஞ்சென்ற மரியநாயகம் மேரிறோஸ், காலஞ்சென்றவர்களான வஸ்தியாம்பிள்ளை றோசம்மா ஆகியோரின் பேர்த்தியும் இராசசிங்கம் (ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்), இமல்டா, விஜயகுமார் (விவசாய போதனாசிரியர், வவுனியா), ஐடா, காலஞ்சென்ற யோகம், ராணி ஆகியோரின் பெறாமகளும் ஸ்ரான்லி (M.P.C.S.பளை), ஜேயவதி, லோறன்ஸ் (ஜெயபிரதா நகைமாடம்), தனேஸ (ஆசிரியை, சென்.ஜேம்ஸ் ம.வி.), அலோசியஸ் Unicef staff, யாழ்ப்பாணம்), இமல்டா, அருள்நேசன் - மாலா (கனடா) ஆகியோரின் மருமகளுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (31.01.2004) சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப் பட்டு, மிருசுவில் சேமக்காலையில் நல்லடக்கஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புகையிரத நிலைய வீதி,*
*உசன் - மிருசுவில்.*
T.P. 0777-112072. (27853) (26-18-16-32)

தகவல்:
ஜோசப் - றாஜினி
(தாயார்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழுகிய நிலையில் மூவரின் சடலங்கள் மன்னார் முருங்கன் பகுதியிலிருந்து மீட்பு

மன்னார், முருங்கன பொலீஸ் பிரிவுக்கு அண்மையில் உள்ள பிரதேசத்தில் அழுகிய நிலையில் மூவரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இவர்கள் வெடிச் சம்பவம் ஒன்றில கொல்லப்பட்டு இருக்கலாம் என மன்னார் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

கொல்லப்பட்டவர்கள் மூவரும் அனுராதபுரம் விலாச்சி பகுதியைச் சேர்ந்த சிங்களவர்கள் என்றும் - மன்னார் சிலாபத்துறைப் பகுதிக்கு இவர்கள் வியாபார நோக்கத்திற்காக கடந்த 27ஆம் திகதி வந்துள்ளனர் என்றும் -

பொலீஸாரின் ஆரம்ப விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

சடலங்கள் கிடந்த இடத்தை மன்னார் மாவட்ட நீதிபதி சென்று பார்வையிட்டார்.

சடலங்களை அடையாளம் காண்பதற்காகவும், மருத்துவ பரிசோதனை செய்வதற்காகவும் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு அவற்றைக் கொண்டு செல்லுமாறு பொலீஸாருக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

# ஈழத்துப் பூதந்தேவனார் தமிழ்ப்புலவர் கழகத்தின் தொடக்க விழா நாளை!

யாழ்ப்பாணம்,ஜன.31

ஈழத்துப் பூதந்தேவனார் தமிழ்ப் புலவர் கழகத்தின் தொடக்க விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வண்ணார்பண்ணை நாவலர் தமிழ் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் தலைவர் மு.திருஞானசம்பந்த பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும், தொடக்கவுரையை யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம்போலும் வழங்குவார்கள். வாழ்த்துரைகளை யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சித்துறையின் யுனெஸ்கோ ஆலோசகர் கலாநிதி எஸ்.அருள்செல்வன் ஆகியோர் வழங்குவார்கள்.

ஈழத்துப்பூதந்தேவனார் தமிழ்ப் புலவர் கழகம் நிறுவுவதை அங்கீகரிக்கும் நிகழ்வு, கழக உறுப்பினர்களை அங்கீகரிக்கும் நிகழ்வு, யாப்புத்தயாரித்தல், 'ஈழத்துப் பூதந்தேவனார் செழுங்கலை நியமம்' என்னும் உயர் கல்வி நிலையம், அறக்கட்டளை நிதியம் நிறுவுவதை அங்கீகரித்தல் ஆகிய நிகழ்வுகள் நடைபெறும்.

பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமாகும் மாலை நிகழ்வுகளில் ஆய்வுக் கட்டுரை தேர்வுகள், இலக்கிய நாடகத் தேர்வுகள், தொல்காப்பிய நாள் வழிகாட்டி வெளியீடு ஆகியன இடம்பெறும்.

முதுபெரும் நாட்டுக்கூத்துப் புலவர் ஆ.செகராஜசிங்கம், புலவர் சி. விசாலாட்சி அம்மையார் ஆகியோர் இந்நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர். (ம-8)

## மாவட்ட அணி தேர்வுகள்

யாழ்ப்பாணம்,ஜன.31

தமிழீழ விளையாட்டு விழாவில் கலந்துகொள்ளும் யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட அணி வீரர்களைத் தெரிவு செய்வதற்கான பயிற்சிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக்கழக விளையாட்டரங்கில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

திறமைவாய்ந்த வீராங்கனைகளை இந்தத் தேர்வுப் பயிற்சியில் கலந்துகொள்ளுமாறு மாவட்ட விளையாட்டுத்துறை கேட்டுள்ளது.

இதேவேளை - தமிழீழ விளையாட்டு விழாவில் கலந்துகொள்ளும் யாழ். மாவட்ட கிரிக்கெட் அணிக்கான தேர்வு இன்று பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும். (ம)

## பாடசாலைக்குள் கலாட்டாசெய்த இளைஞர் கைது

யாழ்ப்பாணம்,ஜன.31

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியினுள் புகுந்து பாடசாலை நேரத்தில் கலாட்டா செய்தார் என்று கூறப்படும் இளைஞர் ஒருவர் நேற்றுப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டார். யாழ். நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்ட அவரை எதிர்வரும் 11ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் இ.த. விக்னராஜா உத்தரவிட்டார்.

கோண்டாவில் வடக்கைச் சேர்நத அந்த இளைஞர் பாடசாலை நேரத்தில் கல்லூரிக்குள் நுழைந்து குழப்பம் விளைவித்தார் என்று வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் யாழ். பொலீஸாரிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

சந்தேக நபரைக் கைது செய்த யாழ். பொலீஸார் அவரை நேற்று மாலை நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

## ஹஜ் விடுமுறை திங்களன்று

யாழ்ப்பாணம்,ஜன.31

முஸ்லிம்களின் ஹஜ் பெருநாளையொட்டி நாளை மறுதினம் திங்கட்கிழமையே அனைவருக்குமான பொதுவிடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னர் இது ஞாயிற்றுக்கிழமை என்று அறிவிக்கப்பட்டிருந்தது. விடுமுறைதினம் மாற்றப்பட்டிருப்பது குறித்த அறிவிப்பு நேற்று குடாநாட்டில் உள்ள அரச அமைப்புக்கள் எல்லாவற்றுக்கும் அறிவிக்கப்பட்டது. (ம)

## வலி.வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

அன்றையதினம் வலி.வடக்கு பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ள சுதந்திரதினக் கொண்டாட்டத்தை நடத்தவிடாது" பிரதேச செயலகம் முன்னால் மறியல் போராட்டத்தில் ஈடுபடுவதற்கும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. அங்கு கறுப்புக் கொடிகளைப் பறக்க விடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றும் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (ம-8-86)

## பேச்சுக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எவ்வாறு வலுப்படுத்துவது என்பது வழங்கும் நாடுகளிடையே பொதுவான நிலைப்பாடு ஒன்றைக்காண நாம். முயற்சி செய்வோம்.

தமிழ்ச்செல்வன் இலங்கைக்கு உதவி வழங்குமாறும் விடுதலைப் புலிகளுக்கு நேரடியாக உதவி வழங்குமாறும் கோரினார். ஆயினும், எவ்வளவு உதவி என்பதைக் கூறவில்லை.

உதவித் தேவை மிகப் பெரியது என்பது தெளிவு. மிதிவெடிகள் அகற்றப்படுவது, பாடசாலைகள், மருத்துவமனைகள் கட்டப்படுவது, திகிலடைந்த மக்களைப் பராமரிப்பதற்கான தேவை ஆகியவற்றுக்கு அவசியமிருக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

இலங்கைக்கு 450 கோடி டொலா உதவி வழங்க உதவி வழங்கும் நாடுகள் கடந்த ஆண்டில் உறுதியளித்தன. ஆயினும், சமாதானப் பேச்சுக்களில் ஏற்படும் முன்னேற்றத்தின் அடிப்படையிலேயே அந்த உதவிகள் வழங்கப்படுமென அவை அப்போது நிபந்தனை விதித்திருந்தன.

# மக்கள் வாழ்வை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களைக் குழப்பும் சம்பவங்கள் பல ஏற்படுகின்றன. அப்படி நிகழும் சம்பவங்களில் பட்டாசு கொளுத்தும் கொண்டாட்டமானது பொதுமக்கள் மத்தியில் பெரும் ஆபத்தினையும் பயத்தினையும் ஏற்படுத்துகின்றது.

இது இருதசாப்த காலமாக போர்ச் சூழலுக்குள் வாழ்ந்து, துப்பாக்கி வேட்டுக்களையும் ஷெல் சத்தங்களையும் கேட்டு உளரீதியாகப் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களை மீண்டும் மீண்டும் அந்நினைவுகளுக்குட்படுத்தி பதற்றத்திற்கு உட்படுத்துகின்றது.

இந்த வெடிக் கலாசாரத்துக்குள் ஈர்க்கப்பட்ட எம் இளஞ்சமூகம் மக்களின் பாவனைக்குப் பயன்படுகின்ற வீதிகளில் நின்று திருவிழாக்காலங்களில் பட்டாசுகளைக் கொளுத்தி பெண்கள், வயது வந்தவர்கள், வயது வராதவர்கள் என்ற வேறுபாடின்றிக் அனைவர் காலுக்குள்ளும் வாகனங்களுக்குள்ளும் வீசி அது வெடிக்கின்றபோது மக்கள் அடையும் பதற்றத்தையும் பீதியையும், அதனால் ஏற்படும் விபத்துக்களையும் வேடிக்கை பார்த்து சிரித்து மகிழ்கின்றனர். இச் செயற்பாடு பிறரைத் துன்பப்படுத்துவதன்மூலம் தாம் இன்பமடைதல் (Sadisum) என்ற உளநோயாகவே எனக்குப் படுகின்றது.

பண்டிகைகள் மகிழ்ச்சியாகக் கொண்டாட வேண்டும், என்ற மக்களின் உணர்வுகளைச் சிதைக்கும் வகையில் நடைபெறும் இச்செயற்பாடுகளின் விளைவுகளை பத்திரிகைகள் வாயிலாகவும் வானொலிச் செய்திகளின் ஊடாகவும் நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

பல நாடுகளில் மக்களின் நலன் கருதி வெடிவகைகள் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, இவற்றைக் கருத்திற்கொண்டு இத்தகைய செயற்பாடுகளை குறைப்பதற்கு உங்கள் பிரதேசத்தினூடாக தரைவழியாக வரும் வெடிகளைத் தடை செய்வதன் மூலமோ அல்லது அவற்றிற்கான வரிகளை உயர்வாக விதிப்பதன் மூலமோ அவற்றைக் கட்டுப்படுத்தி மக்களின் நலத்தினை பேண உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்

- என்றுள்ளது. (ம-3)

## மனோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டக்குழுவின் கூட்டம் நேற்று நடைபெறுமென அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்திருந்தார்.

இருந்தபோதும், ஜனாதிபதி தரப்பு இது விடயத்தில் சிறிதும் அலட்டிக் கொள்ளவில்லை எனவும் ஐ.தே.க. வட்டாரங்கள் அதிருப்தி தெரிவித்தன.


## விலைக்கழிவு

எமது வாடிக்கையாளர்களின் நன்மை கருதி, கொழும்பு விலையில் புகைப்படங்கள் பிரதியாக்கம் செய்து தரப்படும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**DIGITAL PRINT - 4R** (டிஜிற்றல் பிறிண்ட் - 4R) ~~15.00~~ 12.75

கொனிக்கா கலர்லாப் & சிறி டிஜிற்றல் கலர்லாப்
இல. 14, ஸ்ரீ வெங்கடேசன் வீதி, பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம். 021 - 222 - 3493
(சி-33013)(30-16-18)

## மேன்மேலும் தொடரட்டும் கல்விச் சிறப்புகள்



பாடசாலை:- யா/புனித ஜோன்பொஸ்கோ
பரீட்சை :- 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில்
புள்ளிகள் :- 131
மு.ஜெகதீசன் மாலினி தம்பதிகளின்
செல்வமகள் ஜெனனி

அவர்களோடு பல மாணவர்களைச் சிறப்பாக சித்திபெற வழிகாட்டிய வித்தியாலய அதிபர் அவர்களுக்கும் அறிவூட்டிய ஆசிரியப்பெருந்தகைகளுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

ஜெனனியின் சிறப்புகள் மேன்மைபெற மனமார வாழ்த்துகின்றோம்.

டாக்டர் A.கமலநாதன் குடும்பம்.
(சி-33025)(18-30-16)

## விற்பனையாளர்கள் தேவை

புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும், பழக விரும்புபவர்களும் நற்சான்றுடன் தொடர்புகொள்ளவும்.

குறிப்பு: அனுபவமுள்ளவர்களுக்கு சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
44,42, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
(27705)(30-16-18)

## LOGIC

பகுதி - II
A/L 2005
ஆரம்பம :- 01.02.2004
ஞாயிறு - 3.00 p.m.
P. கமல்
BRIGHTMAN
நாவலர் வீதி.
(27568)(30-16-18)

## Lingam master - swiss

சுவிஸ் வாழ் தமிழர்களின் முன்னணி ஆசிரியர்
Deutsch - பெரியவர்களுக்கு
Deutsch - பாடசாலை மாணவர்களுக்கு
தொடர்பு:
062 7974164 - 079 3344733,
4665 Oftringen - swiss.


## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 1942 - 11 - 17



மறைவு 2003 - 12 - 30

### திருமதி கமலாம்பிகை கனகசுந்தரம்

2003.12.30 இல் சிவபதமடைந்த எங்கள் குலதெய்வத்தின் இறுதிக்கிரியையில் பங்குபற்றியோருக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை (01.02.2004) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியையிலும் இல்லத்தில் நடைபெறவிருக்கும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

கலட்டி, தும்பளை, பருத்தித்துறை. (சி-33029) (30-16-18)

கனகசுந்தரம், உமா (மகள்).

# மரண அறிவித்தல்கள்

### நாகலிங்கம் வைத்திலிங்கம்

மானிப்பாய், எளுமுள்ளியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் வைத்திலிங்கம் 29.01.2004 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - இளயபிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற செல்லப்பா - சுந்தரம் தம்பதிகளின் மருமகனும் இரத்தினத்தின் பாசமிகு கணவரும் விக்கினேஸ்வரன் (ஜேர்மனி), ஜோதீஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கமலாதேவி, சுசீலாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் தனுஷன், துஷாந்தி, ராதிகா (யாழ். பல்கலைக்கழகம், 3ஆம வருடம்), சுஜிதா, தூஷாந்தன், சபிதா, ஜாதவன் ஆகியோரின் அன்புப பேரனும் காலஞ்சென்ற சுப்பையா, அமரர் சரஸ்வதி, அமரர் கனகரத்தினம், அமரர் நடராசா, பூமணி, கந்தையா (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அமரர் நல்லம்மா, அமரர் அருணாசலம், இராசரத்தினம் (நீர்கொழும்பு), இராமநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (02.02.2004) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள். மானிப்பாய் மேற்கு மானிப்பாய்.* (27883)(38-30-3118)

தகவல்: செ.இராமநாதன் (மைத்துனர்).

### மயிலு பொன்னையா

சங்கானை கிழக்கைப் பிறப்பிடமாகவும் பாரதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மயிலு பொன்னையா நேற்று (30.01.2004) வெள்ளிக்கிழமை அகால மரணமாகிவிட்டார்.

அன்னார் மயிலு - பாக்கியம் தம்பதிகளின் மகனும் சோமு - சின்னக்குட்டியின் மருமகனும் ராசாத்தியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2004) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாரதி வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.* (27887)(30-16-18))

தகவல்: குடும்பத்தினர்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களத் பணிமனையில் 31.01.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org